www.tamilarangam.net







# தாய்நிலம்

களம் 01 தடம் 14 05 – 11.09.2010 இலவசப் பதிப்பு







## சுதந்திரத் தமிழீழம்
### ஒரு தோற்கடிக்கப்பட்ட அரசியல் இலக்கு அல்ல

**விஸ்வநாதன் உருத்திரகுமார்**



சுதந்திரத் தமிழீழம் ஒரு தோற்கடிக்கப்பட்ட அரசியல் இலக்கு அல்ல. பல்லாயிரக் கணக்கான மாவீரர்களதும் மக்களதும் குருதியாலும் ஈகத்தாலும் உயிர்ப்பூட்டப்பட்ட விடுதலைத்தீ, நாம் நமக்கெனத் தமிழீழத் தனியரசினை அமைக்கும்வரை எம் நெஞ்சமெல்லாம் கனன்று கொண்டுதான் இருக்கும். இவ் விடுதலைத்தீயினை அணைத்துவிடுவதற்கு எதிரி பகீரத முயற்சி செய்து வருகின்றமை நாம் அறிந்ததே. எதிரியிடம் இருந்து நம் விடுதலைத்தீயினை பாதுகாப்பதனையும், எமது விடுதலை இலக்கினை முன்னோக்கி நகர்த்துவதனையும் சவால்களாகக் கொண்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது பணிகளை முன்னெடுக்க உறுதி பூண்டுள்ளது.

இவ்வாறு நாடுகடந்த அரசின் இடைக்கால முதன்மை நிறைவேற்றுனர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாவது அரசவையின் இரண்டாவது அமர்வினை செப்டெம்பர் மாத இறுதிப்பகுதியில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பாக அவர் வெளயிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 30-ம் பக்கம்)






## நிருபமா ராவ் பார்வையிட்ட வசதியான தற்காலிக முகாம்

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை சென்றுள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் சிறீலங்கா அரசாங்கத்தின் வழிகாட்டலின் கீழேயே தனது சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளார்

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலர் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களின் பிரச்சினைகளையும், இடம்பெயாந்தோர் முகாம் மக்களின் பிரச்சினைகளையும் ஆராயவுள்ளதாக முதலில்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)



**மனித உரிமைப் போக்கிரிகளும் 12000 போராளிகளும்**






இனியொரு விதி செய்வோம் – அதை எந்நாளும் காப்போம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாய்நிலம்

THAY NILAM

Journal Tamoul Hebdomadaire

Gratuit

158 - 160 Rue Diderot
93500 Pantin.

06 10 53 50 89

Rédacteur:
Siva Sinnapodi

Weekly Tamil Journal

Free Issue

தாய்நிலம்

இலவச வார வெளியீடு

e-mail: thaynilam@yahoo.com

www.thaynilam.com

Inscription encours

## அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் இடதுசாரி பிரதிநிதிகள் நாளை கூடவுள்ளனர்

சிறீலங்காவின் உத்தேச அரசியலமைப்புத் திருத்தம் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் இடதுசாரிப் பிரதிநிதிகள் நாளை கூடவுள்ளனர்.

அரசியலமைப்பிற்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது குறித்து இதன்போது இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரியவருகிறது. அதேவேளை, லங்கா சமசமாஜ கட்சி நாளைய தினம் அந்தக் கட்சியின் தலைமையகத்தில் கூடி அரசியலமைப்புத் திருத்தங்கள் சம்பந்தமாக இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளது.

கட்சியின் மாவட்ட செயற்பாட்டாளர்கள் அழைக்கப்பட்டு தீர்மானம் குறித்து அறிவிக்கப்படும் என லங்கா சமசமாஜ கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வை.ஜி.பத்மசிறி தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான டியூ குணசேகர, திஸ்ஸ வித்தாரன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, பத்மசிறி மற்றும் பிரதியமைச்சர் சந்திரிசிறி கஜதீர ஆகியோர் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் இடதுசாரி பிரதிநிதிகளாவர்.

## நிருபமா ராவ் - மஹிந்த ராஜபக்ஷ சந்திப்பு



இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபம ராவ் இன்று சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இந்தியத் தரப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் காந்தா உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் சிறீலங்கா தரப்பில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

இன்றைய குறுகிய நேர சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை. இதேவேளை இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிசையும் இன்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு சிறீலங்கா வெளிவிவகார அமைச்சரின் இல்லத்தில் இன்று காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

1-ம் பக்கத் தொடர்ச்சி)

## நிருபமா ராவ்...,



தெரிவிக்கப்பட்டது.

நிருபமராவ் செல்லும் இடங்களுக்கெல்லாம் ஊடகவியலாளர்களும் முதலில் அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் செல்லும்போது ஊடகவியலாளர்கள் மற்றும் செய்தியாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

அதுமாத்திரமின்றி இந்திய வெளியுறவுச் செயலாளர் தலைமையிலான குழுவினர் மற்றும் அதிகாரிகள் தவிர பொதுமக்கள் கூட உள்ளே செல்ல அனுதிக்கப்படவுமில்லை. பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் மெனிக்பாம் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட நிருபமா ராவ் சிறீலங்கா படையினரும் அதிகாரிகளும் காண்பித்த ஒரு சில முகாம்களையே பார்வையிட்டுள்ளனர்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் மெனிக்பாம் முகாமில் இருக்கின்ற முகாம்களில் 'வலையம் பூச்சியம்' எனப்படும் கதிர்காமர் முகாமை மாத்திரமே பார்வையிட்டுள்ளார். இந்த முகாமானது சிறீலங்கா அரசாங்கத்தினால் தகரம் மற்றும் கிடுகு என்பவற்றினால் இருப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ள முகாமாகும். இந்த முகாமிலேயே குறிப்பிட்டளவு வசதிகள் நிறைவுசெய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர ஆனந்தகுமாரசுவாமி (வலையம் 01), இராமநாதன் (வலையம் 02), அருணாச்சலாம் (வலையம் 03) மற்றும் வலையம் 04 என்ற நிலையங்களும் காணப்படுகின்றன.

இந்த நிலையங்களில் தகரத்தினால் அமைக்கப்பட்ட அரைகுறை தங்குமிடங்கள், மற்றும் கூடாராங்களினால் அமைக்கப்பட்ட மிகவும் மோசமான நிலையிலான தங்குமிடங்களாகக் காணப்படுகின்றன.

இந்த முகாம்களிலேயே மக்கள் தமது அடிப்படைவசதிகளையே நிறைவுசெய்துகொள்ள முடியாதளவிற்கு சிரமத்தில் வாழ்கின்றனர். எனவே இவ்வாறான முகாம்களைக் காண்பிக்காமல் தமக்குச் சார்பான, சகலவசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள கதிர்காமர் முகாமை காண்பித்ததன் மூலம் சிறீலங்கா அரசாங்கம், முகாம் மக்களின் உண்மையான நிலைமையினை இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவிடம் மறைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் முகாம் மக்கள் தொடர்பில் இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் வெளியிடும் தகவல்கள் அவரின் கண்ணால் பார்க்கக்கூடியதாகவிருந்த சகல வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்தி வைத்துள்ள கதிர்காமர் நிலையத்தினை அடிப்படையாகக் கொண்டதே ஒழிய சகல முகாம் மக்களின் நிலைமையினையும் பிரதிபலிப்பதன்று என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னரும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவரும் சிறீலங்கா அரசாங்கத்தினால் காண்பிக்கப்பட்ட முகாம்களை மாத்திரம் பார்வையிட்டு சிறீலங்கா அரசிற்கு ஆதரவான அறிக்கையைச் சமர்ப்பித்ததாக குறிப்பிட்ட ஜே.வி.பி இது போன்றே இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவின் விஜயமும் அமைந்து விடக்கூடாது என்று கூறியிருந்தமையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

EURO RESTO SERVICE





உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு அனைத்து வகையான பிளாஸ்ரிக் பைகளையும் மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

33 Bis, Rue de Chateau London, 75010 Paris
Tél: 01 40 36 00 09 / Fax: 09 71 70 31 25
Port: 06 68 67 15 55 / e-mail : euroresto@gmail.com
M°: Stalingrad / La Chapelle

Poissonnerie de YARL DEVI

யாழ்தேவி மீனவன்



இலங்கை இந்திய மீன்வகைகள் அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

10, rue Cail - 75010 Paris
Tél: 01.42.05.18.05 - Port: 06 09 75 27 52
M°: La Chapelle ou Gare du Nord



பாண்டிச்சேரி ஸ்ரீ லஷ்சுமி ஜுவலரி

நீங்கள் வாங்கும் நகைகளுக்கு
4 தவணை முறையில் பணம் செலுத்தலாம்.

4 Fois Sans Frais

916 (KDM) என்ற உத்தரவாதம் தரப்படும்

செவ்வாய்கிழமை விடுமுறை

4 Rue Perdonnet - 75010 Paris
Tél: 01 40 05 00 00
Email: pslj36@yahoo.fr - Web: www.srilakshmi.in





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



எதிரியால் ஆக்கிரமிக்கபட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.

*- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.*

# தாய்நிலம்

## விடுதலைப்புலிகளை வேரறுக்க சதியா?

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வரலாறு என்பது இலகுவில் அழிந்துபோகக் கூடிய காகிதத்தில் எழுதப்பட்ட அல்லது கணனியில் தட்டச்சு செய்யப்பட்ட கற்பிதமான ஒன்றல்ல.

அது 32 ஆயிரத்துக்கும் அதிகமான மாவிரர்களதும் அதைவிட அதிகமான போராளிகளினதும் அப்பழுக்கில்லாத ஈகத்தினாலும் ஈழப்போராட்டத்தின் வலியை வேதனையை பாரத்தை சுமந்த இலட்சக்கணக்கான மக்களின் உண்மையான அர்ப்பணிப்பினாலும் பங்களிப்பினாலும் காலப் பெருவெளியில் பதியப்பட்ட ஒன்றாகும்.

இந்த வரலாற்றைப் பதிவதற்கு ஆயிரமாயிரம் முகமறிந்த வீரர்களுடன் ஆயிரமாயிரம் முகமறியா வீரர்களும் தமது பங்களிப்பை நல்கியுள்ளனர். குறிப்பாக விடுதலைப்புலிகளிடம் சிறந்த புலனாய்வுக் கட்டமைப்புகள் இருந்தன. இந்தப் புலனாய்வுக் கட்டமைப்புகள் விடுதலைப்புலிகளின் பல்வேறு வெற்றிகளுக்கு - இராணுவச் சாதனைகளுக்கு அடித்தளமாக இருந்தன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்தப் புலனாய்வுக் கட்டமைப்புக்களில் பணிபுரிந்த எந்தவொரு போராளியும் தங்களை பகிரங்கமாக இனங்காட்டியதும் கிடையாது. தங்களுடைய வேலைகளை ஊடகங்களில் பகிரங்கப்படுத்தியதும் கிடையாது.

ஆனால் கடந்த வாரம் விடுதலைப்புலிகளின் பெயரைப் பயன்படுத்தும் சிலர் தாங்கள் சிலரது தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டதாக சில ஊடகங்களில் விடுதலைப்புலிகள் இயக்க மரபுக்கு மாறாக பரபரப்புச் செய்திகளை வெளியிட்டிருந்தனர்.

இந்தப் பரபரப்புச் செய்திகளின் உண்மை மற்றும் நம்பகத் தன்மைக்கு அப்பால் விடுதலைப்புலிகள் இயக்கத்தை அரசியல் ரீதியாகக் கூட தலையெடுக்க விடக்கூடாது என்கின்ற ஒரு சதிப்பின்னணி இதற்குப் பின்னால் இருப்பதாகவே எமக்குப் படுகிறது.

பொதுவான சர்வதேச நடைமுறையின்படி பல நாடுகள் தங்களது அரசியல், பொருளாதார, இராணுவ நலன்களுக்காக ஏனைய நாடுகளை உளவு பார்ப்பது வழக்கமாகும். இதற்காக பல நாடுகள் தனியான வெளிநாட்டு உளவுத்துறைக் கட்டமைப்புக்களை வைத்திருக்கின்றன.

இந்த உளவுத்துறை கட்டமைப்புகள் ஒவ்வொரு நாடுகளுக்கும் உரிய இராஜந்திர வலைப்பின்னலுக்குள் நுழைந்து தங்களது உளவு நடவடிக்கைகளை மேற்கொள்வது வழக்கமாகும்.

ஆனால் இந்த உளவு நடவடிக்கை கண்டுபிடிக்கப்படும் போது அல்லது பகிரங்கப்படுத்தப்படும் போது அந்த நடவடிக்கையில் ஈடுபட்டவர் ஒரு இராஜந்திர சேவையைச் சேர்ந்தவராக இருந்தால் அவரது இராஜதந்திர அந்தஸ்த்து பறிக்கப்பட்டு அவர் அவரது சொந்த நாட்டுக்கு நாடுகடத்தப்படுவார். சாதாரண குடிமகனாக இருந்தால் அவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு அதி உயர்ந்தபட்ச தண்டனைக்குள்ளாக்கப்படுவார். இவ்வறான சம்பவங்கள் நாடுகளுக்கு இடையிலான மோதல்கள் மற்றும் போர்களை உண்டாக்கிய வரலாறுகள் நிறைய இருக்கின்றன.

உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறி பல விடுதலை இயக்கங்களை மேலாதிக்க சக்திகள் திட்டமிட்டு அழித்த வரலாறுகளும் நிறைய இருக்கின்றன.

விடுதலைப்புலிகளை இந்த மேலாதிக்க சக்திகள் தங்களது பிராந்திய நலன்களுக்காக பயங்கரவாதப் பட்டியலில் இட்டிருக்கும் நிலையில் நாங்கள் உளவுப்பிரிவு நடத்துகிறோம், புலம்பெயர்ந்த நாடுகளில் வதிபவர்களுடைய தொலைபேசிகளை ஒட்டுக்கேட்கிறோம் என்று அறிக்கை விடுவதும் காதில் பூச்சுற்றுவதும் இதைச் செய்பவர்களைச் சேர்ந்தவர்களுக்கு சாகசம் மிக்கதாகவும் பரபரப்பானதாகவும் இருக்கலாம். ஆனால் விடுதலைப்புலிகளுக்காக புலத்தில் தங்களை அர்ப்பணித்து வேலை செய்த உண்மையான பல செயற்பாட்டாளர்களுக்கும் கடந்த வருடம் இடம்பெற்ற வன்னிப் பேரவலத்தில் இருந்து உயிர் தப்பி புலத்தில் தஞ்மடைந்து அகதி அந்தஸ்த்துக்காகக் காத்திருக்கும் பல நூற்றுக் கணக்கான முன்னாள் போராளிகள், மாவிரர் குடும்பங்கள் மற்றும் மக்களுக்கு இது பாரிய தீங்கை விளைவிக்கும் என்பதையும் புலம்பெயர்ந்த தமிழர்களை விடுதலைப்புலிகள் என்ற அடையாளத்தின் கீழ் ஒன்றிணையாதபடி இது தடுக்கும் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகள், இவ்வாறான போலிப் புலனாய்வு அமைப்புக்களுக்கும் தங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதையும் புலம்பெயர்ந்த நாடுகளின் மனித உரிமைச் சட்டங்களை மீறும் வகையில் தாங்கள் புலம்பெயர்ந்த மண்ணில் எந்தவித உளவுச் செயற்பாடுகளிலும் ஈடுபடவதில்லை என்பதையும் மேற்குலகிற்கு தெளிவுபடுத்தவேண்டும்.

## எம்.வி. சன் சீ கப்பல் மாலுமிகள் உட்பட 36 பேர் புலிகள் என சந்தேகம் தனியாக தடுத்து வைப்பு



சன் சீ கப்பலின் மாலுமிகள் 24 பேர் உட்பட 36 பேர் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என கனேடிய இரகசிய பொலிஸ் கண்டுபிடித்துள்ளதாகவும் ஆகவே இவர்களை தனியாக அடைத்து வைத்துள்ளதாகவும் சீ நியூஸ் தெரிவித்துள்ளது. இந்த 36 பேரில் கப்டன் வினோத் அவர்களும் இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

## சாவகச்சேரியில் நகைகள் திருட்டு புலனாய்வுப் பிரிவினர் எனக்கூறி கைவரிசை

சாவகச்சேரிப் பகுதியில் புலனாய்வுப் பிரிவினர் எனக்கூறி வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் 12 பவுண் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சாவகச்சேரி ஏ-9 வீதிக்கு சமீபமாக உள்ள தொடரூந்து வீதியில் உள்ள வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் தம்மை புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி, உங்களிடம் கள்ள நகைகள் இருப்பதாகவும், அதனை சோதனை செய்யவேண்டும் எனவும் நகைகளை எடுத்துக்கொண்டு தம்முடன் வருமாறும் அழைத்துள்ளனர்.

பின்னர் அவர்கள் தாம் வந்த மோட்டார் சைக்கிளில் வீட்டு உரிமையாளரான வி.சதானந்தனை மாத்திரம் அழைத்துக்கொண்டு சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கல்வயல் பகுதியில் உள்ள இடமொன்றில் அவரை இறக்கிவிட்டு அவரிடமிருந்த தாலிக்கொடி, காப்பு உட்பட 12 பவுண் நகைகளை அபகரித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். நகைகளைப் பறிகொடுத்த சதானந்தன் தனங்கிளப்பு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியலமைப்பு திருத்தத்துக்கு எதிராக ஜே.வி.பி. பிரச்சார நடவடிக்கை

அரசாங்கத்தின் உத்தேச அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக மக்களைத் தெளிவுபடுத்தும் முகமாக நாடு முழுவதும் இன்று வியாழக்கிழமை 20 இலட்சம் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கவுள்ளதாக ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒருவர் இரு தடவைகளே வகிக்க முடியுமென தற்போதைய அரசியலமைப்பில் உள்ளது.

எனவே அப்பதவியை வகிக்கக் கூடிய தடவைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்காகக் கொண்டு வரப்படும் அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக மக்களைத் தெளிவுபடுத்தும் முகமாகவே இந்தத் துண்டுப்பிரசுர விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஜே.வி.பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் இன்று இந்தத் துண்டுப்பிரசுர விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், இதன் பிரதான நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக நடைபெறுமென்றும் இதில் ஜே.வி.பி.தலைவர்கள் பங்குகொள்வார்கள் என்றும் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

## சிறீலங்காவுக்கான புதிய பிரித்தானிய உயர்ஸ்தானிகராக ஜோன் ரெக்கின்

சிறீலங்காவுக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராக ஜோன் ரெக்கின் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பிரித்தானிய உயர்ஸ்தானிகராக உள்ள பீட்டர் ஹெய்ஸுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஜோன் ரெக்கின் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் பதவியேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



# பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்காத நிருபமா சம்பிரதாயபூர்மாக நடந்த வடபகுதி பயணம்

கடந்த வருடம் இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் தற்போதைய நிலைமைகளை கண்டறிவதற்காக மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்பட்ட இந்திய வெளி விவகார செயலர் நிருபமா ராவின் முதல் நாள் வடபகுதிப் பயணம், அதிகாரிகள், பிரமுகர்களுடனான கலந்துரையாடலாகவே முடிந்து போயுள்ளது. மீளக்குடியமர்ந்த மக்களின் நிலை குறித்து அவர் நேரில் பார்வையிடாமலேயே கொழும்பு திரும்பியுள்ளார்.



மீள்குடியமர்வு, இந்தியாவின் நிவாரண உதவிகள் குறித்து மீளாய்வு செய்வதற்கான நான்கு நாள் பயணமாக சிறிலங்காவுக்குச் சென்ற இந்திய வெளிவிவகார செயலர் நிருபமா ராவ் நேற்று வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தார்.

ஒரே நாளில் அவர் மூன்று மாவட்டங்களினதும் நிலைமைகள் குறித்து அதிகாரிகளுடன் மட்டுமே கலந்துரையாடினார்.

இதன்காரணமாக அவரது முதல் நாள் பயணம் அரச அதிகாரிகளுடனான சந்திப்பாகவே முடிந்துள்ளது என்றும், மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு செல்லவில்லை என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

வவுனியாவுக்கு நேற்றுக் காலை சென்ற நிருபமா ராவ் இராணுவ அதிகாரிகளுடன் மெனிக் பாம் முகாமுக்குக்கும் பின்னர், மகிழங்குளம் பகுதியில் இந்திய உதவியுடன் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளையும் பார்வையிட்டார்.

மெனிக் பாம் முகாமுக்குச் சென்றபோது அவருடன் ஊடகவியலாளர்கள் எவரும் உள்ளே செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இதையடுத்து காலை 11.30 மணியளவில் வவுனியா அரச செயலகத்துக்கு சென்ற நிருபமா ராவ் அங்கு அரச அதிபருடன் பேச்சு நடத்தி விட்டு கிளிநொச்சிக்குப் புறப்பட்டார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் அரச அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியும் உடனிருந்தார்.

கிளிநொச்சி அரச செயலக சந்திப்பை முடித்துக்கொண்டு வெளியே வந்த இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவை, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் குறித்து எடுத்துக் கூறினார்.

குறுகிய நேரமே அதுபற்றி எடுத்துக்கூறுவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி அரச செயலகச் சந்திப்பை முடித்துக் கொண்ட அவர் அங்கிருந்து உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மீளக்குடியமர்ந்த பகுதிகளுக்கு நேரில் சென்று நிருபமா ராவ் பார்வையிடவுள்ளதாக முன்னதாகக் கூறப்பட்டிருந்தது.

ஆனால் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என்று மூன்று மாவட்டங்களுக்கும் சென்ற அவர் அரச தரப்பு ஏற்பாடு செய்த சந்திப்புக்களில் மட்டுமே கலந்துகொண்டார். அவ் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளுக்குச் செல்லவோ அவர்களின் நிலைமைகள் குறித்துக் கேட்டறியவோ இல்லை.

இதேவேளை, இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் இன்று முல்லைத்தீவுக்கு பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனத் தூதுக்குழுவினர் 200 பேர் கொழும்பு சென்றனர்

சீனாவின் யூனான் மாகாண ஆளுநர் கின் குவான்றொங்க் தலைமையில் இருநூறு பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று நேற்று கொழும்புக்குச் சென்றது

மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தலைமையிலான குழுவினர் சீனப் பிரதிநிகளை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றனர். கொழும்பில் நடைபெறவிருக்கும் வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக வருகை தந்துள்ள இக்குழுவினர் சிறீலங்கா பிரதமர் டி.எம்.ஜயரட்னவுடன் இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை மேலும் மேம்படுத்தல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவிருப்பதாக சிறீலங்கா பிரதமர் அலுவலக அதிகாரியொருவர் கூறினார்.

மின்சக்தி, எரிசக்தி, உயர் கல்வி, விவசாயம், தொலைத் தொடர்பு சேவை ஆகிய துறைகள் தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட விருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சீன ஆளுநர் தலைமையிலான குழுவினர் சிறீலங்கா பிரதமரை விசும்பாயவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர் என அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.











தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




*Quality Rice from a Traditional Source.*




Veetee Supreme Basmati is sown and carefully nurtured in the foothills of the Himalayas.
A distinctive aromatic rice with its own exquisite flavour and delicate texture.

Veetee Rice Limited, Veetee House, Neptune Close, Medway City Estate, Rochester, Kent ME2 4LT.

Tel: 01634 290 092

VEETEE
Discover The World's Finest Rices

www.veetee.com




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மாவோயிஸ்டுகளின் காலக்கெடு மீண்டும் நீட்டிப்பு போலீஸார் பாதுகாப்புடன் இருப்பதாகவும் தகவல்

பீகாரில் கடத்தப்பட்ட போலீஸாரை விடுவிக்க விதித்திக்கப்பட்ட காலக்கெடுவை மாவோயிஸ்டுகள் இன்று மாலை வரை நீட்டிப்பதாக அறிவித்துள்ளன. மேலும் 4 போலீஸாரும் பாதுகாப்பாக இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பீகாரின் லகிசாராய் மாவட்டத்தின் கஜ்ரா மலைப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை, மாவோயிஸ்டுகள் திடீர் தாக்குதல் நடத்தியதில் 7 போலீஸார் கொல்லப்பட்டனர். அப்போது 4 போலீஸாரை, மாவோயிஸ்டுகள் கடத்திச் சென்றனர். இந்நிலையில், பீகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 8 மாவோயிஸ்டுகளை புதன்கிழமை மாலைக்குள் விடுவித்தால் மட்டுமே கடத்தப்பட்ட போலீஸாரை விடுவிக்க முடியும் என்று மாவோயிஸ்டுகள் கெடு விதித்திருந்தனர்.

கெடு முடிந்த பின்னரும் சிறையிலிருந்த மாவோயிஸ்டுகள் விடுவிக்கப்படாத நிலையில், அவர்களை விடுவிக்க இன்று காலை பத்து மணி வரை அவகாசம் நீட்டிப்பதாக மாவோயிஸ்டுகள் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், இந்த கெடுவிற்கும் அரசு முன்வராததால், தற்போது தங்களது காலக்கெடுவை இன்று மாலை வரை நீட்டித்துள்ளதாகவும், கடத்தப்பட்ட 4 போலீஸாரும் பத்திரமாக இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனிடையே, கடத்தப்பட்ட போலீஸார் 4 பேரும் இன்று மாலைக்குள் விடுவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ்நாட்டில் பிரபாகரன் படம் விற்பது குற்றமா? தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் நோட்டீஸ்

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் பெரியார் திராவிடக்கழகக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் பல்லடத்தைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவர் புத்தகங்களையும், படங்களையும் விற்றார். அதில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் படமும் இருந்தது.

இதையடுத்து அவர் மீது போலீசார் சட்டவிரோத தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். ஜாமீனில் வெளியே வந்த அவர் தன் மீதான வழக்கை ரத்து செய்யக்கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

அதில், 'நான் பிரபாகரனின் படத்தை விற்றதால் தீவிரவாதி அல்ல. எந்த குற்ற எண்ணத்துடனும் நான் செயல்படவில்லை. என் மீது வழக்கு போடப்பட்டது தவறு. அதை ரத்து செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

இந்த மனு நீதிபதி வி.தனபாலன் முன் விசாரணைக்கு வந்தது. சுப்பிரமணி சார்பில் வக்கீல்கள் துரைசாமி, இளங்கோவன் ஆகியோர் வாதிட்டனர்.

தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு தார்மீக ஆதரவு அளிப்பது குற்றம் ஆகாது என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, பிரபாகரன் படத்தை விற்றதில் எந்த தவறும் இல்லை. எனவே அவர் மீதான வழக்கை ரத்துசெய்ய வேண்டும் என்று இரு வக்கீல்களும் கூறினர்.

இந்த வழக்கிற்கு தமிழ்நாடு அரசு 2 வாரத்தில் பதில் அளிக்க வேண்டும் என நீதிபதி நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளார்.

# அமெரிக்காவில் அதிசயம் 40-வது மாடியில் இருந்து விழுந்தவர் உயிர் பிழைத்தார்



அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தவர் தாமஸ் மகில் (வயது 40). சில பிரச்சினைகளால் மனவேதனையில் இருந்த அவர் தற்கொலை செய்ய முடிவு எடுத்தார்.

இதற்காக தனது குடியிருப்பில் 40-வது மாடி உச்சிக்கு சென்று அங்கிருந்து கீழே குதித்தார். ஆனாலும் அவர் அதிசயமாக உயிர் பிழைத்து விட்டார்.

கட்டிடத்துக்கு கீழே ஏராளமான கார்கள் நிறுத்தப்பட்டு இருந்தன. அதில் ஒரு கார் மேற்கூரை இல்லாமல் திறந்த அமைப்பில் இருந்தது. அந்த காரின் பின் இருக்கையில் அவர் விழுந்தார். இதனால் அவர் காயத்துடன் தப்பி விட்டார். ஆனாலும் அவருடைய கால் எலும்பு உடைந்து விட்டது. இதற்காக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# சீனாவின் நடவடிக்கைகளை இந்தியா கண்காணிக்கிறது!

**– எஸ்.எம்.கிருஸ்ணா**



இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா அதிகமாக ஆர்வம் கொண்டிருப்பதை இந்தியா தற்போது உணர்ந்திருப்பதாக அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வரும் சம்பவம் குறித்து இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையில் தி.மு.க உறுப்பினர் டி.ஆர்.பாலு கொண்டு வந்த கவனயீர்ப்புத் தீர்மானம் தொடர்பில் பதிலளித்த போதே இவர் இது குறித்து கூறினார்.

2000 ஆம் ஆண்டு முதல் இது வரை 206 முறை இந்திய மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தியபோது 17 மீனவர்கள் உயிரிழந்திருப்பதாகவும், 2,000க்கும் மேற்பட்ட மீனவர்கள் காயம் அடைந்திருப்பதாகவும் பாலு சுட்டிக்காட்டினார்.

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீளப் பெறவும், தமிழக மீனவர்களை பாதுகாக்க கடலோரக் காவல்படை ரோந்தை அதிகரிக்க வேண்டும் என்றும் பாலு கோரினார். அத்துடன், இந்திய, தமிழக, சிறிலங்கா அரசுகள் மற்றும் மீனவர்களுக்கு இடையே நேரடித் தொடர்பு வசதியை ஏற்படுத்தி இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல வேண்டும் எனவும் டி.ஆர்.பாலு வலியுறுத்தினார்.

அ.தி.மு.க. உறுப்பினர் தம்பிதுரை உட்பட தமிழகத்தின் பிற கட்சி உறுப்பினர்களும் இப் பிரச்சினையை எழுப்பியதோடு, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் நடமாட்டம் அதிகரித்து வருவதாகக் கவலை தெரிவித்தனர்.

இந் நிலையில், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா அளவுக்கு அதிகமாக அக்கறை காட்டி வருவதை இந்தியா உணர்ந்திருப்பதாகத் தெரிவித்த கிருஸ்ணா, சீனாவின் நோக்கத்தை நுணுக்கமாகக் கண்காணிப்பதாகவும், இந்தியப் பெருங்கடலில் நடக்கும் மாற்றங்களையும் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவின் எல்லையைப் பாதுகாக்கவும், இந்திய மீனவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இந்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

கச்சத்தீவுப் பிரச்சினையைப் பொருத்தவரை, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் அது சிறிலங்கா அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையில், அந்த ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்ய முடியாது என்று கிருஸ்ணா தெரிவித்தார்.

அதேவேளை, கச்சத்தீவில் இந்திய மீனவர்கள் தங்கள் வலைகளை உலர்த்துதல் உள்ளிட்ட சலுகைகளை தொடர்ந்து அனுபவிக்கலாம் என்றும் அது தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன், நிருபமா ராவ் தற்போது கொழும்பில் உள்ள நிலையில், இப் பிரச்சினையையும் சிறிலங்கா அரசிடம் எடுத்துக் கூறுவார் என்றும் கிருஸ்ணா தெரிவித்தார்.

Cafe BHARATH
67, Rue Louis Blanc - 75010 Paris -Tél: 01 58 20 06 20
மனம் விரும்பும் சுவை
தினமும் புதிய இலங்கை, இந்திய நாட்டு உணவுவகைகள்
ஒவ்வொருவரின் விருப்பத்திற்கும் ஏற்ற உணவு வகைகள்
அனைத்து வித சைவ, அசைவ உணவுகளும் கிடைக்கும்
கபே பாரத் மற்றும் பாரத் உணவகம்
உங்கள் இல்லங்களின் பெருவிழாக்களில் எங்களின் அறுசுவை உணவு வகைகள்
Restaurant BHARATH
51, Rue Louis Blanc - 75010 Paris -Tél: 01 20 09 35 84
Metro: La Chapelle et Gare du Nord



www.tamilarangam.net



# ஆந்திரா அரச வருவாயில் பாதி திருப்பதி கோவில் வருமானம்

## ரூ.52 ஆயிரம் கோடி நகைகளுக்கு காப்புறுதி



உலகின் பணக்கார கடவுளான திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தபடி உள்ளது. தினமும் சராசரியாக திருமலைக்கு சுமார் 70 ஆயிரம் பக்தர்கள் வருகிறார்கள். விடுமுறை மற்றும் விசேட நாட்களில் வரும் பக்தர்களின் எண்ணிக்கை லட்சத்தைத் தாண்டும்.

திருப்பதிக்குச் செல்லும் பக்தர்கள் பணம் மற்றும் தங்க நகைகளை உண்டியலில் போட்டு காணிக்கை செலுத்தத் தவறுவதில்லை. பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று உண்டியலில் பணம் போடும் ஒரே திவ்யதேசம் திருமலைதான். இதனால் திருமலையில் தினமும் பல லட்சத்துக்கு தங்கமும், பணமும் குவிகிறது.

தற்போது திருப்பதி கோவிலில் சுமார் 20 தொன் தங்க, வைர நகைகள் உள்ளன. 12-ம் நூற்றாண்டு காலத்தில் கோவிலுக்கு மன்னர்களும், பணக்காரர்களும் அளித்த பல அரிய வகை நகைகளும் உள்ளன. ஏராளமான அரிய வகை நகைகள் உருக்கப்பட்டு விட்டன.

சமீபத்தில் இது தொடர்பாக சர்ச்சை எழுந்ததைத் தொடர்ந்து திருப்பதி கோவிலில் உள்ள தங்க நகைகள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டன. அப்போது திருப்பதி கோவில் நகைகள் மற்றும் சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.52 ஆயிரம் கோடி என்று தெரிய வந்தது.

திருப்பதி கோவிலில் உள்ள நகைகளில் பல இன்னும் கணக்கில் சேரவில்லை என்று கூறப்படுகிறது. சமீப காலமாக தங்கத்தின் மதிப்பும் உயர்ந்துள்ளது. எனவே ஏழுமலையானின் தங்கம் மதிப்பு ரூ.60 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக இருக்கும் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

இது ஆந்திர மாநில நிதி நிலை அறிக்கையில் பாதி அளவாகக் கருதப்படுகிறது. திருப்பதி கோவில் தங்க நகைகள் அனைத்தும் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. ஏழுமலையானுக்கு சூட்டப்படும் கிரீடங்கள் மட்டுமே ஏராளமாக உள்ளன.

இந்த தங்க நகைகள் மற்றும் அரிய வகை கிரீடங்கள் அனைத்தையும் இன்சூர் செய்ய திருமலை திருப்பதி தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது. ஒரே இன்சூரன்ஸ் நிறுவனமே இந்த நகைகளை இன்சூர் பெற இயலாது என்று கூறப்படுகிறது.

எனவே மாநில அரசு இன்சூரன்ஸ் நிறுவனங்களையும் சேர்த்துக் கொள்ள திருமலை திருப்பதி தேவஸ்தானம் தீர்மானித்துள்ளது.

# மரணத்தை வென்று மீண்டுள்ளேன் காஸ்ட்ரோ உற்சாகப் பேட்டி

மரணத்தின் வாயிலைத் தொட்டு விட்டு திரும்பி வந்திருக்கிறேன் என்று கியூபாவின் முன்னாள் அதிபரும், முதுபெரும் கம்யூனிஸ தலைவருமான பிடல் காஸ்ட்ரோ (84) உணர்ச்சி ததும்ப தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் என் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டபோது பிழைப்பேனோ, மாட்டேனோ என்று நினைத்தேன். ஆனால் நான் மரணத்தை வென்றுவிட்டேன் என்று மெக்ஸிகோ நாட்டின் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பிடல் காஸ்ட்ரோ கூறியுள்ளார்.

அந்த பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

'எனக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டபோது பிழைப்பேனா, இல்லை இறந்திடுவேனா, மருத்துவர்கள் என்னை காப்பாற்றிவிடுவார்களா, இல்லை காப்பாற்ற முடியாது என்று கைவிட்டுவிடுவார்களா என்றெல்லாம் எனக்குள் நான் எத்தனையோ கேள்விகளைக் கேட்டுக்கொண்டேன். ஆனால் நான் குணமடைந்து விட்டேன்.

உடல்நிலை சற்றுத் தேறியவுடன் மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு வந்தேன். அதன் பிறகு நான் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப கடுமையாகப் போராடினேன். உடல்நலக் குறைவால் எனது கால்களும், கைகளும் வலுவிழந்து இருந்தன. இதனால் எனது கால்களையும், கைகளையும் பழையபடி



கொண்டுவர முயற்சித்தேன்.

எழுந்து நிற்கவே படாதபாடு பட்டேன். என்னால் முடியும் என்ற நம்பிக்கையுடன் நடக்க ஆரம்பித்தேன். எழுதி எழுதி கைகளை சரி செய்தேன். என் உடலையும், உள்ளத்தையும் மீண்டும் புத்துணர்ச்சியுடன் வைத்துக்கொண்டேன். இதனால் தான் என்னால் ஓரளவுக்காவது பழைய நிலைக்கு திரும்ப முடிந்தது.

உடல் நலம் பாதிக்கப்பட்டபோது உடல் எடை வெகுவாகக் குறைந்தது. தற்போது உடல் எடை அதிகரித்து 85 கிலோவாக உள்ளது. எனினும் உணவு, மருந்து உட்கொள்வதில் மருத்துவர் ஆலோசனையை தவறாது கடைப்பிடிக்கிறேன்.

எனது உடல்நிலை குறித்து எனக்குள் எழுந்த கேள்விகளையும், சந்தேகங்களையும் மருத்துவர்களிடம் கேட்டுக் கேட்டு தற்போது எனக்கு மருத்துவம் தொடர்பாக நிறைய விடயங்கள் தெரியும். சுருக்கமாகச் சொன்னால் நான் பட்டம் பெறாத மருத்துவராகி விட்டேன் என்று அவர் கூறினார்.

இந்தப் பேட்டியின் போது பிடல் காஸ்ட்ரோ உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் காணப்பட்டார். கேட்கும் கேள்விகளுக்கு நகைச்சுவையாக பதிலளித்து எங்கள் அனைவரையும் சிரிக்க வைத்தார் என்று அவரைப் பேட்டி கண்ட பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கியூபாவை ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக ஆண்டவர் கம்யூனிஸ தலைவர் பிடல் காஸ்ட்ரோ. கடந்த 2006-ம் ஆண்டு மத்தியில் அவருக்கு திடீரென இரைப்பையில் கோளாறு ஏற்பட்டது. மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருந்த காஸ்ட்ரோ, மரண வாயிலைத் தொட்டுத் திரும்பினார்.

காஸ்ட்ரோவிற்கு உடல்நிலை பாதிக்கப்பட்டபோது அவரை உயிராய் நேசிக்கும் கியூபா மக்கள் கவலையில் ஆழ்ந்தனர். எனினும் அவரின் உடல்நிலை படிப்படியாகத் தேறியது.

இனியும் தன்னால் அதிபர் பதவியில் சிறப்பாகச் செயல்பட முடியாது என்று நினைத்த அவர் அதிபர் பதவியை தனது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோவிடம் கடந்த 2008-ம் ஆண்டு ஒப்படைத்தார். தற்போது அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை மட்டும் வழங்கி வருகிறார்.

# 1600 தொன் எடையுள்ள தங்கப்புதையல் கண்டுபிடிப்பு



ரஷ்யாவின் கடைசி மன்னர் சார் குடும்பத்திற்குச் சொந்தமான 1600 தொன் எடையுள்ள தங்கப்புதையல் சைபீரியாவில் உள்ள பைகால் ஏரியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யப் புரட்சி நடைபெற்ற காலத்தில் சைபீரியாவில் இராணுவ அட்மிரலாக இருந்த அலெக்ஸாண்டர் கோல்சோக் என்பவர் சார் மன்னரிடமிருந்த பல ஆயிரம் கோடி மதிப்பிலான 1600 தொன் தங்கப்புதையலை சைபீரியாவில் உள்ள உலகின் ஆழமான ஏரி என அழைக்கப்படும் பைகால் ஏரியில் மறைத்து வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அண்மையில் கைப்பற்றப்பட்ட அலெக்ஸாண்டர் கோல்சோக்கின் ஆவணங்களை அடிப்படையாக வைத்து ரஷ்யா அரசு மிர்-2 என்ற நீர்மூழ்கிக்கப்பல் மூலம் ஆராய்ச்சி மேற்கொண்டதில் இந்தத் தங்கப்புதையலைக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



www.tamilarangam.net



# இறந்ததாக கூறப்பட்ட குழந்தை

## தாயின் அரவணைப்பால் உயிர் பிழைத்த அதிசயம்





பிறந்த அடுத்த சில நிமிடங்களிலேயே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட குழந்தை, தாயின் கதகதப்பான அரவணைப்பாலும், மெல்லிய விசும்பலாலும் உயிர் பிழைத்த அதிசயம் அவுஸ்திரேலியாவில் நடந்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரைச் சேர்ந்தவர் டேவிட். இவரது மனைவி கேட், ஏழுமாத கர்ப்பமாக இருந்தார். தங்களுக்கு ஆண் குழந்தை பிறந்தால், அந்த குழந்தைக்கு ஜேமி என, பெயர் சூட்டவும் முடிவு செய்தனர். கேட்டுக்கு சமீபத்தில் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு ஆழகான ஆண் குழந்தை பிறந்தது. ஆனால், அந்தக் குழந்தையிடம் இருந்து எந்த அசைவும் இல்லை. மருத்துவர்கள் சில சிகிச்சைகளை அளித்த போதும் குழந்தையின் உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லாததால் அது இறந்துவிட்டதாக அவர்கள் கூறினர். இதைக் கேட்ட டேவிட்டும், கேட்டும் அழுது புலம்பினர்.

தன் பச்சிளம் குழந்தை இறந்துவிட்டதை நம்ப முடியாத கேட், குழந்தையை மார்போடு கட்டி அணைத்துக் கொண்டு, முகத்தோடு முகம் வைத்து கொஞ்சியபடி கண்ணீர் வடித்தார். டேவிட்டும் அழுதுகொண்டே, குழந்தையின் தலையை மென்மையாகத் தடவிக் கொடுத்தார். இரண்டு மணி நேரமாக இந்த பாசப் போராட்டம் நீடித்தது. குழந்தையை இரண்டு மணி நேரமாக மார்போடு அணைத்தபடி, அழுதுகொண்டிருந்த கேட், குழந்தையின் காதுக்கருகே சென்று மெல்லிய குரலில் விசும்பலுடன் பேசினார். அப்போதுதான், யாரும் எதிர்பாராத அந்த அதிசயம் நடந்தது. இறந்துவிட்டதாகக் கூறப்பட்ட அந்தக் குழந்தையின் உடலில் சிறிய அசைவு காணப்பட்டது. அந்தப் பச்சிளம் குழந்தையின் கைகள் மெதுவாக நீண்டு, தன் தாயின் கரங்களை இறுகப் பற்றியது.

இந்த ஆச்சரிய நிகழ்வை நம்ப முடியாமல் கேட், சில நிமிடங்கள் திகைத்துப் போனார். அவரது கணவர் டேவிட், உடனடியாக ஓடிச்சென்று மருத்துவரை அழைத்து வந்தார். குழந்தையை பரிசோதித்த மருத்துவர், 'இது ஒரு பிரமை. இறந்துவிட்ட குழந்தை, மீண்டும் பிழைப்பதற்கு வாய்ப்பே இல்லை' என, உறுதியாகத் தெரிவித்து விட்டார்.

தன் குழந்தையை விட்டுக் கொடுக்க விரும்பாத கேட், மார்போடு அணைத்துக் கொண்டு, அந்த குழந்தைக்கு தாய்ப்பால் புகட்டினார். அதை குழந்தை, ஆர்வத்துடன் குடித்தது. அங்கு நின்றிருந்த மருத்துவரால், இதை நம்ப முடியாமல் மீண்டும் குழந்தையை பரிசோதித்தார்.

அப்போது அவர், குழந்தையின் இருதயத் துடிப்பு சீராக இருப்பதையும், குழந்தை சரியாக மூச்சு விடுவதையும் உறுதி செய்தார். பின்னர் அவர், 'என்னால் நம்பவே முடியவில்லை. ஆச்சரியத்தில் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. குழந்தை பிழைத்து விட்டது என்பது உண்மை' என்றார்.

ஆச்சரியத்திலும், மகிழ்ச்சியிலும் திக்குமுக்காடிப் போன கேட், இதுகுறித்து பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: குழந்தை இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறியதை அடுத்து, அதை மார்போடு அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டேன். என் வாயில் என்ன தோன்றியதோ அதை குழந்தையின் காதருகே, அழுகையுடன் கிசுகிசுத்தேன். 'உனக்கு ஜேமி என பெயர் வைத்திருக்கிறோம்' உனக்கு ஒரு சகோதரி இருக்கிறாள் தெரியுமா? நீ எங்களுக்கு வேண்டும்? உன்னை விட்டு எங்களால் பிரிந்து இருக்க முடியாது' எனக் கூறினேன். இரண்டு மணி நேரமாக, குழந்தையை மார்பில் வைத்துக் கொண்டு, அழுதபடி இருந்தேன்.

அப்போது திடீரென குழந்தையிடம் அசைவு தெரிந்தது. மெல்ல கண் திறந்து பார்த்தது. அதன் பிஞ்சுக் கரங்கள், என் கை விரல்களை மென்மையாக பற்றியபோது, எனக்கு ஏற்பட்ட உணர்வுகளை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

இந்த நேரத்தில் இந்த உலகத்திலேயே மிக மகிழ்ச்சியான தாய், தந்தையர்கள் நானும், என் கணவரும்தான்.

இவ்வாறு கேட் உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார்.

# 'கொம்பாசு' புயல் தீவிரமடைகிறது

## ஜப்பானில் 200 விமான சேவைகள் ரத்து



ஜப்பானின் தென்பகுதியில் 'கொம்பாசு' எனும் புயல் மையம் கொண்டிருப்பதால் 200-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஜப்பானின் தெற்கு மாகாணத்தில் 216 கிலோ மீட்டர் தொலைவில் கிழக்கு சீனா, கொரிய தீபகற்பத்தில் கொம்பாசு எனும் புயல் மையம் கொண்டிருப்பதாக ஜப்பான் வாநிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜப்பானில் கடற்கரைப்பகுதியான் ஒகினாவாவை தாக்கும் என்பதால் புயலில் சீற்றத்திலிருந்த தப்பிப்பதற்காக மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் 216 சர்வதேச விமானங்கள் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் 15,000 வெளிநாட்டுப் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டிலிருந்து வெளிவரும் உள்ளூர் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதே போன்று சீனாவிலும் அந்நாட்டின் ஜிஹஜியாங் மாகாண வானிலை ஆய்வு மையம் கொம்பாசு புயல் தீவிரமடைந்து வருவதாக தெரிவித்துள்ளது. இந்தப் பகுதிகளில் எற்கனவே நிலச்சரிவு ஏற்பட்டுள்ள நிலையில் கொம்பாசு புயலின் சீற்றத்தினால் ஏற்படப் போகும் விளைவுகள் குறித்து இப்பகுதிவாழ் மக்கள் கவலையடைந்துள்ளனர். இந்தப் பகுதியில் கன மழை பெய்துவருதால் 170 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் சிக்கியிருப்பதாக ஜிங்கூவா நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஈராக் மிஷன் முடிந்துவிட்டது

## அதிபர் ஒபாமா அதிகாரப்பூர்வ அறிவிப்பு



ஈராக்கில் இருந்த அமெரிக்க தாக்குதல் படை செயல்பாடுகள் அனைத்தும் முற்றிலுமாக முடிவுக்கு வந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் ஒபாமா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

'ஈராக்கில், சதாம் ஹுசேன் ஆட்சி அகற்றப்பட்டபின், அமெரிக்க இராணுவம் அங்கிருந்து வெளியேற வேண்டும் என, பல்வேறு தரப்பிலும் இருந்து நெருக்கடி எழுந்தது. இந்நிலையில், அமெரிக்க அதிபராக ஒபாமா பதவியேற்றபின், ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகள் அனைத்தும், 2010 ஆகஸ்ட் 31க்குள் முழுமையாகத் திருப்பி அழைக்கப்படும்' என, அறிவித்தார். இதன்படி, ஈராக்கிலிருந்த அமெரிக்கப் படைகள் படிப்படியாக வெளியேறின.

ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க இராணுவம், ஈராக்கில் முகாமிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப்பெறும் முடிவு ஈராக்கின் நலன் கருதி மட்டும் எடுக்கப்படவில்லை. அமெரிக்காவின் நலன் கருதியும் எடுக்கப்பட்டது என்றும் ஈராக்கின் எதிர்காலத்தை வலுப்படுத்தி ஒரு ஸ்திரமான அரசாக அதை அதன் மக்கள் கைகளில் ஒப்படைக்க அமெரிக்க விலைமதிக்கமுடியாத தியாகத்தை செய்துள்ளது என்றும் அரிக்க அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி நிலவிய காலத்திலும், ஈராக்கில் அமைதியை நிலைநாட்ட பெரிய அளவில் செலவழிக்கப்பட்டதாகவும் அமெரிக்காவின் இளைஞர்களும், இளம் பெண்களும், ஈராக்கில் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்ததாகவும், போரினால் பாதிக்கப்பட்ட ஈராக்கில், ஒரு மறுமலர்ச்சி ஏற்படும் என்ற நம்பிக்கையில்தான் அமெரிக்கா ஈராக்குக்கு இவ்வளவு காலம் துணை நின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் முழுவதுமாக திரும்பப்பெறப்பட்டுள்ளதற்கு ஈராக் பிரதமர் நூர்-அல்-மாலிக்கி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். ஈராக் இனி சுதந்திரமான நாடாக செயல்படும். அமெரிக்காவுக்கு இணையாக முழு இறையாண்மையுடன் இருக்கும். அமெரிக்க அதிபர் ஒபாமா அமெரிக்கப் படைகள் திரும்பப்பெறப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றியதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவு மேலும் பலப்படும்.

அமெரிக்க இராணுவத்தின் தாக்குதல் படைப்பிரிவினர் வெளியேறினாலும், வேறு சில பிரிவுகளைச் சேர்ந்த 50 ஆயிரம் வீரர்கள் அங்கு தொடர்ந்து தங்கியுள்ளனர். இவர்கள் ஈராக் இராணுவத்துக்கு ஆலோசனை கூறுவதற்காகவும், அமெரிக்காவின் நலன் கருதியும் இந்தப் படைப் பிரிவினர் அடுத்தாண்டு இறுதி வரை அங்கு இருப்பர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வசம் ஆயுதங்கள் இருந்தாலும், சுய பாதுகாப்புக்காக மட்டுமே அவற்றை அவர்கள் பயன்படுத்துவர் என்று அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஈராக் பிரதமர் வலியுறுத்தினார்.

# கூர்க்கா ரெஜிமென்டை கலைக்கிறது இங்கிலாந்து



உலகப் புகழ் பெற்ற கூர்க்கா படைப் பிரிவை இழுத்து மூட முடிவு செய்துள்ளது இங்கிலாந்து இராணுவம்.

இங்கிலாந்து இராணுவத்தில் கடந்த 200 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த படைப் பிரிவுதான் கூர்க்கா ரெஜிமென்ட். தற்போது இந்தப் பிரிவை கலைத்து விட இங்கிலாந்து அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தப் படைப்·பிரிவை பராமரிக்க நிதிப் பற்றாக்குறை பெரும் தடையாக இருப்பதால் இதை கலைத்துவிடும் முடிவுக்கு வந்துள்ளது இங்கிலாந்து அரசு.

கூர்க்கா படைப் பிரிவுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என பாதுகாப்புத்துறை செயாலளர் லியாம் பாக்ஸ் கோரியிருந்தார். ஆனால் அதற்கான சாத்தியம் இல்லை என்று நிதித்துறை கூறி விட்டது. இதையடுத்து கூர்க்கா பிரிவுக்கு ஆபத்து வந்துள்ளது.

கடந்த ஆண்டு கூர்க்கா படைப்பிரிவை தொடர வேண்டும் என்று கோரி நடிகை ஜோனா லும்லே பிரசாரத்தில் ஈடுபட்டார் என்பது நினைவிருக்கலாம். கூர்க்கா படைப்பிரிவில் தற்போது 3640 பேர் உள்ளனர்.


## வேலைக்கு ஆட்கள் தேவை

சர்வதேச போக்குவரத்து நிறுவனம் ஒன்றுக்கான உணவுப் பொதிகளை தயார் செய்வதற்கு பெண்கள் வேலைக்கு தேவை. பாரிஸ் மற்றும் புறநகர் பகுதிகளில் வாகனம் செலுத்துவதில் அனுபவம் உள்ள சாரதி ஒருவரும் தேவை.

தொடர்புகளுக்கு : 01 45 60 43 96

அன்று அறுசுவைக்கு அன்பு இன்று
அறுசுவையின் சுரங்கம் மிலானி உணவகம்

மிலானி உணவகம்
Melanie Cafe

ஒருமுறை சுவைத்துப் பாருங்கள் மீண்டும் சுவைக்கத்தூண்டும்

உங்கள் சௌகரியங்களுக்கு ஏற்ப
சைவ அசைவ உணவுகளை
தயாரித்துத் தருவதுடன் திருமணம்,
பிறந்தநாள், களியாட்ட விழாக்கள்
அனைத்துக்கும் தேவையான
சிற்றுண்டிவகைகளையும் தயாரித்து
வைபவம் நிகழும் மண்டபத்திற்கு
கொண்டுவந்து பரிமாறப்படும்

மிலானியின் புதிய சேவை
மண்டப அலங்காரம் -மண்டப ஒழுங்கு
உணவுப் பரிமாற்றம் – உபகரணங்கள்
ஆட்கள் ஒழுங்கு செய்தல் புகைப்படம்
மற்றும் வீடியோ

10, rue Labat, 75018 Paris
M°: Marcadet Poissonniers
Tél: 01 42 62 37 50
06 25 12 48 03 - 06 13 98 35 08

தமிழ் இணையப் பரப்பில் புதிய வரவு

செய்திகள் | அரசியல் | ஆய்வு
விவாதம் | இலக்கியம் | சமூகம் | சினிமா
காலத்தின் பதிவாய்
இனத்தின் குரலாய்...

ponguthamil.com

www.tamilarangam.net



# 'மக்களுக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் இருப்பது மக்களை மதிப்பது, சக உறுப்பினர்களை மதிப்பது என்பது தலைவர் எமக்கு கற்றுத் தந்த ஒரு உயரிய பண்பாடாகும் அந்த மதிக்கும் பண்பாடு விரிவடைய வேண்டும்'

## வேலும்மயிலும் மனோகரனது செவ்வியின் தொடர்ச்சி

**கேள்வி:** உங்களுக்கு எதிரான தாக்குதலை, முன்பு நாடுகடந்த அரசாங்கத்தினைக் குழப்ப முற்பட்ட அதே ஊடகங்களே நடத்துகின்றன. இன்றும் மீண்டும் உங்களுக்கு எதிராகவும், உருத்திரகுமாரனிற்கு எதிராகவும் வசைபாடல் நடத்தப்படுவதால், இது நாடுகடந்த அரசினை குழப்பும் சதி என்று சொல்லலாமா?

**பதில்:** எனக்கும் அவ்வாறான ஊகம் உள்ளது. நாடுகடந்த அரசாங்கம் ஒரு அரசியல் வேலைத்திட்டம். இன்று ஏற்பட்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்புபட்ட இடைவெளியினை நிரப்பும் ஒரு திட்டமாகவே இதனைப் பார்க்கின்றேன். நாடுகடந்த அரசாங்கத்தினை எதிர்ப்பது, கொச்சைப்படுத்துவது, இயங்கவிடாது தடுப்பது, தமது கட்டுப்பாட்டின் கீழ்தான் இயங்க வேண்டும் என்று கூறுவது எல்லாமே இந்த அரசியல் வேலைத் திட்டத்தினை தோற்கடிக்கும் நடவடிக்கைகளாகும்.

இதனைத் தேசியத்தின் பெயரால் எதிர்க்கும் தரப்புக்களிடம் எதுவித மாற்று வேலைத்திட்டங்களும் கிடையாது. வெறுமனே பொய்யால் புனையப்பட்ட அறிக்கைகளை விடுவதும், ஒரு சாதாரண தமிழ்ச் சங்கம் செய்யக்கூடிய குடிமக்கள் நடவடிக்கைகயை பெரும் அரசியல் நடவடிக்கையாக கூறுவதும் என்னைப் பொறுத்தவரை உச்சபட்ட ஈகத்தினைச் செய்த மாவீரர்களுக்கு செய்யப்படும் துரோகமாக அல்லது எமது இயக்கத்திற்கு செய்யப்படும் துரோகமாகக் கருதுகின்றேன்.

நானும், உருத்திரகுமாரனும் இயங்குவது தமிழ்மக்கள் மத்தியில் இருக்கும் சிலரை அசௌகரியப் படுத்துகின்றது என்பது எனக்கு விளங்குகின்றது. தலைவர் முன்பொருமுறை கூறியது போன்று உண்மை வெளிக்கிட்டு புறப்படும் முன்னர் பொய் ஒருமுறை ஊர்வலம் வந்துசேரும், ஆனால் உண்மைகள் வெளிவரும்போது அதுவே நிலைத்து நிற்கும்.

**கேள்வி:** மக்களின் குழப்பத்தினை தீர்ப்பதற்காக சில விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும். நீங்கள், கேபி தற்போது முன்னெடுக்கும் பணிகளை ஒருங்கிணைக்கிறீர்களா? கேபிக்கும் உங்களுக்கும், கேபிக்கும் உருத்திரகுமாரனுக்கும் இடையேயான தொடர்பு என்ன?

**பதில்:** கேபி தற்போது முன்னெடுக்கும் பணிகளை நான் ஒருங்கிணைப்பதாக வெளிவந்த தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. அதேபோல கேபிக்கும் உருத்திரகுமாரனுக்கும் தற்போது தொடர்பிருப்பதாக சொல்வதிலும் உண்மை இல்லை. 'தி ஐலண்ட்' பத்திரிகையில் கேபி அவர்களை செவ்வி கண்டதாகக் கூறி அதனைப் பிரசுரித்த அதன் ஊடகவியலாளர் குறிப்பிட்ட ஒரு தகவலினை, கேபி கூறியதாகத் திரித்து உள்நோக்கம் கொண்ட குழுவொன்று நடத்தும் கேவலமான அரசியலை ஓரமாக வைத்துவிடுங்கள். கேபி கைதுசெய்யப்பட்டு கொழும்பில் இருக்கையில், எனது தலைமையில் கேபியுடன் செயற்பட்டவர்கள் செயற்படுவதாக 'தி ஐலன்'டின் செய்தியாளர் எழுதுகின்றார். அது கேபி சொன்னதாக கூட எழுதப்பட்ட செய்தியல்ல. இந்த ஊடகவியலாளர் எதற்காக இவ்வாறு குறிப்பிட்டார் என்பதனையும் அதற்கு இருக்கக்கூடிய உள்நோக்கங்களையும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மக்களை முட்டாள்களாக நடத்தும் இந்த இணையப்புலிகளுக்கு மக்கள்தான் பதில் கூற வேண்டும்.

எனக்கு கேபியினை அறிமுகப்படுத்தியது எனது தலைவர். 1984ல் ஒரு பட்டியலுடன் தலைவர் அவரை ஐரோப்பாவிற்கு அனுப்பி வைத்தார். 2003வரை அவர் இயங்கினார். அவருடன் நாங்கள் இயங்கினோம். சுமார் 18 வருடமாக பொறுப்பில் இருந்த மூத்த உறுப்பினர் அவர். அவருடன் இயக்கத்தின் வெளிநாட்டு கட்டமைப்பில் செயற்பட்ட அனைத்து மூத்த செயற்பாட்டாளர்களுக்கும் பல்லாண்டு தொடர்புகள் இருந்துள்ளது. 2003ல் அல்லது 2009 மே-19ற்குப் பிறகு இயக்கத்திற்குள் புகுந்தவர்களுக்கு அவரைத் தெரியாது.

நான் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளராக தலைவரால் நியமிக்கப்பட்ட பிற்பாடு பணிசார்ந்து கேபி உடன் நெருங்கிய உறவு நிலையை பேணினேன். பிற்பாடு 2009 சனவரியில் கேபி மீள தலைவரால் பொறுப்புக்குக் கொண்டு வரப்பட்டபோது அந்த தொடர்பு புதுப்பிக்கப்பட்டது. 2009 மே-18ற்குப் பிற்பாடு அடுத்த கட்டம் பற்றிய கலந்துரையாடல்களில் உலகின் பல மூலைகளிலிருந்தும் போராளிகள், மூத்த செயற்பாட்டாளர்களை கேபி ஈடுபடுத்தியபோது நானும் அந்த நடவடிக்கைகளிற்காக அழைக்கப்பட்டேன். உருத்திரகுமாரனும் அழைக்கப்பட்டார். கேபியின் கைதுக்குப் பிற்பாடு அவரின் விடுதலைக்காக பிரான்சின் மிக முன்னணியான சட்டத்தரணியினை நான் ஏற்பாடு செய்தபோதும் சட்டத்தரணிக்கு கொடுக்கப் பணமில்லாமையால் அது கைவிடப்பட்ட துன்பமும் நிகழ்ந்தது. இதுவே எங்களிற்கு இடையேயான தொடர்பு.

> மே-18ற்குப் பிறகு புலிகள் இயக்கத்தினை சர்வதேசரீதியில் பலவீனப் படுத்த முற்படும் சக்திகள் மூத்த, அபவம் வாய்ந்த உறுப்பினர்களை ஓரங் கட்டுவதற்காக் கண்டு பிடித்த சொல்தான் கேபி குழு என்று நான் கருதுகின்றேன்.

**கேள்வி:** கேபி குழு என்ற ஒன்று குறித்த ஊடகங்களினால் சொல்லப் படுகின்றதே. அது பற்றிய உங்கள் கருத்து என்ன?

**பதில்:** இது மே-18ற்குப் பிறகு கட்டப்பட்ட கதை. இயக்கத்தினை தெரிந்தவர்களுக்குத் தெரியும் இயக்கத்தினுள் குழுவாதம் அனுமதிக்கப் படுவதில்லை. வேலை சார்ந்த பொறுப்புகளே வழங்கப்படும்.

> இயக்கத்தில் நீண்டகாலம் செயற்பட்டவர்கள் தலைவர் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் என்று தம்மை அடையாளப்படுத்தவே விரும்புவார்கள். வேறு ஒரு தனிநபர் பெயரையும் ஏற்றுக் கொள்ளாத மரபு எம்முடையது.

கேபி 20 வருடங்கள் வெளிநாட்டுக் கட்டமைப்புக்களை கட்டியெழுப்பியவர் என்பதால் பெருந்தொகையான மூத்த உறுப்பினர்களின், அனுபவம்மிக்க உறுப்பினர்களின் தொடர்புகளைக் கொண்டிருந்தவர். மே-18ற்குப் பிறகு புலிகள் இயக்கத்தினை சர்வதேச ரீதியில் பலவீனப்படுத்த முற்படும் சக்திகள் இந்த மூத்த, அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களை ஓரங்கட்டுவதற்காகக் கண்டுபிடித்த சொல்தான் கேபி குழு என்று நான் கருதுகின்றேன். இவர்கள் தாம் குழுவாக இயங்கும் காரணத்தினால் என்னவோ எல்லோர் மீதும் குழு என்ற முத்திரை குத்த முற்படுகிறார்கள்.

இயக்கத்தில் நீண்டகாலம் செயற்பட்டவர்கள் தலைவர் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் என்று தம்மை அடையாளப்படுத்தவே விரும்புவார்கள். வேறு ஒரு தனிநபர் பெயரையும் ஏற்றுக்கொள்ளாத மரபு எம்முடையது.

**கேள்வி:** இயக்கத்தினை சர்வதேசரீதியாக வழிநடத்தியவரான நீங்கள் இன்றுள்ள செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்களிற்கு சொல்ல விரும்பும் செய்தி என்ன?

**பதில்:** என்னைப் பொறுத்தவரை எனக்கு தலைவர் சொல்லித் தந்தது, மக்களுக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் இருப்பதே முக்கியமானது என்பது. அதனையே உங்களுக்கும் சொல்ல விரும்புகின்றேன். இரண்டாவது விழிப்புடன் இருங்கள். எமக்குள் இருக்கும் புல்லுருவிகள் பலரும் மே-18ற்குப் பிற்பாடு தீவிரமாகியுள்ளனர். எனவே விழிப்பு முக்கியமானது. மூன்றாவது, தலைவர் ஒரு உயரிய பண்பாட்டினை தந்துள்ளார். அது மதிப்பது. மக்களை மதிப்பது, சக உறுப்பினர்களை மதிப்பது என அந்த மதிக்கும் பண்பாடு விரிவடைய வேண்டும்.

**கேள்வி:** நாடுகடந்த அரசுவின் தேர்தல் முடிவுகள் இரண்டு தொகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது தொடர்பான சர்ச்சையும் உங்களுடன் தொடர்புபட்டது. அதுபற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

**பதில்:** தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இத் தேர்தல் தொகுதிகளில் தேர்தல் முடிவுகளை உத்தியோகபூர்வமாக வெளியிடாது உள்ளக விசாரணைகளை மேற்கொள்ள முற்பட்டோம். அதனை ஏற்றுக்கொள்ளாத சிலர் உருத்திரகுமாரனுடன் தொடர்புகொண்டு மனோகரனிடம் நம்பிக்கையில்லை என்று பேசினார்கள். நாம் கலந்து பேசி முடிவில் தமிழர் அல்லாத மாற்றினத்தவர்களைக் கொண்ட சுயாதீனமான குழுவொன்றினால் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் அதற்கான குழுவும் அமைக்கப்பட்டது. இந்த சுயாதீனக்குழு பிரான்சுக்கார நிபுணர்களைக் கொண்டது. அதன் விசாரணைகளுக்கு அனைவரும் ஒத்தழைப்புக்கொடுத்தனர். குறித்த இருவர், அதாவது நடுநிலைக்குழுவின் விசாரணையைக் கோரிய இருவர் ஒத்துழைக்கவில்லை. விசாரணை அறிக்கைகள் இப்போது தேர்தல் ஆணைக்குழு மற்றும் உருத்திரகுமாரனின் கைகளில் உள்ளது. அதன் முடிவுகள் விரைவில் மக்களின் முன்பாக வைக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலத்தின் கோலமும் சிங்கள ராஜதந்திரத்தின் வேடமும்

- தனபாலா -

தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதியின் வெளிப்பாடுதான் ஆயுதப் போராட்டம் என்று பொருள்படக் கூடிய வகையில் உண்மையைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மங்கள முனசிங்க குறிப்பிட்டுள்ளார். இது இலங்கையின் அரசியல் வரலாற்றைத் தெரிந்தவர்களுக்கு இந்த ஒப்புதல் வாக்குமூலம் ஒரு புதிய விடயமல்ல.

காலத்துக்கு காலம் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான நியாயங்களை சிங்களத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டு வாக்குறுதி அளிப்பதும், பின்பு அவற்றை மீறுவதும் சிங்களத் தலைவர்களின் இயல்பான செயலாகும்.

சமஸ்டித் தீர்வுதான் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான அத்தியாவசியத் தீர்வு என இலங்கையின் வரலாற்றிலேயே முதல்முறையாக 1926ம் ஆண்டு S.W.R.D. பண்டாரநாயக்க குறிப்பிட்டார்.

தமிழ்த் தலைவர்கள் யாரும் இப்படி ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்காத காலத்தில் பண்டாரநாயக்காவே முதல்முறையாக இதை முன்வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சமஸ்டித் தீர்வை முன்வைக்கையில் அவர் கூறிய இன்னொரு வாக்கியம் மிகவும் கவனத்துக்குரியது. இதற்கெதிராக ஆயிரத்தொரு எதிர்ப்புக்கள் எழுந்தால் என்ன, இறுதியில் இதை ஏற்றுக்கொள்வதைத் தவிர தீர்விருக்காது என அவர் சிங்கள மக்களை நோக்கிக் கூறினார்.

ஆனால் இதே பண்டாரநாயக்காதான் 1958ம் ஆண்டு தமிழர்களின் இரத்தத்தை சிங்களவர் ருசி பார்க்க அனுமதித்தவர். தமிழின மனிதப் படுகொலை குற்றச்சாட்டுக்கான பட்டியலின் காலவரிசையில் முதலிடம் பிடிக்கும் சிங்கள ஆட்சியாளர் இவராவார். இவ்வாறு பதவிக்கு வரமுன்பு நீதி பேசி பதவிக்கு வந்தபின்பு, அதை மீறிப் படுகொலை செய்த ஆட்சியாளர் இவர்.

தனது பதவிக்காலம் முழுவதும் 3/4 பங்கு பெரும்பான்மைப் பலத்துடனும் நிறைவேவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனது பதவிக்காலம் முடிந்த பின்பு 01.01.96 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியில் சமஸ்டித் தீர்வுதான் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரேவழி எனக் குறிப்பிட்டிருந்தார்.

முன்னவர் பதவிக்கு வரமுன்பு சமஸ்டித் தீர்வு பற்றிச் சிலாகித்துப் பேசிவிட்டு, பதவிக்கு வந்தபின்பு 1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றினார். அத்துடன் அதே ஆண்டு கல்லோயாவில் 156 தமிழர்களை சிங்களக் காடையர் மூலம் படுகொலை செய்வித்தார். 1958ம் ஆண்டு இனப்படுகொலை ஒன்றை அரங்கேற்றினார்.

ஆனால் பின்னவரோ பதவியில் இருக்கும் வரை 1977, 1979, 1983 கறுப்பு யூலை இனப்படுகொலை எனப் பல படுகொலைகளையும் நிறைவேற்றியதுடன் தனது ஆட்சிக்காலம் முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்துவிட்டு தனது பதவிக்காலம் முடிந்தபின்பு தமிழர்களுக்கு சமஸ்டித் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்.

ஓர் இனப்படுகொலையாளன் பதவிக்கு வரமுன்பு சமஸ்டித் தீர்வு பற்றிக் கூறி பதவிக்கு வந்தபின்பு அதற்கு எதிராக நடந்தார். ஆனால் இன்னொரு இனப்படுகொலையாளனோ பதவியில் இருக்கும் வரை இனப்படுகொலை செய்துவிட்டு பதவியிலிருந்து இறங்கிய பின்பு சமஸ்டித் தீர்வு அவசியம் என்றார்.

இந்த இரு சிங்கள இனவாதத் தலைவர்களினதும் இரு அந்தலைகளுக்குரிய வாக்குமூலங்களைப் புரிந்து கொண்டால் மங்கள முனசிங்க கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தைப் புரிந்துகொள்வதில் கஸ்டமிருக்காது.

இவர் அரசாங்கத்தில் பங்குதாராய் பதவி வகித்தவர். இப்போது நற்போதனையாளராய் மாறியிருக்கிறார். அவர்கள் ஞானம் பெற்று விட்டார்களோ இல்லையோ எமக்குத் தெரியாது. ஆனால் தாம் செய்த பாவங்களுக்காக (SORRY) சொல்வதன் மூலம் இறந்த தமிழர்களை உயிர்ப்பித்துவிட முடியாது.

புத்தபிரான் போதிமரத்தின் கீழ் ஞானம் பெற்றார் என்பது உண்மை. ஆனால் சரத் பொன்சேகா தான் கட்டியாண்ட இராணுவச் சிறைக்குள் ஞானம் பெறுகிறாரோ நாம் அறியோம். தொப்பியில் இருந்து சப்பாத்து வரை அவருக்கு எல்லாமே கழற்றியாயிற்று என்பது மட்டும் இராணுவ நீதிமன்றத் தீர்ப்பால் எமக்குத் தெரிகிறது.

மங்கள முனசிங்கவினது ஒப்புதல் வாக்குமூலமும் சரத் பொன்சேகாவின் பட்டம், பட்டி, பதவிநிலை அந்தஸ்த்துக்கள், பதவிக்காலப் பரிசுப் பொருட்கள் என எவற்றை எல்லாம் தோலுரித்து அகற்ற முடியுமோ அவற்றையெல்லாம் அகற்றும் பணியில் ராஜபக்சாக்கள் முன்னேறுகிறார்கள்.

**ஓர் இனப்படுகொலையாளன் பதவிக்கு வரமுன்பு சமஸ்டித் தீர்வு பற்றிக் கூறி பதவிக்கு வந்தபின்பு அதற்கு எதிராக நடந்தார். ஆனால் இன்னொரு இனப்படுகொலையாளனோ பதவியில் இருக்கும் வரை இனப் படுகொலை செய்துவிட்டு பதவியிலிருந்து இறங்கிய பின்பு சமஸ்டித் தீர்வு அவசியம் என்றார்.**

2005ம் ஆண்டு ராஜபக்ச ஜனாதிபதியாக வந்ததும் புதிய இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகாவை நியமனம் செய்ய விரும்பினார் கோத்தபாய. அப்போது மகிந்த ராஜபக்சவும், பசில் ராஜபக்சவும் அதனை விரும்பவில்லை என்று ஒரு செய்தி கசிந்தது. அவ்வாறு விரும்பாத மகிந்த ராஜபக்ச, கோத்தபாயவிடம் 'இவர் ஓர் ஆபத்தான பேர்வழி. இவரால் பின்பு எமக்கு ஆபத்து நேரக்கூடும்' என்று கூறி அவரை நியமிக்கத் தயங்கினாராம். அப்போது கோத்தபாய பின்வருமாறு கூறினாராம் 'அதை என்னிடம் விட்டுவிடுங்கள் அவரை நான் பார்த்துக் கொள்வேன்' இதன் பின்பு இராணுவச் சேவையிலிருந்த தனது சகோதரனான கோத்தபாயவை நம்பி சரத்தை அவர் இராணுவத் தளபதியாக நியமித்தார்.

தம் கை நிறைய தமிழரின் இரத்தத்தை வைத்திருந்த அனைத்துச் சிங்களத் தலைவர்களும் அக்கைகளாலேயே மலர்களை ஏந்திய வாறு, நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வெறும் மேலுடன் நின்று ஜனாதிபதித் தேர்தலுக்காக வரம் வேண்டிநின்ற காட்சிகளை மனதில் நிறுத்தினால் சிங்களத் தலைவர்களைப் புரிந்து கொள்வதில் எவ்வித கஸ்டமும் இருக்காது.

முனசிங்காக்களும், பொன்சேகாக்களும் எத்தகைய ஞானம் பெற்றாலும் அவற்றைத் தமிழர்கள் நம்பவும் முடியாது. அவற்றால் தமிழனுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதுமில்லை. மாறாக யாராவது சொல்ல முடியும், சிங்களத் தலைவர்களிடம் நீதி சொல்லும் நிலை தலையெடுப்பதாக. இது மீண்டும் சிங்களவர்களிடம் நீதியை எதிர்பார்க்கும் இலவுகாத்த கிளியின் கதையாகிவிடும்.

மீண்டும் மீண்டும் கசப்பான வரலாற்றைச் சிங்களத் தலைவர்கள் எமக்குத் தந்திருக்கிறார்கள். இதற்கு முன்பிருந்த சிங்களத் தலைவர்களின் கருத்துக்களை விளங்கிக் கொள்வோமானால் மங்கள முனசிங்காவின் கருத்தை நாம் மறுபக்கமாகவே பார்க்கவேண்டும்.

அதாவது ராஜபக்சவின் ஏமாற்று வித்தையான ஆணைக்குழுவில் நீதி பேசப்படுகின்றது என்ற தோற்றம் சர்வதேச சமூகத்தின்முன் விரியும். மங்கள முனசிங்க பிரித்தானியாவில் இராஜதந்திரியாகப் பணியாற்றியவர். முழு இனவாதத்தையும் நியாயப்படுத்தி இன அழிப்புக்கு வக்காலத்து வாங்கியவர். அவர் ஒரு ராஜதந்திரி என்ற வகையில் அவரது இந்தச் சாட்சியத்தையும் சிங்கள இராஜதந்திர இலக்குடன் இணைத்து நோக்க வேண்டும்.

ராஜபக்சவின் ஆணைக்குழுவை அவர் புனிதப்படுத்துவதற்காக ஒரு நாடகம் ஆடுகின்றார் என்பதே உண்மை. முன்கதவால் தமிழருக்கு வாக்குறுதி அளித்துவிட்டு அதற்கு எதிராகச் செயற்படுமாறு பின்கதவால் பத்திரிகையாளர்களுக்கு அறிவுறுத்தும் வேலையை சிங்களத் தலைவர்கள் செய்து வந்ததாக நம்பப்படுகின்றது. இப்படி மிக நரித்தனமான, கீழ்த்தரமான ராஜதந்திரப் பாரம்பரியத்தைக் கொண்ட சிங்களத் தலைவர்களிடம் இருந்து ஏதாவது அற்புதம் பிறக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு.

வின்சன் சேச்சிலிடம் இருந்து நாம் புரிந்துகொள்ளவேண்டிய விடயம் ஒன்று உண்டு. அதாவது 'முதலில் ஓங்கி அறைந்து விட்டுப் பின்பு (SORRY) சொல்லி அணை' இதில் அடிப்பதும் வெற்றி. பின்பு அணைப்பதாலும் கிடைப்பது வெற்றி. இந்த வகையில் அடிப்பதும் வெற்றி, அணைப்பதும் வெற்றி என்ற இலக்கில் இன அழிப்பைச் செய்த சிங்களத் தலைவர்கள் இப்போது நீதிவான்கள் போல உலகுக்கு தம்மைக் காட்டிக்கொள்ள இப்படி ஒரு போதனையைச் செய்கிறார்கள். இதில் அவர்கள் இரண்டுகால வெற்றியை அல்ல மூன்று கால வெற்றியையும் இலக்கு வைக்கிறார்கள். அதாவது 'எங்களிடம் நீதிமான்கள் உண்டு. எங்களை நம்பிக் காத்திருங்கள். அதுவே போதும் தமிழா நீ அழிந்து போவதற்கு' என்பதே அந்தச் செய்தியாகும்.

எனவே கடந்தகாலத்தில் அழிந்தோம், நிகழ்காலத்தில் அழிகிறோம். எனவே எதிர்காலத்திலாவது அழியக்கூடாது என்றால் எந்தவொரு சிங்களத் தலைவனது வார்த்தைகளையும் நாம் நம்பக்கூடாது என்பதே வரலாறு எமக்குக் கற்றுத்தந்த பாடமாகும்.

விக்கிரமபாகு கருணாரட்ண போல ஒரு சில சிங்களவர் இருக்கக்கூடும். ஆனால் அவர்கள் ஒரு சக்தியல்ல. அதேவேளை விக்கிரமபாகு கருணாரட்ணவின் வழிகாட்டியான வாசுதேவ நாணயக்கார என்பவர் ராஜபக்சாக்களுக்கு கூசா தூக்கும் பணியை மட்டும் செய்பவராக அல்லாமல் அவரது இரத்தக் கரங்களை பன்னீர் கொண்டு துடைக்கும் பணியையும் செய்கிறார் போன்ற உண்மையையும் நாம் காணத் தவறக்கூடாது.

சரத் பொன்சேகா சிறையில் ஞானம் பெறுவது காலத்தின் கோலம். அதே வேளை அவர் மலர்தட்டுடன் நல்லூர் கந்தனிடம் சென்றது ராஜதந்திரத்தின் வேடம். அவ்வாறே மங்கள முனசிங்கவின் ஒப்புதல் வாக்குமூலமும் இராஜதந்திரத்தின் வேடம்.

நன்றி: 'பொங்கு தமிழ்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பரந்தனுக்கு வந்து பாருங்கள்

- விதுல் சிவராஜா

## யாரறிவார் வன்னிப் பெருந்துயரை!

'பரந்தனுக்கு வந்து பாருங்கள்' என்று அழைத்தார் ஒரு நண்பர். அவர் ஒரு விவசாயி. பரந்தனில் உழைத்து பரந்தனிலேயே வாழ்ந்தவர். பரந்தனையும் தன் பங்குக்குக் கட்டியெழுப்பியவர்.

'பரந்தனில் அப்பிடி என்னதானிருக்கு?' என்று கேட்டேன்.

'அங்கேயிருந்த ரசாயனப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை இல்லை. நகரின் மத்தியிலிருந்த கடைத் தொகுதி இல்லை. சந்தை இல்லை. தண்ணீர்த்தாங்கி இல்லை. ஆயிரக்கணக்கில் நின்ற மாடுகள் இல்லை. குமரபுரத்துக்குத் திரும்புகிற சந்தியிலிருக்கும் வைரவர் கோவில் இல்லை. ரெயில்வே ஸ்ரேசன் இல்லை. சனங்கள் ஒருவருக்கும் வீடுகளில்லை. பலருக்குக் கைகால்களில்லை. சிலருக்குக் கண்கள் இல்லை. நல்ல தெருக்கள் இல்லை. மின்சாரமில்லை. யாரிடமும் ஒரு வண்டியோ வாகனமோ கிடையாது....'

இப்பிடியே அடுக்கிக் கொண்டு போனார் நண்பர்.

'அப்பிடியென்றால் இப்ப அங்க என்னதானிருக்கு?' என்றேன்.

'பரந்தனில் உடைந்து நொருங்கியிருக்கும் தண்ணீர்த்தாங்கியிருக்கு. செத்துப்போன நூற்றுக்கணக்கான மாடுகளின் எலும்பு எச்சங்கள் இருக்கு. கைகால்களை இழந்து போனவர்கள் இருக்கினம். கடனாளியள், பைத்தியமாகியவர்கள், அநாதைகள் எல்லாரும் இருக்கினம். அதிலும் இரண்டு கால்களையும் இழந்தவர்கள், இரண்டு கைகளையும் இழந்தவர்கள் எல்லாம் இருக்கினம். தாயையும் தகப்பனையும் இழந்து ஆரோட வாழுறதெண்டு தெரியாத பிள்ளையள் இருக்கு. தரப்பாள் கூடாரங்கள் இருக்கு. சந்தியில புத்தர் கோயில் இருக்கு. ஆமிக்காம்புகள் இருக்கு. சந்தியில ஆமிக்காரர் நடத்திற ஐஞ்சாறு கடையள் இருக்கு. வெளிச்சமில்லாத இரவுகள் இருக்கு. (இருட்டிருக்கு). விதைக்கப்படாத வயல்கள் இருக்கு. எல்லாரிட்டையும் தாராளமாகக் கண்ணீர்க் கதைகள் இருக்கு. சாப்பாடில்லாத நாட்கள் இருக்கு. ஆமிக்காரரின்ர புலன் விசாரணைகள், கண்காணிப்புகள் எல்லாம் இருக்கு. பூசையே இல்லாத கோயில்களிருக்கு. அழகான விளம்பரத் தட்டிகள் இருக்கு. இயக்கத்தின்ர அடையாளங்களாக சிதைந்துபோன எச்சங்கள் இருக்கு. முல்லைத்தீவுக்குத் திரும்புகிற சந்தியில லெப். கேணல் குட்டிசிறியின்ர நினைவாகச் செய்யப்பட்ட சிலையின்ர இடிக்கப்பட்ட சிதைவுகளிருக்கு....

நண்பர் முடிக்காமல் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால், எனக்கு மூச்சுத்திணறியது. இந்தமாதிரி இப்ப அநேகமான வன்னிக் கிராமங்கள் இருக்கெண்டு எனக்குத் தெரியும். ஆனால், அதையெல்லாம் இப்பிடித் தொகுத்து நண்பர் சொல்லேக்க அதைத் தாங்கேலாமல் கிடக்கு.

இந்தப் பூமியில ஒண்டும் புதுசா இல்லை. எல்லாமே ஏற்கனவே அறிஞ்சதுதான். ஆனால், திரும்பச் சொல்லுற விதத்தாலதான் அவையெல்லாம் புதுசா அர்த்தம் தாற மாதிரி இருக்கு.

இந்தப் பூமியில அநீதி, அக்கிரமம், கொடுமை, அழிவுகள், போர், அதின்ர இழப்புகள் எல்லாமே புதிசில்ல. அது எல்லாக் காலத்திலயும் எங்கோ ஒரு இடத்தில நடந்து கொண்டுதானிருக்கு.

'மனிசர் நாகரீகம் அடைஞ்சிருக்கினம். உலகம் முன்னேறியிருக்கு' எண்டெல்லாம் சொல்லப்படுது. இந்தப் பூமியில அமைதியைப் பற்றி, சமாதானத்தைப் பற்றிக் கதைக்கிற கதைகள் கொஞ்சமில்லை. ஆனால், கொடுமைகளும் ஆரும் விரும்பாத போரும் நடந்து கொண்டுதானிருக்கு.

இப்ப எங்களின்ர மண்ணில நடந்த போரால சனங்கள் பட்டிருக்கிற பாடுகள், அதுகள் சந்திச்சுக் கொண்டிருக்கிற துன்பங்கள் எல்லாம் கொஞ்சமில்லை.

பரந்தனில முந்தி நெல்மணந்தானிருக்கும். அதோட கலந்து சோடா பக்ரறி எண்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின்ர குளோரின் மணமும் இருக்கும். பச்சைப் பசேல் என்ற நெல்வயல் ஏக்கர்கணக்கில கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் தெரியும். மாடுகளின்ர கூட்டம். நெல்லவிக்கும் மணம். நெல்லுக் குத்தும் மில்கள். சந்தையில இருக்கிற பரபரப்பு, இரவோ பகலோ என்று தெரியாத வெளிச்சம், குமரபுரம் முருகன் கோவில், பரந்தன் வைரவர், சோடா பக்ரறிப் பிள்ளையார் கோவில்கள் எல்லாத்திலையும் கேட்கிற மணியோசை இருக்கும். சோடாபக்ரறிக்கு வேலைக்கு வாற ஆட்கள், வேலை முடிஞ்சு போற ஆட்கள், அரசியல் கூட்டங்கள், கட்சிக் கொடிகள், பிறகு, இயக்கங்களின்ர காலத்தில போராளிகளின்ர நடமாட்டம் எல்லாம் இருந்தது.

இப்ப, அது சுடுகாடு. கற்குவியலாகி, கண்ணீர் மேடாகி, காய்ந்த நிலமாகி, சப்பாத்துகளின் விளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலமாகியிருக்கும் இடிபாடுகளின் காடு.

இந்தச் சுடுகாட்டில இருக்கிற நூற்றுக்கணக்கான துயரப்படுகிற மனிசரில இப்ப ஒருத்தியின்ர கதை இது. இதை என்னைப்போல அங்கே இப்ப புதிசா ஒரு விருந்தாளியாக வந்திருக்கிற புத்தர் பெருமானும் அறிஞ்சிருப்பார் எண்டு நினைக்கிறன்.

இந்தப் பெண்ணுக்கு 'பிள்ளைக்கு' வயசு 20. வயதுக்கேற்ற தோற்றம் இல்லை. கண்களில் மகிழ்ச்சியில்லை. வாடி ஒடுங்கிய தேகம். பெயர், சுப்பிரமணியம் நித்தியகலா. இப்ப பரந்தன் - முல்லைத்தீவு றோட்டில, நாலாம்குறுக்குத் தெருவில இருக்கிற 99 ஆம் இலக்க வீட்டில (அது தரப்பாள் கூடாரம்) ஒரு குடும்பத்தோட இருக்கிறாள்.

நித்தியகலாவின் வீடு முன்பு கிளிநொச்சி அம்பாள் குளத்தில் இருந்தது. இப்ப அவள் அங்கே போகமுடியாது. அவளுக்கு யாருமே இல்லை. இந்த நிலையில் அவள் எப்பிடி அங்க போயிருக்க முடியும்?

இனம் இனத்தோடதான் சேரும் என்பார்கள். இவளும் இவளைப் போல பாதிக்கப்பட்டிருக்கிற ஒரு குடும்பத்தோடதான் இருக்கிறாள். அது அழகேஸ்வரியின்ர வீடு. அழகேஸ்வரியின்ர கணவர் செல்லடியில செத்துப்போனார். அழகேஸ்வரிக்கு இரண்டு பொம்பிளைப் பிள்ளையள். இப்ப மூண்டாவது பிள்ளையாக நித்தியகலாவைத் தன்னோட வைச்சுப் பார்க்கிறார் அழகேஸ்வரி.

அழகேஸ்வரி நித்தியகலாவை வவுனியா அகதி முகாமில சந்திச்சிருக்கிறார். நித்தியகலாவுக்கு ஒரு சொந்தக்காரரும் இல்லை. எல்லாரும் 17.05.2009 ஆம் திகதி, யுத்தம் முடிவுக்கு வந்த நாள் வட்டுவாகலில் செத்துப் போனார்கள்.

நாலு அண்ணன்மாருக்கு கடைசிப் பெண்ணாக, செல்லக்குட்டியாக இருந்த நித்தியகலா இப்ப அநாதை. கை, கால், முதுகெல்லாம் காயப்பட்ட தழும்புகள். மயிரிழையில் தப்பிப் பிழைத்திருக்கிறாள்.

நித்தியகலாவின் சொந்தக்காரர்கள் 27 பேர் அன்று செத்திருக்கிறார்கள். யுத்தம் முடியும் தறுவாய். எப்படியோ அந்த இறுதிக் கணங்களைக் கடந்து விட்டால் போதும். பிறகு சமாளித்துக் கொள்ளலாம் எண்டுதான் எல்லாரும் இருந்தார்கள்.

ஆனால், அப்ப, அந்தக் கடைசி நாளின் கடைசிக் கணங்களில் வந்து விழுந்த செல் ஒரேயடியாய் அத்தனை பேரையும் ஒண்டாத் திண்டிருக்கு. அவள் தன்னுடைய செத்துப் போன சொந்தக்காரரின்ர பேரைச் சொல்கிறாள்.

'எனக்கு நாலு அண்ணமார். நித்தியானந்தன். நித்தியரூபன். நிஸாந்தன். நிரூபன் எண்டு. ஒருத்தர் போராளியாக இருந்து வீரச்சாவடைந்திட்டார். மற்ற அண்ணன்மார் எங்களோடதான் இருந்தவை. நாங்கள் எல்லாரும் இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து வட்டுவாகல்வரையும் போட்டம். அதுவரையும் சின்னச்சின்னக் காயங்கள்தான் பட்டம். ஆனால், ஆருக்கும் உயிருக்கு ஒண்டுமில்லாமல் இருந்துது.

நாங்கள் எல்லாரும் ஒண்டாகத்தான் இருந்தம். அம்மம்மா, அப்பப்பா, சித்தப்பா குடும்பம், அத்தையாக்கள், மாமா குடும்பம் எண்டு எல்லாரும். வட்டுவாகலில கடைசியா இருக்கிறம். ஆமி எல்லாரையும் சுத்தி வளைச்சுப் போட்டுது எண்டு சொல்லிச்சினம்.

எல்லாப்பக்கமும் வெடிச்சத்தம். தலையெடுக்கேலாது. எனக்கு திசை ஒண்டுந் தெரியேல்ல. பழக்கமில்லாத இடம். சனங்கள் செத்துக் கொண்டிருந்துதுகள். எல்லாப் பக்கத்தாலயும் அழுகுரல்கள் கேட்டுக் கொண்டிருந்துது.

நாங்கள் அழுதம். இயக்கமும் ஆமியளும் மாறிமாறிச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். என்ன செய்யிறது? கொஞ்சநேரம் பாப்பம் எண்டு சின்னண்ணா சொன்னான். அப்பிடியே இருக்கிறம். நிலைமை மாறேல்ல. சனங்கள் செத்துக்கொண்டிருந்துது. அதைப் பாக்கப் பயமா இருந்துது. எனக்கு தலை சுத்திக் கொண்டு வந்திது.

அத்தை சரியாப் பயந்தவா. அவ மயங்கியே விழுந்திட்டா. ஒழுங்கான பங்கரும் இல்ல. என்ன செய்யிறது? நடக்கிறதக் காணவேண்டியதுதான்...

அப்பதான் அந்தச் ஷெல் விழுந்தது.....

..........?

அழுகை நிற்கவில்லை.

நித்தியகலா விம்மி விம்மி அழுகிறாள். 27 பேரை, அவளுடைய குடும்பத்தில இருந்த நெருங்கிய சொந்தக்காரர்கள் அத்தனை பேரையும் விழுங்கியிருக்கு அந்தச் ஷெல். அவளை அநாதையாக்கியிருக்கு அந்தச் ஷெல்.

இப்ப அவள் தனிமரம். அழகேஸ்வரி எண்ட துக்கமறிந்த இன்னொரு உறவைத்தவிர அவளுக்கு வேற ஆருமேயில்லை.

பத்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டாள் நித்தியகலா. இப்ப துக்கத்தைத் தின்றே காலத்தைக் கழிக்கிறாள். அவளுக்கு எப்பவும் அம்மம்மாவில நல்ல விருப்பம். அம்மம்மாவுக்கும் அவளில உயிர். ஆனால், விதி அவளுக்கு முன்னேயே அம்மம்மாவைக் கொன்றிருக்கு.

அவள் அழுகை ஓயச்சொன்னாள்.

'அம்மம்மா எனக்கு முன்னால செத்ததை என்னால மறக்கேலாமக் கிடக்கு...' அழுகிறாள். '........ அதப்போல அத்தையின்ர பிள்ளையள்... மாமாவின்ர பிள்ளையள்.... எல்லாம் சின்னப் பிள்ளையள்....'

அவளிடம் விவரம் கேட்டேன்.

சொன்னாள்.

அப்பா வீரய்யா சுப்பிரமணியம், அம்மா சுப்பிரமணியம் இராஜேஸ்வரி, அப்பப்பா அழகன் வீரய்யா, அப்பம்மா வீரய்யா பார்வதி, சித்தப்பா வீரய்யா றெங்கசாமி, அம்மம்மா லட்சுமி, அத்தை மங்கையற்கரசி, மாமா அழகுதேவன், மாமாவின் பிள்ளைகள் சுதாகரன், விஜயா, பெரியய்யா இராமசாமி, பெரியம்மா பாலசரஸ்வதி, அவர்களின் பிள்ளைகள் மோகனரூபி, மோகன தர்சினி, அத்தை நகுலா, மற்ற மாமா தவரூபன், அவர்களின் பிள்ளைகள் தசீபன், தரூபா, இன்னொரு அத்தை மங்களேஸ்வரி, பிள்ளைகள் ரஜீவன், ரஜீ, சுஜீபா, சஜீபன், சஜீபா, பெரியம்மாவின் மகன் சஜீவன்....

இப்பிடியொரு நீண்ட பட்டியல்.

அங்கே இறந்த எல்லாற்ற பெயரையும் அவளால் சொல்ல முடியவில்லை. துக்கம் அவளுடைய குரலைத் தடுத்து விட்டது. அதற்கு மேல் அவளால் எதுவும் சொல்ல முடியாது.

நித்தியகலாவுக்கு ஒரு சைக்கிள் கூட இல்லை. ஆஸ்பத்திரி, கடை, சந்தை, கோவில் என்று எல்லா இடத்துக்கும் நடந்தே போறாள். அவளால் நீண்ட தூரத்துக்கு நடக்க முடியாது. காலில் இன்னும் எடுத்து அகற்ற வேண்டிய ஷெல்லின் ஈயச் சிதறல்கள் இருக்கு.

அழகேஸ்வரி நித்தியகலாவை பிள்ளையாகவே பார்க்கிறார். நித்தியகலா அழகேஸ்வரியின் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் குடுக்கிறாள். தண்ணீரை எடுப்பதற்காக நாலு காணி தள்ளிப் போய் எடுத்து வருகிறாள். வீட்டில் வேலை செய்கிறாள்.

அவளைப் போல அம்மா அப்பா சகோதரர்களை இழந்து அயலில் அம்மம்மாவுடன் இருக்கும் இன்னொரு 16 வயதுப் பிள்ளையுடன் தோழியாகியிருக்கிறாள். அவளுடன் கூடுதலான நேரத்தைப் போக்குகிறாள். இருவரும் அந்தக் காய்ந்த வயல் வெளிகளில் பின்னேரங்களில் நடந்து திரிகிறார்கள். தங்களுக்குள் இருக்கும் கொதிக்கும் நினைவுகளை அவர்கள் பரிமாறிக்கொள்ளக்கூடும்.

இந்த இரண்டு பிள்ளைகளைப் போல பரந்தனில் இன்னும் பலர் இருக்கினம். அதிலும் கைகள் இல்லாமல், கால்கள் இல்லாமல் இருக்கிறவையின்ரை கதைகள் ஆகக் கொடுமை.

என்ன செய்வது? பூமியில் எத்தனை தலைமுறைகளாக யுத்தம் நடந்து கொண்டிருக்கு? அநீதிக்கும் நீதிக்குமிடையிலான போர் என்ற ஒரு விதியில் எத்தனை துயர விளைவுகள் இப்படி?

இதைப்போல இன்னும் எத்தனை தலைமுறைகள் அழியப் போகின்றன? எவ்வளவு பேர் அநாதரவாகத் திரியப் போகிறார்கள்? எங்கே இதற்கான முடிவுப்புள்ளி?

நித்தியகலா இப்ப அந்த இருட்டுக் கிராமத்துக்குள் என்ன செய்து கொண்டிருப்பாள்? யாரையெல்லாம் எதையெல்லாம் நினைத்துக் கொண்டிருப்பாள்?

நன்றி: 'பொங்கு தமிழ்'



'பரந்தனில் உடைந்து நொருங்கியிருக்கும் தண்ணீர்த்தாங்கியிருக்கு. செத்துப்போன நூற்றுக்கணக்கான மாடுகளின் எலும்பு எச்சங்கள் இருக்கு. கைகால்களை இழந்து போனவர்கள் இருக்கினம். கடனாளியள், பைத்தியமாகியவர்கள், அநாதைகள் எல்லாரும் இருக்கினம். அதிலும் இரண்டு கால்களையும் இழந்தவர்கள், இரண்டு கைகளையும் இழந்தவர்கள் எல்லாம் இருக்கினம். தாயையும் தகப்பனையும் இழந்து ஆரோட வாழுறதெண்டு தெரியாத பிள்ளையள் இருக்கு......

பூசையே இல்லாத கோயில்களிருக்கு. அழகான விளம்பரத் தட்டிகள் இருக்கு. இயக்கத்தின்ர அடையாளங்களாக சிதைந்துபோன எச்சங்கள் இருக்கு. முல்லைத்தீவுக்குத் திரும்புகிற சந்தியில லெப். கேணல் குட்டிசிறியின்ர நினைவாகச் செய்யப்பட்ட சிலையின்ர இடிக்கப்பட்ட சிதைவுகளிருக்கு....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# ஈழவிடுதலைப் போரியல் வரலாற்றின்

# நாயகன் கேணல் ராயு

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பலவாணர் நேமிநாதன் என்ற இயற்பெயருடைய கேணல் ராயு, புலிகளின் இந்தியா-03 பயிற்சிப் பாசறையில் தனது அடிப்படை இராணுவப் பயிற்சியைப் பெற்றிருந்தார். நேரிய பார்வை, எதையும் தீர்க்கமாக ஆராய்ந்தறியும் தன்மை, ஓயாத உழைப்பு, இவைகள் கேணல் ராயுவின் அடையாளங்கள். போராளிகளோ பணியாளர்களோ யாரையும் சாதுர்யமாக வேலை செய்விப்பதில் அவருக்கு நிகர் அவரேதான். கொடுக்கப்பட்ட பணிகள் உரிய நேரத்தில் செய்துமுடிக்கப்படாத பட்சத்தில் அவருடைய கோபங்களையும் பார்க்க முடியும்.

ஆனாலும் அதிலொரு நிதானமிருக்கும். கொடுக்கப்படும் தண்டனைகள் போராளிக்கு வேதனையைக் கொடுப்பதாக இருக்கக்கூடாது, பதிலாக விழிப்பைக் கொடுப்பதாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அவர் கற்றறிந்த விடயங்களை இயலுமானவரை அவரின்கீழ் செயற்படும் போராளிகளுக்குக் கற்றுக்கொடுக்க அவர் தவறியதில்லை. அதேபோல் போராளியொருவர் புதிய விடயம் ஒன்றை அவருக்குச் சொல்ல விளையும்போது ஒரு மாணவனின் மனநிலையோடு அவற்றைச் செவிமடுத்துக் கற்றுக்கொள்ளவும் அவர் தவறியதில்லை. அவருடைய இந்தக் குணாம்சமே பொறியியற்றுறைப் போராளிகளிடமிருந்து பல புதிய கண்டுபிடிப்புக்கள் வெளிவரக் காரணமாக அமைந்தது.

'முடியாது என்றால் முயற்சிக்கவில்லை' என்பதே கேணல் ராயுவின் வாக்காக இருந்தது. புதிய முயற்சிகளை ஆதரித்து ஊக்குவிக்கும் அதேவேளை தேவையற்ற பொருள் மற்றும் வள விரயங்கள் எவற்றையும் அவர் அனுமதித்ததே கிடையாது. அதுமட்டுமல்லாமல் அவர் எந்தவொரு வேலையிலும் முழுத்திருப்தி அடைந்துவிடமாட்டார்.

ஒவ்வொரு கருவியையும் எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதாகத்தான் அவருடைய அறிவுரைகள் எப்போதும் இருக்கும். போராளிகளிடம் வேலைகளை ஒப்படைத்துவிட்டு அந்த வேலைக்குரிய நுட்பங்கள் அப்போராளிகளின் சுய சிந்தனையிலிருந்து வெளிப்படவேண்டும் என்று எதிர்பார்ப்பார். அவ்வாறு அவர்களின் சிந்தனையில் உருவாகும் நுட்பங்களை அவர்களிடம் கற்றறிந்து அவற்றை மேம்படுத்துவது பற்றிக் கலந்தாலோசிப்பார்.

கேணல் ராயு தன்னுடைய போராட்ட வாழ்க்கையை லெப்.கேணல் ராதா அவர்களுடன் ஒரு தொலைத்தொடர்பாளராகத் தொடங்கினார். அவ்வாறு தொடங்கிய அவரது போராட்டச் செயற்பாடு அவரை ஒரு மாபெரும் சாதனையாளனாக உயர்த்தியது எனில் அவரின் அறிவினை நோக்கிய விடாத தேடலே மிகமுக்கிய காரணமாகும்.

> இது கேணல் ராயு அல்லது குயிலன் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு வாரமாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வளர்ச்சிக்குப் பெருந்துணையாக நின்ற இத்தளபதி புற்றுநோயின் காரணமாக 25-08-2002 அன்று சாவடைந்தார். கேணல் ராயுவால் உருவாக்கப்பட்ட ஒரு போராளியின் எண்ணப்பதிவில் இருந்து இந்தக் கட்டுரை வரையப்பட்டுள்ளது.
>
> (போராளிகள் தங்கள் மதிப்புக்குரிய, அன்புக்குரிய தளபதிகளை அவர்களுடைய பெயருடன் 'அண்ணை' என்ற சொல்லை சேர்த்து அழைப்பது வழக்கம். இந்தக் கட்டுரையை எழுதிய போராளியும் தனது பதிவில் ராயு அண்ணை என்றே விழித்திருந்தார். நாங்கள் வரலாற்று பதிவுக்காக அண்ணை என்று விழிக்கப்பட்ட இடங்களில் ராயு அவர்களுக்குரிய கேணல் என்ற தகுதி நிலையை சேர்த்திருக்கிறோம்)

விடுதலைப் போராட்ட வரலாற்றில் விடுதலைப் புலிகள் நிகழ்த்திய இமாலயச் சாதனைகள் பலவற்றின் பின்னால் கேணல் ராயுவின் வெளித்தெரியாத செயற்பாடுகள் பல இருந்தன. தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தொழிநுட்பப் பிரிவான 'கேணல் ராயு படைய அறிவியல் தொழிநுட்ப ஆய்வு நிறுவன'த்தின் ஆணிவேர் கேணல் ராயு என்றால் அது மிகையன்று.

விடுதலைப் புலிகளின் தொடக்ககாலத் தொலைத்தொடர்புத் துறையின் வளர்ச்சியில் கேணல் ராயுவின் பங்கு அளப்பரியது. ஒரு தொலைத்தொடர்பாளனாக இருந்தபோது தான் பெற்றுக்கொண்ட அனுபவம் மற்றும் தான் கற்றறிந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தொலைத்தொடர்புக்கான ஒரு தனித்துறையினைக் கட்டியெழுப்பும் பணியினை மேற்கொண்டார். உலகமே வியந்துபார்த்த விடுதலைப் புலிகளின் தொலைத்தொடர்புக் கட்டமைப்பின் வளர்ச்சியில் ராயு அண்ணையின் உழைப்பு ஒவ்வொரு கட்டத்திலும் மறைபொருளாக இருந்தது.

இந்தியப் படையினருடனான போர்க்காலப் பகுதி. மணலாற்றுக் காட்டுப்பகுதியில் இந்தியப் படையினர் தமது இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்த நேரம். இராணுவத்தினரின் நகர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காக தலைவரின் சிந்தனையில் உதித்த ஜொனி மிதிவெடிக்கு அப்போதிருந்த இக்கட்டான சூழ்நிலையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு வடிவம் கொடுத்த பெருமை கேணல் ராயுவையே சாரும்.

கடலிலே முதலாவது கடற்கரும்புலித் தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் தலைவர் அவர்களால் போடப்பட்டு அதற்கான பணிகள் கேணல் ராயுவிடமும் அப்போதைய கடற்புறா (கடற்புலிகள் என்று பெயர் பெறுவதற்கு முன் இயங்கிவந்த விடுதலைப் புலிகளின் கடல் நடவடிக்கை அணி) தளபதியிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. முன்னெப்போதும் நடத்தப்படாத ஒரு புதியவகைத் தாக்குதலாக அப்போது அந்தக் கடற்கரும்புலித் தாக்குதல் இருந்தது. வெடிபொருள் தொகுதியை எவ்வாறு படகில் பொருத்துவது, எந்த வடிவில் பொருத்துவது என்பன தெரியாமல் இருந்த விடயங்கள். ஆயினும் கேணல்ராயு அவற்றைச் செய்து முடித்தார்.

பலகட்டப் பரிசோதனைகளைச் செய்து அவற்றிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு வடிவத்தினைச் செய்து உருவாக்கியிருந்தார். கேணல் ராயு இதனை திறம்பட முடித்துவிடுவார் என்ற தலைவரின் நம்பிக்கையை நிரூபித்துக் காட்டினார். அன்றிலிருந்து தன்னுடைய இறுதிக் காலம்வரை கடற்கரும்புலிகளின் தாக்குதற் படகுகளிற்கான வெடிமருந்துத் தொகுதியினை மேம்படுத்துவதற்காக அயராது உழைத்துக் கொண்டிருந்தார்.

தொடக்க காலத்திலிருந்து மோட்டார் மற்றும் எறிகணைகளின் செயற்பாடுகளைக் கற்றறிந்து புலிகளின் சுயதயாரிப்பான 'பசிலன்' எனும் எறிகணைச் செலுத்தியின் தயாரிப்புக்கு அடித்தளமிட்டுக் கொடுத்தார். இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியபோதே புலிகளின் பசிலன் பீரங்கிகள் சிறிலங்கா இராணுவத்துக்கு சிம்ம சொப்பனமாக அமைந்திருந்தன. யாழ். கோட்டை, மாங்குளம் போன்ற முகாம்கள் கைப்பற்றப்பட்ட தாக்குதல்களில் இப்பீரங்கிகளின் பங்கு அளப்பரியன.

**'முடியாது என்றால் முயற்சிக்கவில்லை' என்பதே கேணல் ராயுவின் வாக்காக இருந்தது. புதிய முயற்சிகளை ஆதரித்து ஊக்குவிக்கும் அதேவேளை தேவையற்ற பொருள் மற்றும் வளவிரயங்கள் எவற்றையும் அவர் அனுமதித்ததே கிடையாது.**

**தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தொழிநுட்பப்பிரிவான 'கேணல் ராயு படைய அறிவியல் தொழிநுட்ப ஆய்வு நிறுவன'த்தின் ஆணிவேர் கேணல் ராயு என்றால் அது மிகையன்று.**



1996 ஆம் ஆண்டு 'ஓயாத அலைகள்-01' இராணுவ நடவடிக்கை மூலம் புலிகள் முல்லைத்தீவு இராணுவ முகாமைக் கைப்பற்றியபோது இரண்டு ஆட்லறிகள் புலிகள்வசம் வீழ்ந்தன. இயக்கத்தைப் பொறுத்தவரை அவை அப்போது பரிச்சயமற்ற பொருட்களாகவே இருந்தன. இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட மட்டுப்படுத்தப்பட்டளவிலான கையேடுகள் மற்றும் இதர அறிவியல் ஏடுகள் என்பவற்றின் உதவியுடன் அவ்விரு ஆட்லறிகளையும் பரிச்சயமிக்க போராயுதங்களாக மாற்றியதில் கேணல் ராயுவின் பங்கே முதன்மையானது. முதன்மையானது என்பதைவிட முழுமையானது என்பதே பொருத்தமாக இருக்கும்.

அக்காலப் பகுதியில் அவர் இரவில் நித்திரை கொள்வதே அரிதான விடயம். பொதுவாக ஆட்லறிகளுக்கான சூட்டுக் கட்டுப்பாட்டுத் தொகுதிகள் (Fire Control) அவ் ஆட்லறிகளின் தயாரிப்பு நிறுவனங்களினால் வழங்கப்பட்டவையாகவே இருக்கும். முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட சூட்டுக் கட்டுப்பாட்டுத் தொகுதியும் அவ்வாறானதொன்றே. நிறைவான ஆட்லறிச் சூட்டுக்கு அவற்றின் செயற்பாடு போதுமானதாகவே இருக்கும். ஆயினும் கேணல் ராயு அதனோடு திருப்திப் பட்டுவிடவில்லை. சுயமாக ஆட்லறிக்கான சூட்டுக் கட்டுப்பாட்டுத் தொகுதியினை உருவாக்கும் பணியில் போராளிகளை ஈடுபடுத்தினார். சாதாரண சூட்டுக்கட்டுப்பாட்டுத் தொகுதியைவிட மேம்பட்ட பல வசதிகளோடு சூடுகளை வேகமாகவும் மேலும் துல்லியமாகவும் வழங்கக்கூடியவாறு பல்வேறுபட்ட வசதிகளுடன் புதிய சூட்டுக்கட்டுப்பாட்டுத் தொகுதி அவரின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்டது.

சிறிலங்கா படையதிகாரிகளாலேயே விடுதலைப் புலிகளின் ஆட்டிலறி சுடுதிறன் வியப்பாகப் பார்க்கப்படும் அளவுக்கு அதை வளர்த்தெடுத்த பெருமை கேணல் ராயுவையே சாரும். வேகமான செயற்பாடு மற்றும் துல்லியமான சூடு என்பவற்றினூடாக பீரங்கிப் படையணியின் நம்பகத்தன்மை போராளிகளிடமும் வளர்ந்திருந்தது. 'ஜெயசிக்குறு எதிர்ச்சமர்', 'ஓயாத அலைகள்' என்ற குறியீட்டுப் பெயரிலமைந்த தொடர் நடவடிக்கைகள், ஆனையிறவுக்கான சமர் போன்றவற்றில் கேணல் ராயுவின் கட்டளையில் செயற்பட்ட பீரங்கிப் படையணியின் செயற்பாடு முக்கியமான பங்கினைப் பெற்றிருந்தது.

சிறிலங்கா அரசினை சமாதானம் நோக்கி இழுத்துவந்த சமரான தீச்சுவாலை முறியடிப்புச் சமரில் எதிரியின் தீச்சுவாலையை எதிரியை நோக்கியே திருப்பிவிட்டதில் ஒரு புறத்தில் கேணல் ராயுவின் கட்டளையில் செயற்பட்ட பீரங்கிப்படை பெரும்பங்காற்றியது எனில் மறுபுறத்தில் அவரது சிந்தனையில் உருவான கவச எதிர்ப்புக் கண்ணிகள் தம்பங்கினையும் ஆற்றின.

அப்போதிருந்த சூழலில் கண்ணிவெடிகளை உருவாக்குவதற்குத் தேவையான பொருட்களை உடனடியாகப் தருவிக்கமுடியாத நிலை. கேணல் ராயுவின் சிந்தனையோ கண்ணிவெடி தயாரிப்பதற்கு என்ன பொருட்கள் தேவையென்ற நிலையிலில்லாமல், இருக்கும் பொருட்களைக் கொண்டு எவ்வாறு கண்ணிவெடி தயாரிக்கலாம் என்பதாக இருந்தது. பல்வேறு காரணங்களால் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்ட எதிரியின் எறிகணைகள் எதிரிகளின் கவசங்களையே குறிவைக்கும் கண்ணிவெடிகளாக உருவெடுத்தன. ஆனையிறவை மீளக் கைப்பற்றும் எதிரியின் கனவு அப்போது தகர்க்கப்பட்டது.

1992 ஆம் ஆண்டின் நடுப்பகுதி. யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பிரிவுகளுக்குரிய போராளிகள் சிலர் சிறுத்தைப் படையணியின் பயிற்சிக்குச் செல்வதற்காக மாவட்டத் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தோம். அங்குதான் சிறுத்தைப் படையணியின் முதலாவது ஆண்கள் அணிப் போராளிகளுக்கான தெரிவு நடைபெற்றது. சிறுத்தைப் படையணியின் சிறப்புத் தளபதியாகவிருந்த கேணல் ராயு படையணிக்கான போராளிகளைத் தெரிவு செய்வதற்கு வந்திருந்தார். அன்று அவரின் மூலம் தெரிவாகி, சிறுத்தைப்படையணி, பின்னர் பொறியியற்றுறை ஆகியவற்றில் அவரின் கீழ் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. ஒரு தந்தையாய், சகோதரனாய் அவர் போராளிகளை வழிநடாத்தினார்.

ஒவ்வொரு விடயங்களைக் கவனித்துக்கொள்வதற்கும் அவர் பொறுப்பாளர்களை நியமித்திருந்த போதிலும், போராளிகளுக்கான உணவு, உடை என்று அனைத்து விடயங்களிலும் கவனமெடுத்து நடந்துகொண்டார். போராளிகள் தமக்குள் கதைக்கும் போது அவரை 'அப்பா' என்றே விழிப்பது வழமை. அந்தளவிற்கு அவர் ஒரு தந்தையாக போராளிகள் மனதில் இடம்பிடித்திருந்தார். அவருக்குத் தலைவரால் வழங்கப்பட்டிருந்த பல்வேறுபட்ட பணிகளுக்கு மத்தியில் தன்னால் வளர்த்தெடுக்கப்படும் போராளிகள் என்ற கரிசனையோடு எம்மை உருவாக்கிய விதம் என்றுமே நெஞ்சை விட்டகலா நினைவுகள்.

1993ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி. தென்மராட்சியில் ஓரிடத்தில் எமக்கான சிறப்புப் பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. திசைகாட்டி நகர்வுப் பயிற்சிகளை நாம் முகாமிற்கு வெளியேதான் மேற்கொள்வதுண்டு. தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் காணப்படும் சதுப்பு நிலக் காடுகளே இவ்வாறான நகர்வுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. நகர்வுகளுக்கான தொடக்க மற்றும் முடிவுப் புள்ளிகளாக இப்பகுதிகளில் அமைந்திருக்கும் சிறிய கோவில்களே தெரிவுசெய்யப்படும். அனைத்து அணிகளதும் நகர்வுகளை தானே நேரில் வந்து கண்காணிப்பதுடன் அந்தந்த இடங்களிலேயே நகர்வு உத்திகளைக் கற்றுத்தருவார். நகர்வில் ஈடுபடும் போராளிகளுக்கான உணவுப்பொருட்களை தானே எடுத்துவருவார். இருந்தபோதிலும், போராளிகளைக் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டிக்கவும் தண்டிக்க வேண்டிய இடத்தில் தண்டிக்கவும் அவர் தவறுவதில்லை.

ஒருமுறை எமது நகர்வு புத்தூரிலிருந்து தென்மராட்சியின் வரணிப்பகுதி நோக்கி இருந்தது. இவ்விரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட சதுப்புநிலக் காடுகளே நகர்வுப் பகுதியாக பயிற்சி ஆசிரியரால் தேர்வுசெய்யப்பட்டிருந்தது. எமது நகர்வுக்காக ஒவ்வோர் அணிக்கும் குறிப்பிட்டளவு குடிநீரே தரப்படும். மேலதிகத் தண்ணீரை நாம் எங்கும் பெறக்கூடாது என்பது கட்டளை. அன்று எமது நகர்வுகளைக் கண்காணிப்பதற்காக வந்த கேணல் ராயுவின் வாகனம் சேற்றில் புதைந்துவிட எமது அணியினரே அதனை வெளியெடுக்கும் பணியினையும் செய்யவேண்டியதாகிவிட்டது. அந்தக் களைப்பின் காரணமாக எமக்கு வழங்கப்பட்ட தண்ணீரையும் குடித்து முடித்துவிட்டோம். ஆனால் போகவேண்டிய மீதித்தூரமோ இன்னும் அதிகமிருந்தது. இடையிலிருந்த கோவில் கிணறு ஒன்றில் மேலதிக தண்ணீரை நிரப்பிவிட்டோம். பயிற்சி ஆசிரியர் தண்டனை வழங்கினாலும் கேணல் ராயு காப்பாற்றிவிடுவார் என்று எமக்கு நாமே சமாதானமும் சொல்லிக்கொண்டோம்.

பயிற்சி ஆசிரியருக்கும் விடயம் போய்விட்டது. நாம் காரணத்தைக்கூறி தண்டனையிலிருந்து தப்பலாம் என முயற்சித்தோம். ஆனால் கேணல் ராயுவின் பதில் எம்மால் நிராகரிக்க முடியாததாக இருந்தது. அவர் கூறியது இதுதான். 'நீங்கள் சிறப்புப் படையணிப் போராளிகள். நீங்கள் நடவடிக்கையில் ஈடுபடும் இடங்களில் போதியளவு வளங்கள் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது. நீங்கள் நடவடிக்கையில் ஈடுபடும்போது திட்டமிடப்படாத எதிர்பாராத பணிகள் காத்திருக்கலாம். அதற்கெல்லாம் உங்களை நீங்கள் தயார்ப்படுத்த வேண்டுமாயின் நீங்கள் இவ்வாறான சாக்குப்போக்கு

(தொடர்ச்சி 25-ம் பக்கம்)






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





பயணக் கட்டுரை

அத்தியாயம்-13

# இஸ்ரேலில் இருந்து ஈழம் வரை

- நிராஜ் டேவிட் -

இஸ்ரேலிய இனம் எதற்காக தமது தேசத்தை விட்டுப் புறப்பட்டார்கள், மீண்டும் தமது விடுதலையை அவர்கள் எவ்வாறு பெற்றார்கள் என்று பார்ப்பதற்கு முன்னதாக, இஸ்ரேலியர்களுடைய வாழ்க்கை வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த மற்றொரு விடயம் பற்றி இந்த வாரம் பார்க்க இருக்கின்றோம்.

அதுதான் யூதர்களுக்கும் அரேபியர்களுக்கும் இடையிலான உறவு.

இஸ்ரேலியர்களுக்கும், அரேபியர்களுக்கும் இடையில் காணப்படுகின்ற உறவு நிலை பற்றியும், இந்த இரண்டு தரப்பினருக்கும் இடையில் இத்தனை விரோதம் வளரக் காரணமாக அமைந்த விடயம் பற்றியும் இந்த வாரம் பார்ப்போம்.

இஸ்ரேலியர்களுடைய வாழ்க்கை வரலாறு ஆபிரகாம் என்ற ஒரு மனிதனில் இருந்துதான் ஆரம்பமானது என்று கடந்த வாரங்களில் பார்த்திருந்தோம்.

ஆபிரகாமின் கதையையும் பார்த்திருந்தோம்.

அரேபியர்களின் வரலாறும் இந்த ஆபிரகாம் என்ற மனிதனில் இருந்துதான் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஈராக்கின் ஒரு பகுதியில் வசித்துவந்த ஆபிரகாம் என்ற மனிதருடன் பேசிய கடவுள் நெடுந்தொலைவில் உள்ள காணான் தேசத்தை அவரது சந்ததிக்குத் தருவதாகக் கூறியதாக கிறிஸ்தவர்களின் வேதாகமம், இஸ்லாமியர்களின் திருக்குரான், யூதர்களின் தோரா போன்ற மத நூல்கள் கூறுகின்றன. கடவுளின் கட்டளைப்படி தனது தேசம், சொந்த பந்தங்களை விட்டுப் புறப்பட்ட ஆபிரகாம், பல நூறு மைல் தொலைவு பிரயாணம் செய்து காணான் தேசம் வந்து சேர்ந்தார். அன்றைய அந்தக் காணான் தேசம்தான் தற்போதைய இஸ்ரேல்.

ஆபிரகாமின் சந்ததியை பூமியில் உள்ள மணல்களைப்போல் பெருக்கி ஆசீர்வதிப்பதாக கடவுள் ஆபிரகாமிடம் கூறிவிட்டார். ஆனால் ஆபிரகாமுக்கோ பிள்ளைகள் கிடையாது. அவருக்கு அந்த நேரத்தில் 85 வயது. மனைவி சாராளும் ஒரு 75 வயது மூதாட்டி. பிள்ளை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பமில்லை. இனி எங்கிருந்து அவருக்கு சந்ததி உருவாகி, அந்தச் சந்ததி விருத்தியாகி, ஆசீர்வதிக்கப்படுவது?

சுமார் பதினைந்து வருடங்கள் கழித்து, அதாவது ஆபிரகாமுக்கு 100 வயதும் மனைவி சாராளுக்கு 90 வயதும் ஆக இருந்தபோது, கடவுள் கொடுத்த வாக்கின்படி ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அந்த பிள்ளையின் பெயர் ஈசாக். அந்த ஈசாக்கின் இளைய குமாரன் இஸ்ரேல். அவரது சந்ததிதான் இஸ்ரேலியர்கள். இந்த விடயங்கள் எல்லாம் நாம் முன்னர் விரிவாகப் பார்த்திருந்தோம்.

இதில் அரேபியர்களுடைய உதயம் என்பது, ஆபிரகாமிற்கு 85 வயதிற்கும் 100 வயதிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்றிருந்த ஒரு சுவாரசியமான சம்பவம்.

'உன் சந்ததியைப் பெருக்குவேன் - அதுவும் பூமியில் உள்ள மணல்களைப் போல் பெருக்குவேன்' என்று கடவுள்பாட்டுக்கு ஆபிரகாமுக்கு வாக்கு கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார். ஆபிரகாமுக்கோ அந்த நேரத்தில் 85 வயது. சாராளுக்கோ 75 வயது. பிள்ளை பிறப்பதற்கான சந்தர்ப்பமே இல்லை. ஆபிரகாம் தலையைப் போட்டு பிய்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு பொறுக்காத சாராள், ஆபிரகாமுக்கு ஒரு ஐடியா கொடுத்தாள்.

'நீங்கள் இரண்டாவதாக ஒரு திருமணம் செய்து அந்தப் பெண் மூலமாக உங்களது சந்ததியை பெருக்கலாமே?' இதுதான் சாராள் கொடுத்த ஐடியா.

ஆபிரகாமுக்கு அதில் பெரிய உடன்பாடு இல்லை. அவரது மனைவி சாராள் மீது அவருக்கு மிகவும் பிரியம். ஆனாலும் கடவுள் கொடுத்த ஆசீர்வாதத்தைச் சுவீகரிப்பதானால் எதையாவது செய்துதான் ஆகவேண்டும். சாராளுக்கோ 75 வயது. இனி பிள்ளை பெற்றுக்கொள்ள சான்சே இல்லை. கடைசியில் சாராளின் ஐடியாவை ஆபிரகாம் ஏற்றுக்கொண்டார்.

ஆபிரகாம் வீட்டில் இருந்த எகிப்து தேசத்தைச் சேர்ந்த அடிமைப் பெண்ணுடன் ஆபிரகாமைச் சேர்ந்து குழந்தையைப் பெற்றுக்கொள்ளும்படி சாராள் யோசனை கூறினாள். ஆபிரகாமும் அப்படியே நடந்தார்.

அந்த எகிப்திய அடிமைப் பெண்ணின் பெயர், ஆகார் (ஹஜிரா)

சாராளின் யோசனைப்படி, எகிப்திய அடிமைப் பெண்ணாகிய ஆகார் உடன் ஆபிரகாம் சேர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









ஒரு குமாரனைப் பெற்றெடுத்தாள்.

அவனது பெயர் இஸ்மவேல் (இஸ்மாயில்).

அதாவது கடவுளின் கட்டளைப்படி ஆபிரகாம் தனது உண்மையான மனைவி சாராளுடன் இணைந்து பிள்ளையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக, அவசரப்பட்டு தமது சொந்த மூளையின்படி செயற்பட்டு, அதனால் பிறந்த ஒரு குழந்தைதான் இந்த இஸ்மவேல்.

இந்த இஸ்மவேலின் சந்ததிகள்தாம் இன்றைய அரேபியர்கள்.

கொஞ்சம் கொச்சையாகக் கூறுவதானால், இஸ்ரேலியர்களைப் பொறுத்தவரையில் அரேபியர்கள் 'வைப்பாட்டியின் பிள்ளைகள்', 'முறைகேடான பங்காளிகள்', 'தமது அடிமைப் பெண்ணின் வாரிசுகள்'.

அரேபியர்களைப் பொறுத்தவரையிலோ 'தாம் ஆபிரகாமின் முதல் வாரிசுகள்', 'தமது தந்தையாகிய ஆபிரகாமிற்கு கடவுள் கொடுத்த ஆசீர்வாதத்தை சுவீகரிக்கும் உரித்துடையவர்கள்'.

இப்படிப்பட்ட எண்ண ஓட்டத்தைத் தமதாகக் கொண்ட இந்த இரண்டு தரப்பினரும் எப்படித்தான் ஒற்றுமையாக வாழ்வது?

இன்று மத்திய கிழக்கில் இடம் பெறுகின்ற அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணம் இதுதான்.

இதற்கிடையில் பைபிளிலும், யூதர்களின் தோராவிலும், இஸ்லாமியர்களின் திருக்குரானிலும் சிறிய சிறிய மாற்றங்களுடன் காணப்படுகின்ற இந்தக் கதையில் மற்றொரு சுவாரசியமான சம்பவமும் இருக்கின்றது.

ஆபிரகாமிற்கும் எகிப்திய அடிமைப் பெண்ணான ஆகாருக்கும் இடையில் ஆபிரகாமின் உண்மையான மனைவி சாராள் பிணைப்பை ஏற்படித்தியிருந்தாள் அல்லவா? - அந்த நேரத்தில் இடம் பெற்ற சம்பவம் இது.

ஆபிரகாமுடன் ஆகார் சேர்ந்து இருக்க ஆரம்பித்ததும், அவள் கொஞ்சம் பெருமைப்பட ஆரம்பித்திருந்தாள். கொஞ்சம் தலைக்கனமும் அவளுக்கு ஏற்பட ஆரம்பித்து விட்டது. ஆகார் தனது அடிமைப் பெண்தானே என்று அவளை சாதாரணமாக நினைத்திருந்த சாராளுக்கு பொறாமை.

சக்களத்திப் போட்டி தவிர்க்க முடியாததாகிப் போனது.

ஆகார் கற்பம் தரித்ததும் இந்தச் சக்களத்தியச் சண்டை மேலும் வலுவடைந்தது.

என்ன இருந்தாலும் சாராள் ஆபிரகாமின் முதல் மனைவி. முதலாளி அம்மா. ஆகாரால் நின்று பிடிக்க முடியவில்லை.

வீட்டை விட்டு சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறிவிட்டாள்.

வழியில் ஆகார் சென்றுகொண்டிருக்கும் போது கடவுளுடைய தூதன் அவளுக்குத் தோன்றி, அவளை திரும்பவும் ஆபிரகாம் வீட்டிற்குச் சென்று சாராளுக்கு அடங்கி வாழும்படி கட்டளையிட்டான்.

அதுமட்டுமல்ல, ஆகாரின் கருவில் இருந்த இஸ்மவேலுக்கு ஒரு பெரிய ஆசீர்வாதத்தையும் அந்த தூதன் வழங்கினான்.

அந்த ஆசீர்வாதம் கொஞ்சம் வில்லங்கமான ஆசீர்வாதம்.

'உன் சந்ததியை நான் பெருகப் பண்ணுவேன். அது பெருகி, எண்ண முடியாததாய் இருக்கும். தற்பொழுது கற்பவதியாய் இருக்கின்ற நீ ஒரு குமாரனைப் பெறுவாய். அவனுக்கு இஸ்மவேல் (இஸ்மாயில்) என்று பெயரிடுவாய். அவன் துஷ்ட மனுசனாய் இருப்பான். அவனுடைய கை எல்லா மனுஷருக்கும் விரோதமாயும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாயும் இருக்கும். தன் சகோதரன் எல்லாருக்கும் விரோதமாகவும் அவன் குடியிருப்பான்' என்று அந்த தேவ தூதன் வாக்குத்தத்தம் கொடுத்தான்.

இஸ்மவேலின் சந்ததியினராகிய அரேபியர்கள் அந்த தேவ தூதன் வழங்கிய ஆசீர்வாதத்தின் பிரகாரம் பல்கிப் பெருகி எண்ண முடியாத சந்ததியாக இருக்கின்றார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அந்த தேவ தூதன் கூறியதன் படி அவர்கள் துஷ்டர்களாக, எல்லா மனுஷருக்கும் விரோதமாக இருக்கின்றார்களா என்பது பற்றிப் பார்ப்பது இந்த கட்டுரையின் நோக்கமல்ல.

நாம் இஸ்ரேலியர் பெற்ற விடுதலை பற்றியே இந்தத் தொடரில் ஆராய இருப்பதில், அடுத்த வாரம் முதல் அந்த விடயத்திற்குச் செல்வோம்.

தொடரும்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மனித உரிமைப் போக்கிரிகளும் 12000 போராளிகளும்

கடந்தவாரம் அயல்நாடொன்றில் இருந்து அவசர அழைப்பு.

'அண்ணே நம்ம பாலா அண்ணனைப் பத்தி செய்தி ஒண்ணு வந்திருக்கு.. பாத்தீங்களா? அவர் உயிரோடுதான் இருப்பார் போலிருக்கு... இராணுவ முகாமில் எடுத்த புகைப்படத்தோடு இன்னும் பல தகவல்கள் வெளியாகி இருக்கு...' என்றபடி நீண்டது அந்த உரையாடல்.

என்னது?.. தோழர் பாலா இன்னமும் இருக்கிறாரா...?

அட... அப்படியானால் இதற்கு முன்னர் வந்த செய்திகள் தவறானதுதானா...? நெஞ்சைப் பிளக்கும் சோகங்களுக்கு மத்தியிலும் ஒரு மெல்லிய ஒளிக்கீற்று...

அந்த முனையில் இருந்து நண்பர் பேசப்பேச என் நினைவுகள் இருபத்தி ஐந்து ஆண்டுகள் பின்னே பயணிக்க ஆரம்பித்து விட்டது. ஈழ விடுதலைக்காகப் போராட களத்தில் குதித்த இயக்கங்களில் ஒன்றுதான் ஈரோஸ். அதனைத் தமிழில் ஈழப் புரட்சிகர அமைப்பு என அழைப்பார்கள்.

சமூகத்தைப் பற்றிய சீரிய புரிந்துணர்வும்... உலக நாடுகளது உரிமைப் போராட்டங்களைப் பற்றியும் அதனது படிப்பினைகளைப் பற்றிய துல்லிய பார்வையும் கொண்ட அமைப்புதான் அந்த ஈரோஸ். தனியான தலைவர் என்று எவருமில்லை அந்த இயக்கத்திற்கு. கூட்டுத் தலைமைதான். அப்படி அதில் ஒரு பொறுப்பாளராகத்தான் தோழர் பாலகுமாரன் அறிமுகம் எனக்கு.

எளிமை என்றால் அதற்கு இன்னொரு பெயர் உண்டு. அதுதான் க.வே.பாலகுமார்.

ஆர்ப்பரிக்காத அரசியல்...

எதிலும் தன்னை முன்னிறுத்திக் கொள்ளாத பெருந்தன்மை...

இந்தியப் பிரதமரையே முதல் நாள் சந்தித்துவிட்டு வந்தாலும் மறுநாள் ஒரு ஓட்டை சைக்கிளில் கோடம்பாக்கத்துத் தெருக்களில் சுற்றிவரும் எளிமை...

இதுதான் தோழர் பாலா.

ஒருமுறை பத்திரிகை ஒன்றின் நேர்காணலுக்காக பாலாவைச் சந்தித்து முடித்த பின்னர் மிகுந்த தயக்கத்தோடு அவருடைய புகைப்படம் ஒன்றினைக் கேட்கிறேன். 'நம்ம சனங்களுக்கு எங்கட கருத்துக்கள்தான் முக்கியமே தவிர படங்களல்ல...' என மிக மென்மையாக மறுக்கிறார் பாலா. அதன்பிறகு சுந்தர், பார்த்திபன் என யாரைக்கேட்டாலும் அது கிடைக்காது என எனக்குத் தெரியும். வேறு வழியின்றி நடையைக் கட்டுகிறேன்.

அதன்பிறகு அந்தத் தோழனுடன் எழுத்தாளன் என்ற வகையில் எண்ணற்ற சந்திப்புகள்...

ஈழத்தில் இருந்து வந்திருக்கும் ஏதிலிகளால் (அகதிகள்) ஏற்பட இருக்கும் கலாச்சார மாற்றங்கள்...

பொறுப்பற்ற சில குழுக்களால் ஏற்பட இருக்கும் சில சட்ட ஒழுங்கு சிக்கல்கள்...

நாளை மலரப்போகும் ஈழம் எதிர்கொள்ள வேண்டிய பொருளாதார சவால்கள்... என அனைத்தையும் முன்கூட்டியே தெளிந்த பார்வைகளோடு விளக்கிச் சொல்வார் க.வே.பாலகுமாரன்.

அமைச்சரைச் சந்தித்தாலும் சரி... கோடம்பாக்கம் பெஸ்ட் ஆஸ்பத்திரி அருகிலுள்ள ஒரு டீக்கடைக்காரரைச் சந்தித்தாலும் அதே கனிவு... அதே அன்பு... அதே நிதானம், அதுதான் பாலா.

1990க்குப் பிற்பாடு அந்த ஈரோஸ் இயக்கம் கலைக்கப் பட்டதும்... அதில் கொஞ்சம் பேர் புலிகளுக்குப் போனதும்... இன்னும் கொஞ்சம் பேர் தனித்து இயங்கியதும்... இந்த இரண்டிலும் ஒப்புதலில்லாத கொஞ்சம் பேர் புலம்பெயர்ந்து போனதும் பின்னர் நடந்த நிகழ்வுகள். அதில் புலிகளோடு போன பிரிவில் இருந்தார் பாலா.

ஈரோஸில் பங்கெடுத்தாலும் சரி... புலிகளோடு அரசியல் பணிகளைப் பகிர்ந்து கொண்டாலும் சரி... எங்கிருந்தாலும் அதனைச் செழுமைப்படுத்தும் விதத்தில் பயனுள்ளதாகத்தான் பாலா இருப்பார் என்பதனைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் புரிந்துகொண்டோம் நாங்கள். அதன் பிற்பாடு அவரைச் சந்திக்க விடாது காலம் தனது கனத்த திரையைப் போட்டு மூடி விட்டது.

கடந்த ஆண்டு திட்டமிட்டு நடத்தப்பட்ட ஈழப்படுகொலைகளில் கொத்துக் கொத்தாய் குண்டுவீசிக் கொல்லப்பட்ட மக்கள் எத்தனை ஆயிரம் பேர்...?

கணவனைப் பறிகொடுத்து பரிதவிப்பவர்கள் எத்தனை ஆயிரம் பேர்...?

பெற்றோரைப் போருக்கு தூக்கிக் கொடுத்துவிட்டு பரிதவிக்கும் மழலைகள் எத்தனை ஆயிரம் பேர்...?

இந்தப் பேரவலத்தில் எங்கே போய் எம் பாலாவைத் தேட? அதை அவரும் விரும்பமாட்டாரே...

ஆனாலும் அவ்வப்போது சேதிகள் வந்து கொண்டுதான் இருந்தது.

'டிசம்பரிலேயே குண்டுத் தாக்குதலுக்கு ஆளான அவர் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக உடல் நலம் தேறி வந்த நிலையில் மே 17 ஆம் தேதியன்று முன்னணிப் போராளிகள் சிலரை அழைத்துக் கொண்டு வெள்ளைக் கொடியுடன் சரணடைந்துவிட்டார்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'கொழும்புக்கு கொண்டு சென்று விட்டார்கள்...

'சிறுகச் சிறுக சித்திரவதை செய்து கொல்லும் 'நாலாவது மாடி'க்கு கூட்டிப்போய் விட்டார்கள்... என எதுவும் உறுதிப்படுத்தப்படாத எண்ணற்ற சேதிகள்... நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்காகவே உழைத்த அந்த நல்ல மானுடனையும் மறக்கத் தொடங்கினோம்.

முள்ளிவாய்க்காலில் தப்பி... முள்வேலி முகாம்களில் சிக்கியவர்களைப் பற்றி மட்டுமே எங்களைப் போன்றவர்கள் பேசத் தொடங்கினோம்...

அப்படியாயின் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த அந்தப் பனிரெண்டாயிரம் போராளிகள்?

தன் வீடு...

தன் குடும்பம்... தனது கல்வி...

தனது காதல்... என சகலத்தையும் துறந்து இந்த மக்களின் விடிவுக்காகவும் இந்த மண்ணின் விடுதலைக்காகவும் ஆயுதம் தரித்தார்களே...

அவர்களை அப்படியே விட்டுவிட வேண்டியதுதானா?

மக்களையே சிங்கள அரசு சின்னா பின்னப்படுத்தும்போது அந்தப் போராளிகளை எந்தெந்தவகைகளில் எல்லாம் சித்திரவதை செய்வார்கள்?

'நரகம்' என்றால் என்னவென்பதற்கான அர்த்தத்தினை இக்கட்டுரை எழுதும் நொடி தொடங்கி நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த நொடி வரைக்கும் சந்தித்துக் கொண்டிருக்குமே அந்த ஜீவன்கள்...

சுயநலமற்ற அந்த ஜீவன்களின் விடுதலைக்காக யார் குரல் கொடுக்கப் போகிறார்கள்?

போரில் சரண் அடைந்த எந்தப் போராளியாக இருந்தாலும் அவர்கள் கண்ணியத்துடனும், மனித மாண்புடனும் நடத்தப்பட வேண்டும் என்கிற ஐ.நா.வின் அடிப்படை விதிகள் ஆகட்டும்... ஜெனிவா உடன்படிக்கைகள் ஆகட்டும்... போரியல் நியதிப்படி சிங்கள அரசு கடைப் பிடிக்கிறதா இல்லையா என்பதை யார் கண்காணிக்கிறார்கள்?

மக்கள் இருந்த முகாம்களைப் பார்வையிட்டுவிட்டு 'பாலும் தேனும் இருபுறமும் பெருக்கெடுத்து ஓடுகிறது' எனச் சொல்கிற மனித உரிமைப் புடுங்கிகள் எவராவது சரணடைந்த போராளிகள் இருக்கும் முகாம் பக்கமாவது எட்டிப் பார்த்தார்களா?

இரத்தமும் சிறுநீரும் மலமும் ஒரு சேர ஓடும்... ஓலங்கள் ஓயாத அந்த சித்ரவதைக் கூடங்கள் குறித்து சிந்தித்தாவது பார்த்தார்களா?

அவர்கள் கிடக்கட்டும் நாமாவது சிந்தித்தோமா?

முதல் உலகப் போரிலும், இரண்டாம் உலகப் போரிலும் சரண் அடைந்த போர் வீரர்கள் மனிதகுலம் வெட்கித் தலைகுனியும் வகையில் எவ்வாறெல்லாம் நடத்தப்பட்டார்கள்? சிறுகச் சிறுகக் கொல்லப்பட்டார்கள் என்கிற வரலாற்றையெல்லாம் நாவல்களாகவும்... திரைப்படங்களாகவும் இன்றை வரை பார்த்துப் பரிதவித்துக் கொண்டிருக்கிற நம்மில் எத்தனை பேர் சரண் அடைந்த அந்தப் 12000 பேருக்காகக் குரல் கொடுத்திருக்கிறோம்?

அவர்கள் யாருக்காக போராளிகள் ஆனார்கள்?

நாம் பாதுகாப்பாக பிறந்தநாள் கொண்டாடுவதற்காக பதுங்கு குழிகளுக்குள் நின்று பாதுகாத்தவர்களல்லவா அந்தப் பிள்ளைகள்?

போரியல் நியாயங்களின்படி எத்தனை பேர் சரண் அடைந்தார்கள்?

தெரியாது...

எத்தனை பேர் மிஞ்சியிருக்கிறார்கள்?

தெரியாது...

எதற்காவது பட்டியல் இருக்கிறதா?

கிடையாது...

இன்று பாலகுமாரைப் பற்றிப் பேசுவோம்...

நாளை யோகியைப் பற்றிப் பேசுவோம்...

நாளை மறுநாள் புதுவை இரத்தினதுரையைப் பற்றிப் பேசுவோம்...

அப்புறம்?

இதோ இராணுவப் பகுதியில் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் தோழர் பாலா தனது மகனுடன் இருக்கும் காட்சி. இதனை லங்கா கார்டியன் பத்திரிகை வெளியிட்டு...

சரண் அடைந்த பின்னர் எடுக்கப்பட்ட இப்படத்திற்குப் பிறகு என்னவானார் பாலா?

அவருடன் சரண் அடைந்தவர்கள் கதி என்ன?

உயிருடன் இருந்தால் இப்போது அவர்கள் எங்கே?

அப்படி உயிரோடு இல்லாவிடில் சரண் அடைந்த போர்க் கைதிகளைக் கொல்வது போர்க்குற்றம் ஆகாதா? என பல்வேறு கேள்விகளை எழுப்பி இருக்கிறது.

இப்படி கேட்பாரற்ற அநாதைகளாய்ப் போன அவர்களில் இருந்து ஒவ்வொரு ஜீவனாய் இழந்து கொண்டே இருக்கப் போகிறோமா நாம்?

அல்லது சரணடைந்த ஜீவன்களுக்கான நேர்மையான விசாரணையை...

சித்திரவதைகளற்ற கண்ணியமான பாதுகாப்பினை...

தொலைந்தவர்கள் போக இருப்பவர்கள் பட்டியலினை... வலியுறுத்தி வீதியில் இறங்கப் போகிறோமா?

இதுதான் களத்திலும்... புலத்திலும்... இருக்கும் நம் போன்றோர் முன்னிருக்கும் பிரதான கேள்வி.

நாளை நமது முழக்கம் :

ஒன்று விசாரணை செய். அல்லது விடுதலை செய்

என்பதாக இருப்பது மிக நல்லது.

அதுதான் எஞ்சியிருக்கும் உயிர்களையாவது காப்பாற்ற நம் முன்னே உள்ள ஒரே வழி.

எனக்குத் தெரிந்து அவர்கள் செய்த குற்றம் ஒன்றே ஒன்றுதான்:

அது, தன்னைத் தொலைத்து இந்த மண்ணை மீட்க நினைத்ததுதான்.

**- தமிழகத்திலிருந்து பாமரன்**

# லெப். கேணல் தவம் நினைவு குறும்படவிழா

தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்சு லெப். கேணல் தவம் நினைவாக 2வது தடவையாக நடாத்திய குறும்படவிழா 28.08.10 அன்று பாரிசில் சிறப்பாக நடைபெற்றது.

லெப். கேணல் தவம் திருவுருவப்படத்துக்கான மலர் மாலையினை விழாவின் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த மூத்த கலைஞர் ஏ. ரகுநாதன் அவர்கள் அணிவிக்க ஈகைச்சுடரினை கப்டன் சூரியதேவனின் சகோதரர் ஏற்றிவைத்தார்.

இவ்வாண்டு இப்போட்டியின் நடுவர்களாக திருமதி. குளோறியானா செல்வநாதன் (நடுவர், சர்வதேச திரைப்பட விழாக்கள், ஆவணபடத் தயாரிப்பாளர்), Arne Brücks, M.A. (விரிவுரையாளர், சினிமா, தொலைக்காட்சி அக்கடமி Potsdam Berlin), திரு. வாசுதேவன் (கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், பிரான்ஸ்) ஆகியோர் பணியாற்றினர்.

நோர்வே, பிரித்தானியா, சுவிஸ், பிரான்சு ஆகிய நாடுகளில் இருந்து இப்போட்டியில் கலந்துகொண்ட படங்களில் இறுதிச் சுற்றுக்குத் தெரிவான பன்னிரண்டு படங்கள் விழாவில் திரையிடப்பட்டதுடன் போட்டியில் கலந்துகொண்ட அனைத்துப் படங்களுக்கும் பங்குபற்றலுக்கான தவம் குறும்படவிழா நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் படங்களில் பணியாற்றிய கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இவ்வாண்டு தவம் குறும்படவிழாவில் சிறப்பு நிகழ்வாக பவளவிழா காணும் மூத்த கலைஞர் திரு.ஏ.ரகுநாதன் அவர்களுக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. ஈழத்தமிழ் சினிமாத் துறையின் ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை இத்துறையில் அவர் செய்து வரும் அனைத்து பணிகளுக்கும் மதிப்பளித்து இவ் உயர்





விருதினை தமிழர் கலைபண்பாட்டு கழகம் பிரான்சு வழங்கியது.

நடுவர்களின் கருத்துரையினைத் தொடர்ந்து இறுதியாக 2010 தவம் குறும்படவிழாவின் முதற் சிறந்த படங்களுக்கான பரிசுகள் அறிவிக்கப்பட்டது.

சிறந்த 3வது படமாக இ. ரமணன் (பிரான்சு) இயக்கிய 'கலாச்சாரம்' குறும்படம் தெரிவுசெய்யப்பட்டது.

லெப் கேணல் தவம் குறும்படவிழா 2010 இன் சிறந்த படமாக ம. பாஸ்கர் (பிரான்சு) இயக்கிய 'எனக்கும் உனக்கும்' குறும்படம் தெரிவு செய்யப்பட்டது.

சிறந்த 2வது படமாக தெரிவு செய்யப்பட்டிருந்த படமானது, சர்வதேச திரைப்படவிழாக்களில் பின்பற்றப்படும் அடிப்படை விதிகளை மீறியுள்ளமையால் அப்படத்திற்கு எம்மால் வழங்கப்பட்ட பரிசுகள் செல்லுபடி அற்றது என்பதை அறியத் தருகின்றோம்.

வெற்றிபெற்ற படங்களுக்கு தவம் நினைவு விருதும் பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்சு லெப். கேணல் தவம் நினைவாக 2வது தடவையாக நடாத்திய குறும்படவிழா 28.08.10 அன்று பாரிசில் சிறப்பாக நடைபெற்றது.

படங்களில் பணியாற்றிய கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக வழங்கப்பட்ட சிறப்புப் பரிசுகள் விபரம்:

சிறந்த நடிகர் - இ. ரமணன் 'கலாச்சாரம்'

சிறந்த நடிகை - பொபிதா 'எனக்கும் உனக்கும்'

சிறந்த ஒளிப்பதிவு - க. கவிநாத் 'எனக்கும் உனக்கும்'

சிறந்த படத்தொகுப்பு - ஆ. குணா 'அம்மணம்'

சிறந்த இயக்குநர் - ம. பாஸ்கர் 'எனக்கும் உனக்கும்'

சிறந்த இசை - சாரு 'அம்மணம்'

சிறந்த குழந்தை நடிகை - 'பூவுக்குள்'

சிறப்பு நடுவர் விருதுகள்:

01. தசாவதாரம் அனிமேசன் படத்திற்காக திருமதி. ஸ்ரோலின்குமார் பகீரதி.


02. Droits de l' homme ஆவணப்படத்திற்காக து. சதீஸ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





3



# தோழர்களின் போராட்டக் களத்தில் நான்

– அருந்ததி ராய்

காலை ஐந்து மணிக்கு எழுந்தோம்.

ஆறு மணிக்கு நடக்கத் தொடங்கி விட்டோம். இரண்டு மணி நேரம் கழித்து மற்றொரு ஆற்றைக் கடந்தோம். அழகிய சிற்றூர்களினூடே நடந்து சென்றோம். ஒவ்வோர் ஊரிலும் குடும்பம் குடும்பமாகப் புளிய மரங்கள் உள்ளன. உயர்ந்து வளர்ந்த அம்மரங்கள் மக்களைப் பாதுகாக்கும் நல்ல தேவதைகளைப் போல உள்ளன. இப்பகுதியில் கிடைக்கும் புளி இன்சுவையுடையது. பதினொரு மணிக்கே கதிரவன் உச்சியில் இருந்தது. நடப்பது இப்போது அவ்வளவு எளிதாக இல்லை. மதிய உணவுக்காக ஒரு சிற்றூரில் நின்றோம். வீட்டில் இருப்பவர்கள் சந்துவுக்கு அறிமுகமானவர்கள்போல் தெரிகிறது. அழகிய இளம் பெண் ஒருத்தி சந்துவுடன் நெருங்கி உறவாடுகிறாள். நான் இருந்ததால் சந்துவுக்குச் சற்றுக் கூச்சமாக இருந்திருக்கும் போலுள்ளது. மதிய உணவுக்குப் பப்பாளியும் பருப்புச் சோறும். சிவந்த மிளகாய்த்தூளும் தந்தார்கள்.

மீண்டும் நடைப்பயணத்தைத் தொடங்குவதற்குமுன் வெய்யிலின் உக்கிரம் சற்றுக் குறைவதற்காகக் காத்திருக்கப் போகிறோம். மண்டபத்தில் கண்ணயர்ந்தோம். அந்த இடத்தின் எளிமை ஒருவகை அழகைத் தருகிறது. அங்கு இருப்பவை அனைத்துமே தேவைப்படும் பொருள்கள். அவையனைத்தும் தூய்மையாக உள்ளன. வேண்டாத பொருள்கள் இடத்தை அடைத்துக்கொண்டிருக்கும் நிலை இங்கு இல்லை. குள்ளமான மண்சுவர் மீது கருங்கோழி ஒன்று அங்குமிங்கும் நடைப்யின்றது. மூங்கில் தட்டியொன்று கூரையைத் தாங்குவதற்கும் பொருள்களைத் தொங்கவிடுவதற்கும் பயன்படுகிறது. புற்களாலான விளக்குமாறு (துடைப்பம்), இரண்டு பீப்பாய்கள், பின்னப்பட்ட நாணல் கூடை, உடைந்த குடை, மடித்து அடுக்கிவைக்கப்பட்ட அட்டைப் பெட்டிகள் ஆகியன அங்கு இருந்தன. அதோ அங்கு இருப்பது என்ன? என் கண் கண்ணாடி தேவைப்படுகிறது. அட்டைப் பெட்டியில் எழுதியிருப்பது இதுதான். 'சீர்மிகு விசை 90 உயர் ஆற்றல் குழ-ம்புநிலை வெடிபொருள் (2-ஆம் வகுப்பு)'.

மாலை சுமார் இரண்டு மணிக்கு நாங்கள் மீண்டும் நடக்கத் தொடங்கினோம். அடுத்த சிற்றூரில் அக்கா (தோழர்) ஒருவரைச் சந்திக்கப்போகிறோம். பயணத்தின் அடுத்த திட்டம் அவருக்குத் தெரியும். சந்துவுக்குத் தெரியாது.

தகவல் பரிமாற்றத்தில் கூட இவர்கள் அளவு மீறுவதில்லை. யாரொருவருக்கும் அனைத்துமே தெரிந்திருக்கக்கூடாது.

ஆனரல், நாங்கள் ஊரையடைந்தபோது அக்கா அங்கில்லை. அவரைப் பற்றிய எந்தவொரு செய்தியும் இல்லை. முதன்முதலாக சந்துவின் முகத்தில் கவலையின் அறிகுறிகள் தென்பட்டன. பெருங்கவலை என்னைச் சூழ்ந்துகொண்டது. இவர்களிடையே உள்ள தகவல் பரிமாற்ற முறைகளைப் பற்றி நானறியேன். ஆனால், இவர்கள் தவறாகப் போய்விட்டால் என்னவாகும்?

பயன்படுத்தப்படாத பள்ளிக் கட்டடம் ஒன்றின் அருகில் நாங்கள் நிற்கின்றோம். அது ஊரிலிருந்து வெளியில் உள்ளது. இவ்வூர்களில் உள்ள அரசுப் பள்ளிக் கட்டடங்கள் அனைத்துமே தகர்க்க முடியாத கோட்டைகளைப் போலக் கான்கிரீட்டால் கட்டப்பட்டுள்ளன. ஏன்? காதலர்களுடைய (சன்னல்கள்) கதவுகள் எஃகால் ஆன உறுதியான கதவுகள். வாயிற்கதவுகளும் அப்படியே. அங்குள்ள வீடுகளைப் போல மட்சுவர்களும் ஓலைக் கூரைகளும் பயன்படுத்தப்படவில்லை. ஏன்? ஏனெனில் அவை வெறும் பள்ளிகள் மட்டுமல்ல. (அரசுப்) படைகள் பாதுகாப்புடன் ஒளிந்துகொள்வதற்கும் அவை பயன்படுகின்றன. 'அபுசுமாட் பகுதிச் சிற்றூர்களில் உள்ள பள்ளிகள் இப்படி வடிவமைத்துக்கட்டப்பட்டுள்ளன...' ஒரு குச்சியைக் கொண்டு மண்தரையில் சந்து பள்ளிக் கட்டடத்தை வரைகிறார். தேன்கூட்டில் இருப்பதைப் போல மூன்று எண்கோண வடிவக் கட்டடங்கள் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. அப்போதுதான் அவர்கள் (படைகள்) அனைத்துத் திசைகளிலும் சுட முடியும். மட்டைப் பந்து அடிப்பவர் வரைவதைப் போல அம்புக்குறிகளை வரைகிறார் சந்து.

எந்தப் பள்ளியிலும் ஆசிரியர்களே இல்லை. அவர்கள் அனைவரும் இவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டனர். அல்லது, நீங்கள் அவர்களை விரட்டிவிட்டீர்களா? இல்லை, நாங்கள் காவலர்களை மட்டுந்தான் விரட்டுவோம். ஆனால், ஆசிரியர்கள் ஏன் இங்கு வரப்போகின்றனர், இந்தக் காட்டிற்கு? தம் இல்லங்களில் அமர்ந்தவாறே சம்பளம் வாங்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





> ஆர்வமூட்டும் படைக்கலங்களை ஏந்திய விநோதமான அழகிய சிறார் என்னைச் சுற்றிலும் உள்ளனர். இவர்கள் அனைவரும் கட்டாயம் மாவோவினராகத்தான் இருப்பார்கள். இவர்கள் எல்லோரும் (போரில்) இறக்கப்போகிறார்களா? காட்டுப் போர்முறைப் பயிற்சிப் பள்ளி இவர்களுக்கு எதிரானதா? பெருந்துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட உலங்குவானூர்திகள், செறிவூட்டப்பட்ட ஒளிக் கற்றைத் தொழில்நுட்பத்தில் இயங்கும் இடைவெளிகாண் கருவிகள், உடல் சூட்டினைக் கொண்டு (பதுங்கியிருக்கும்) மனிதர்களைக் காண உதவும் கருவிகள் ஆகிய அனைத்தும் இவர்களைக் குறிவைத்தா இயங்கும்?



கிக்கொள்ளலாமே? சரியாகச் சொன்னீர்.

இது ஒரு 'புதுப் பகுதி' என்று சந்து சொல்கிறார். இப்பகுதியில் கட்சி அண்மையில்தான் நுழைந்துள்ளது.

சுமார் 20 இளைஞர்கள் வந்தனர், ஆண், பெண் இருபாலாரும் இருந்தனர். அவர்களுடைய வயது சுமார் 13 முதல் 25 வரை இருக்கும். இவர்கள்தாம் ஊரளவிலான படையினர் என்று சந்து விளக்கினார். மாவோவினப் படையின் அடித்தட்டிலிருப்பவர்கள் இவர்கள். இவர்களைப் போன்ற யாரையும் நான் இதுவரை பார்த்ததேயில்லை. அவர்கள் புடவை, கைலி முதலியவற்றை அணிந்திருந்தனர். சிலர் கிழிந்த, ஆலிவ் பச்சை வண்ணப் படைச் சீருடை அணிந்திருந்தனர். பையன்கள் அணி கலனும் (நகையும்) தலைப்பாகையும் அணிந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் பர்மார் எனப்படும் துப்பாக்கி இருந்தது. அதனுள் பல குண்டுகளை ஒன்றன் பின் ஒன்றாக வேகமாக ஏற்றலாம். கத்திகள், கோடரிகள், அம்பு முதலியனவும் சிலரிடம் இருந்தன. மூன்றடி நீளமுள்ள கனமான இரும்புக் குழாயில் வடிவமைக்கப்பட்ட செப்பமற்ற சிறு பீரங்கி ஒன்றை ஒரு பையன் வைத்திருந்தார். வெடிபொருளும் தெறிகுண்டுகளும் அதில் நிரப்பப்பட்டிருந்தன. எப்போது வேண்டுமானாலும் அதை வெடிக்கமுடியும். அது மிகுந்த ஓசையுடன் வெடிக்கும். ஆனால் ஒரேயொரு முறைதான் அதைப் பயன்படுத்தமுடியும். ஆனாலும் அது காவல்துறையினரை அஞ்சவைக்கிறது என்று கூறி அவர்கள் நமுட்டுச் சிரிப்பை வெளிப்படுத்துகின்றனர். போர் அவர்கள் மனதில் முதலிடத்தைப் பிடித்திருப்பதாகத் தெரியவில்லை. இப்பகுதி சல்வா சூடும் படையினரின் தாயகப் பகுதியிலிருந்து தொலைவில் இருப்பது இதற்குக் காரணமாக இருக்கக்கூடும். அன்றைய வேலையை அவர்கள் அப்போதுதான் முடித்திருந்தனர். தோட்டங்களுக்குள் வெள்ளாடுகள் புகாவண்ணம் சில வீடுகளைச் சுற்றி வேலியமைத்தல்.

அவர்கள் மகிழ்ச்சியுடனும் ஆர்வம் மிகுந்தவர்களாகவும் உள்ளனர். சிறுமிகள் சிறுவர்களுடன் தன்னம்பிக்கையோடு கூச்சமின்றிப் பழகுகின்றனர். இவை போன்றவற்றை நான் எளிதில் கவனித்துவிடுவேன். இவர்களுடைய நடத்தை என் மனதில் இடம் பிடித்துவிட்டது. நான்கைந்து ஊர்களைப் பாதுகாப்பதற்காகச் சுற்றுதல் (ரோந்து), வயல் வெளிகளில் வேலை செய்து உதவுதல், கிணறுகளைத் தூர்வாரித் தூய்மைப்படுத்துதல், வீடுகளைச் சீர்ப்படுத்துதல் உட்பட்ட அங்கு தேவைப்படும் அனைத்து வேலைகளையும் இவர்கள் செய்வார்கள் என்று சந்து சொல்கிறார்.

அக்கா இன்னும் வரவில்லை. என் செய்வது? ஒன்றுமில்லை. காத்திரு. அவர்களுடைய உழைப்பில் பங்குபெறு.

இரவுணவுக்குப் பிறகு அதிகம் பேசாமல் ஒவ்வொருவரும் முறைப்படி வரிசையில் நிற்கின்றனர். நாங்கள் செல்லப்போகிறோம் என்பது தெளிவு. அனைத்துப் பண்டங்களும் எங்களுடனே வருகின்றன. அரிசி, காய்கள், சட்டி பானைகள் என் எல்லாமே. பள்ளிவளாகத்தை விட்டு வெளியேறி ஒருவர் பின் ஒருவராகக் காட்டினுள் நடக்கிறோம். அரைமணி நேரம் கூட நடக்கவில்லை. ஒரு திறந்த வெளியை அடைந்தோம். இங்குதான் இன்றிரவு உறங்கப்போகிறோம். அங்கு எந்த ஓசையுமில்லை. சில நிமிடங்களில் அனைவரும் தத்தம் நீல நிற நெகிழித் தாள்களை (பாய்கள்) விரித்துவிட்டனர். பரவலாகப் பயன்படும் சில்லி எனப்படும் இந்தப் படுதா இல்லாமல் புரட்சியே இல்லை. சந்துவும் மாங்துவும் ஒரு படுதாவைத் தமக்கு வைத்துக்கொண்டு எனக்கு ஒன்றை விரித்தனர். இருப்பதிலேயே சிறந்த சாம்பல்நிறப் பாறைமீது நல்ல இடத்தை எனக்கு ஒதுக்கினர். அக்காவுக்குச் செய்தி அனுப்பியிருப்பதாக சந்து சொல்கிறார். அது கிடைத்தால் அக்கா அதிகாலை இங்கு வந்துவிடுவார். அது கிடைத்தால் என்பது தான் இங்கு முதன்மையானது.

நீண்ட காலத்திற்குப் பின் இத்தகைய அழகுவாய்ந்த அறையில் நான் உறங்குகிறேன். ஆயிரம் விண்மீன் தரம் உள்ள விடுதியொன்றில் எனக்கென்று தனியாக ஒதுக்கப்பட்ட அறை. ஆர்வமூட்டும் படைக்கலங்களை ஏந்திய விநோதமான அழகிய சிறார் என்னைச் சுற்றிலும் உள்ளனர். இவர்கள் அனைவரும் கட்டாயம் மாவோவினராகத்தான் இருப்பார்கள். இவர்கள் எல்லோரும் (போரில்) இறக்கப்போகிறார்களா? காட்டுப் போர்முறைப் பயிற்சிப் பள்ளி இவர்களுக்கு எதிரானதா? பெருந்துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட உலங்கு வானூர்திகள், செறிவூட்டப் பட்ட ஒளிக்கற்றைத் தொழில்நுட்பத்தில் இயங்கும் இடைவெளிகாண் கருவிகள், உடல் சூட்டினைக் கொண்டு (பதுங்கியிருக்கும்) மனிதர்களைக் காண உதவும் கருவிகள் ஆகிய அனைத்தும் இவர்களைக் குறிவைத்தா இயங்கும்?

இவர்கள் ஏன் இறக்கவேண்டும்? எதற்காக? இந்த நிலங்கள் அனைத்தையும் சுரங்கங்களாக்குவதற்காகவா? ஒரிசா மாநிலத்தில் கியோஞ்சார் பகுதியில் உள்ள திறந்த வெளி இரும்புச் சுரங்கங்களைப் பார்வையிடச் சென்றது எனக்கு இன்னும் நினைவில் உள்ளது. அங்கு ஒரு காலத்தில் காடு இருந்தது. இதோ இங்கு இருக்கிறார்களே, இவர்களைப் போலவே அங்கும் சிறுவர்கள் இருந்தனர். இப்போது அந்நிலம் ஒரு மாபெரும் சிவப்புப் புண்ணைப் போலக் காட்சியளிக்கிறது. நம் மூக்குத்துளைகள், நுரையீரல்கள் அனைத்திலும் செம்மண் புழுதி நிறைகிறது. தண்ணீர், காற்று, மக்கள், அவர்களுடைய நுரையீரல்கள், முடி ஆகிய அனைத்துமே சிவப்பு. அவர்களுடைய சிற்றூர்களினூடாக இரவும் பகலும் சரக்குந்துகள் சென்றுகொண்டேயுள்ளன. ஆயிரக்கணக்கான சரக்குந்துகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து செல்கின்றன. தாதுப் பொருளை பாரதீப் துறைமுகத்திற்குக் கொண்டு செல்கின்றன. அங்கிருந்து அது சீனாவுக்குச் செல்லும். அங்கு அது மகிழுந்துகளாகவும், புகையாகவும், வெகு விரைவில் எழும்பும் நகரங்க

(தொடர்ச்சி 28ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# பிரேசில்: வர்க்கங்களின் கால்பந்து மைதானம்

**'நான் ஏழைக்கு உணவளித்தேன். அவர்கள் என்னை புனிதர் என்று போற்றினார்கள். ஏழைக்கு ஏன் உணவு கிடைப்பதில்லை என்று கேட்டேன். என்னை கம்யூனிஸ்ட் என்று அழைத்தார்கள்!'** - Dom Hélder Pessoa Câmara (கத்தோலிக்க மேற்றிராணியார், பிரேசில்)

உலகம் முழுவதும் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு பிடித்த நாடு பிரேசில். அதற்கப்பால் உலகின் மிகப் பெரிய நாடுகளில் (8.511.965 km) ஒன்றான பிரேசிலை அறிந்து வைத்திருப்பவர்கள் அரிது. மேற்குலகில் பிரேசில் கேளிக்கைகளின் சொர்க்கம். வண்ணமயமான கார்னிவல் அணிவகுப்புகள். பாலியல் பண்டமாக நோக்கப்படும் அழகிய பெண்கள். இவை தான் பலருக்கு நினைவுக்கு வரும். கொஞ்சம் 'சமூக அக்கறை கொண்டவர்கள்' என்றால், தெருக்களில் வளரும் குழந்தைகள், நாற்றமடிக்கும் சேரிகளை பார்த்து, வறிய பிரேசில் மீது அனுதாபப்படுவார்கள். ஆனால் எண்ணெய் வளத்தை தவிர உலகின் அனைத்துச் செல்வங்களையும் தன்னகத்தே கொண்ட நாடு. என்றோ லத்தீன் அமெரிக்காவின் வல்லரசாக வந்திருக்கவேண்டியது. மொழி, இன, மதப் பிரச்சினை என்று பிரிவினையை தூண்டும் காரணிகளும் கிடையாது. அப்படிப்பட்ட பிரேசில் ஏன் இன்றைக்கும் பின்தங்கிய வறிய நாடாக உள்ளது?

மொத்த சனத்தொகையில் இருபது வீதமான பணக்காரர்கள், தேசத்தில் மொத்த உற்பத்தியில் அறுபது வீதத்தை நுகர்கிறார்கள். சனத்தொகையில் நாற்பது வீதமாக உள்ள ஏழைகளின் நுகர்வு பத்து வீதம் மட்டுமே. இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூக அரசியல் பிரச்சினைகளுக்கு மூல காரணம். சாவோ பாவுலோ, ரியோ டெ ஜனைரோ போன்ற உலகத் தரம் வாய்ந்த நகரங்கள், தென்னகத்து நியூயார்க் போல காட்சி தரும். விண்ணை எட்டத் துடிக்கும் கட்டிடங்கள், கான்க்ரீட் காடுகளாக காணப்படும். பிராடா, ஷனேல், அடிடாஸ், உலகில் சிறந்த பிராண்ட் பொருட்களை மட்டுமே விற்பனை செய்யும் ஆடம்பர அங்காடிகள். அவற்றை வாங்குவதற்கு மொய்க்கும் பணக்காரக் கும்பல். வீதி வழியாக கடைக்குச் சென்றால், வாகன நெரிசலில் சிக்க நேரிடலாம், அல்லது கிரிமினல்களின் தொல்லை. இதனால் தமது பங்களாக்களில் இருந்து ஹெலிகாப்டரில் பறந்து வந்து 'ஷாப்பிங்' செய்கிறார்கள்.

பிரேசில் மக்களில் பெரும்பான்மையானோர் நகரங்களில் வாழ்கின்றனர். நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான நகரங்களின் எண்ணிக்கையை வைத்து பிரேசிலின் வளர்ச்சியை கணக்கிட்டு விட முடியாது. பொருளீட்டுவதற்காக நாள் தோறும் லட்சக்கணக்கான நாட்டுப்புற ஏழைகள் பெரு நகரங்களை நோக்கி இடம்பெயர்கிறார்கள். அதிர்ஷ்டத்தை தேடி ஓடி வரும் மக்களை அரவணைக்க நகரங்களில் யாரும் இல்லை. இருப்பிடம், வேலை எல்லாம் அவர்களாகவே தேடிக்கொள்ள வேண்டும். இதனால் நகரத்தின் ஒதுக்குப்புறமாக சேரிகள் பெருகி வருகின்றன. அந்த இடத்தில் கிடைக்கும் பொருட்களை கொண்டு ஒரு தகரக் கொட்டகை போட்டுக் கொள்வது. மின் கம்பங்களில் கம்பியைப் போட்டு மின்சாரத்தை திருடுவது. தண்ணீருக்காக குழாய்யடியில் சண்டை போடும் குடும்பங்கள். சுருக்கமாக, இவை 'உலகத்தரம் வாய்ந்த சேரிகள்' புகழ் பெற்ற மும்பையின் தாராவி சேரி பற்றி அறிந்து வைத்திருப்பவர்களுக்கு அதிகம் விளக்கத் தேவை இல்லை. பிரேசிலில் இவற்றை 'பவேலா' (Favela) என்றழைப்பார்கள்.

பவேலா வாழ் மக்கள் நகரங்களில் பணக்கார வீடுகளில் வேலை செய்வார்கள். டாக்சி ஓட்டுனர்கள், நடைபாதை வியாபாரிகள், ஹோட்டல் பணியாட்கள் என்று உழைத்து முன்னுக்கு வந்த சிலர் சேரிகளிலேயே வசதியான சிறு வீடு கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். இதை விட பணம் சேர்க்க சட்ட விரோதமான தொழில்களில் ஈடுபடுவோருக்கும் அது தான் புகலிடம். பாலியல் தொழிலாளர்கள், போதைவஸ்து விற்பவர்கள், மற்றும் மாபியா குழுக்களுக்கு வேலை செய்பவர்கள் என்று பலர். கிரிமினல்களின் தொல்லை தாங்காமல் போலிஸ் அந்தப் பக்கம் தலைவைத்தும் படுப்பதில்லை. அந்த அளவுக்கு பவேலாவில் கிரிமினல்களின் ஆட்சி நடக்கிறது. ஒரு ஜீவன் வாழ்வதற்கு போராடவேண்டிய சூழலில், தாய்மார்களால் கைவிடப்பட்ட குழந்தைகள், தெருக்களில் அனாதைகளாக கிடக்கும். தெருவிலேயே வளரும் குழந்தைகள் பிஞ்சிலேயே பழுத்து விடுகின்றன. விபச்சாரம், போதைப்பொருள், திருட்டு, கொலை என்று எல்லாவித குற்றச் செயல்களிலும் சிறுவர்கள் ஈடுபடுகின்றனர். இவர்களை மாபியக் குழுக்களும் பயன்படுத்திக் கொள்கின்றன. பிடிபட்டால் சிறுவர்கள் என்று சிறு தண்டனையுடன் தப்பி விடுவார்கள். இருப்பினும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஒரு ஜீவன் வாழ்வதற்கு போராடவேண்டிய சூழலில், தாய்மார்களால் கைவிடப்பட்ட குழந்தைகள், தெருக்களில் அனாதைகளாக கிடக்கும். தெருவிலேயே வளரும் குழந்தைகள் பிஞ்சிலேயே பழுத்து விடுகின்றன. விபச்சாரம், போதைப் பொருள், திருட்டு, கொலை என்று எல்லாவித குற்றச் செயல்களிலும் சிறுவர்கள் ஈடுபடுகின்றனர். இவர்களை மாபியக் குழுக்களும் பயன்படுத்திக் கொள்கின்றன.

நாள் தோறும் குறைந்தது பத்து சிறுவர்களாவது, போலிஸ் - மாபியா சண்டையில் மடிகின்றனர்.

லத்தீன் அமெரிக்க கண்டத்தில் தெளிவாகத் தெரியும் வர்க்க முரண்பாடுகளை பிரேசிலிலும் அவதானிக்கலாம். பணக்காரர்கள் தங்களது நலன்களை பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள். சுரண்டலில் சேகரித்த செல்வத்தை எப்படி செலவழிப்பது என்பது மாத்திரமே அவர்களது கவலை. ஏழைகளும் தமக்குத் தெரிந்த வழியில் பணத்தைச் சேர்க்க விளைகிறார்கள். பொருளாதார ஏற்றத்தாழ்வு தொடரும் வரை கிரிமினல்களும் பெருகிக்கொண்டே இருப்பார்கள். 'திருடுவது பாவம்' என்று ஏழைகளுக்கு மட்டுமே போதித்துக் கொண்டிருந்த தேவாலயங்களும் பிற்காலத்தில் இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டன. எழுபதுகளில் இராணுவ சர்வாதிகார ஆட்சிக் காலத்தில் முற்போக்கு பாதிரிகள் தோன்றினார்கள். அவர்களில் Dom Hélder Câmara பிரேசிலுக்கு வெளியிலும் பலரால் அறியப்பட்டார். 'நான் ஏழைக்கு உணவளித்தேன், அவர்கள் என்னை புனிதர் என்று போற்றினார்கள். ஏழைக்கு ஏன் உணவு கிடைப்பதில்லை என்று கேட்டேன், என்னை கம்யூனிஸ்ட் என்று அழைத்தார்கள்!' என்ற அவரின் வாசகம் உலகப் புகழ் பெற்ற பொன்மொழியாகியது.

பிரேசிலில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதம் சில உள்நாட்டு தெய்வங்களையும், வழிபாட்டு முறைகளையும் உள்வாங்கியுள்ளது. குறிப்பாக ஆபிரிக்காவில் இருந்து பிடித்து வரப்பட்ட கறுப்பின அடிமைகள், தங்களது மதத்தை பின்பற்ற தடை இருந்தது. இதனால் சில ஆபிரிக்க தெய்வங்கள் கத்தோலிக்க புனிதர்களாக வழிபடப்பட்டன. அதே போல பிரேசிலில் பேசப்படும் போர்த்துகீச மொழியும் பல ஆப்பிரிக்க, செவ்விந்திய பழங்குடி சொற்களையும் கொண்டுள்ளது. அனேகமாக கொய்யாப்பழம், போர்த்துக்கேயருடன் பிரேசிலில் இருந்து நமது நாட்டிற்கு வந்திருக்கலாம். பிரேசில் செவ்விந்திய பழங்குடியினர் அந்தக் கனியை 'கொய்யாவா' (Goiaba) என்று பெயரிட்டிருந்தனர். செவ்விந்திய பூர்வகுடிகளின் பிரதான உணவான 'மண்டியோக்' போத்துக்கேயரால் உலகம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டது. சிங்களத்தில் அதனை திரிபடைந்த போர்த்துக்கேய பெயரால் 'மைஞோக்கா' என்பார்கள். தமிழில் அதன் பெயர் மரவள்ளிக் கிழங்கு.

பிரேசிலின் மதமும், மொழியும், கலாச்சாரமும் செவ்விந்திய பழங்குடியின மற்றும் ஆப்பிரிக்க கூறுகளைக் கொண்டிருந்த போதிலும், தேசத்தின் பொருளாதாரத்தில் அவர்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது. இந்த இரு சிறுபான்மை இனங்களும் சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளாகின்றன. அவர்களுக்கு கிடைக்கும் வேலை வாய்ப்புகளும் குறைவு. இதனால் பெரும்பான்மையானோர் ஏழைகளாக வருந்துகின்றனர். சல்வடோர் என்ற வடக்கத்திய நகரத்தில் ஆபிரிக்க அடிமைகளின் வழித்தோன்றல்கள் அதிகமாக வாழ்கின்றனர். சல்வடோர் ஒரு காலத்தில் பிரேசிலின் தலைநகரமாக இருந்தது. பிரேசிலின் வட மேற்கை சேர்ந்த அமேசன் நதிப் பிராந்தியத்தில் செவ்விந்திய பழங்குடியினர் வாழ்கின்றனர். இன்றைய பிரேசிலின் வடக்குப் பகுதி மிகவும் பின்தங்கியுள்ளது. எல்லா வித உற்பத்தியும் நின்று போய், வறுமை தாண்டவமாடுகின்றது. இருப்பினும் அமேசன் ஆற்றுப்படுகைகளில் தங்கத் துகள்களை எடுத்து திடீர் பணக்காரனாகும் ஆசையில் இன்றும் பலர் வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஐநூறு வருடங்களுக்கு முன்னர் போர்த்துக்கல்லில் இருந்து தங்கம் தேடி வந்தவர்கள் பிரேசிலில் நிரந்தரமாகக் குடியேறி விட்டனர். கடற்கரையோரம் தங்கம் கிடைக்காததால் உள்நாட்டிற்குள் புகுந்தார்கள். அங்கே தங்கத்தை விட வேறு பல வளங்களையும் கண்டு கொண்டார்கள். குறிப்பாக பலகை ஏற்றுமதிக்காக காடுகளில் இருந்த பிரேசில் மரங்கள் தறிக்கப்பட்டன. பிரேசில் என்ற பெயர் வரக் காரணமாக இருந்த பலகைகள் வெளிநாட்டில் தரமானதாக மதிக்கப்பட்டன. ரப்பர், கோப்பி, கரும்பு ஆகிய பயிர்களுக்கான பெருந்தோட்ட செய்கைக்காகவும் காடுகள் அழிக்கப்பட்டன. காடழிப்பு பிற்காலத்தில் மழை வீழ்ச்சிக் குறைபாட்டையும், அதன் நிமித்தம் பிரேசிலுக்கு பொருளாதார பின்னடைவையும் கொண்டுவந்தது. பிரேசில் இன்று வறுமையான நாடாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

'சரித்திரம் எமக்கு அவசியமில்லை', என்று சில நடுத்தர வர்க்க புத்திஜீவிகள் வாதிடுவார்கள். பிரேசிலில் கறுப்பினத்தவர்களும், செவ்விந்தியர்களும் வறுமையில் வாடுவதற்கு வரலாற்றில் நேர்ந்த ஒரு பாரிய இடப்பெயர்வு காரணமாக உள்ளது. போர்த்துக்கேய காலனியாதிக்கவாதிகள் செவ்விந்தியர்களை தங்கச் சுரங்கங்களில் அடிமைகளாக வேலை வாங்கினார்கள். அவர்களின் உழைப்பை சாகும் வரை பிழிந்து எடுத்தார்கள். பின்னர் ஆபிரிக்காவில் (அங்கோலா, கினியா) இருந்து லட்சக்கணக்கான கறுப்பின அடிமைகளை பிடித்து வந்தார்கள். அவர்களின் உழைப்பில் பெருந்தோட்டத் துறை செழித்தது. போர்த்துக்கேயர்கள் மட்டும் பெருந்தோட்ட முதலாளிகளாக இருக்கவில்லை. ஆங்கிலேயர்கள், யூதர்கள் என்று பல்லின முதலாளிகளின் வர்க்கமாக இருந்தது.

ஒரு சாதாரண வெள்ளையின ஐரோப்பியருக்கு கூட பிரேசில் சென்று செல்வந்தனாகும் யோகம் அடித்தது. அடிமையை வைத்து வேலை வாங்குவது என்பது மாடு வாங்கி உழுவதைப் போன்றது. அடிமையை வாங்குவதற்கு சிறிதளவு பணமும், பராமரிக்கும் செலவையும் பொறுப்பெடுத்தால் போதும். யாரும் பெருந்தோட்ட முதலாளியாகி விடலாம். நிலம் கூட வாங்கத் தேவை இல்லை. பூர்வகுடிகளை விரட்டி விட்டு அபகரித்த நிலம் தாராளமாகக் கிடைக்கும். இவ்வாறு குறைந்த முதல் போட்டு நிறைந்த லாபம் சம்பாதிக்கும் துறையால் பலர் கோடீஸ்வரர் ஆனார்கள். ஒரு கரும்புத் தோட்டம் போட்டாலே போதும். பணம் மழையாகப் பொழியும். ஐரோப்பியச் சந்தையில் கரும்புச் சீனி அதிக விலையில் விற்கப்பட்ட ஆடம்பரப் பொருளாக இருந்தது. கடைகளில் ஒரு கிராம் சீனி மருந்து மாதிரி விற்பனையானது.

போர்த்துக்கல் அன்று பிரேசிலை தனது குடியேற்றக் காலனியாக அறிவித்து இருந்தது. குற்றச் செயல்களில் ஈடுபட்டு தண்டனை அனுபவிப்பவர்களையும், பொது மன்னிப்பு அளித்து குடியேற அனுப்பிவைத்தார்கள். காலனிகளில் கிரிமினல் குடியேறிகளின் சேவை, காலனியாதிக்கவாதிகளுக்கு வெகுவாகத் தேவைப்பட்டது. முதலாவதாக, செவ்விந்திய பூர்வகுடிகளை அழித்தொழிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். இரண்டாவதாக, பெருந்தோட்டங்களில் இருந்து தப்பியோடிய அடிமைகளை பிடித்து வரும் பணி ஒப்படைக்கப்பட்டது. தப்பியோடிய அடிமையின் தலையைக் கொய்து வந்தால் சன்மானம் வழங்கப்பட்டது. இந்த பெருந்தோட்டக் காவலர்கள் எல்லாம் முன்னாள் கிரிமினல்கள் அல்லவா? அதனால் அடிமைகளை ஈவிரக்கம் பாராமல் அடக்கினார்கள். Bandeirantes· என அழைக்கப்பட்ட இந்தப் போர்த்துக்கேய கிரிமினல்களை நாயகர்களாக சித்தரிக்கும் கதைகளும் அந்தக் காலத்தில் உலாவின. சாவோ பவுலோ நகரில் கொடிய Bandeirantes கிரிமினல்களுக்கு நினைவுச் சின்னம் வைக்கப்பட்டுள்ளது.

**- கலையரசன்**

நன்றி: 'வினவு'




www.tamilarangam.net



# உள்ளதை உள்ளபடி



**வணக்கம் பிள்ளையள்**

**நல்லாய் இருக்கிறியளே?**

கோடை விடுமுறை முடியிற நேரம். ஊருக்கும், ஊர்உலாப்பெண்டும் கொஞ்சம் மனசாறிவிட்டு, மீண்டு இந்த இயந்திர வாழ்கைக்குள்ள தலையைக் கொடுக்கப்போறம்.

இதுதான் வெளிநாடு !

ஊருக்கு போட்டு திரும்பி வந்து கொண்டிருக்கிற சனங்கள், காவிக் கொண்டு வாற செய்தி இங்க பலருக்கு இடியா விழுது பாருங்கோ.

'இஞ்ச சொல்லிற மாதிரி அங்க இல்லை, அந்த மாதிரி இருக்குது ஊர்' எண்டு, அவை சொல்லிறதைக் கேட்டு பலர், இடிவிழுந்து போய் நிக்கினம். ஆனால் இதைக் கேட்கிற சிலர், அடுத்த வருசம் நாங்களும் ஊருக்கு போறதா இருக்கிறம் எண்டு சொல்லிறதும் காதில அங்கங்க விழுது பாருங்கோ.

'உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழீழ விரும்பிகளுக்காக வன்னியிலும், வாகரையிலும், படுவான் கரையிலும் இருக்கின்ற நாலு லட்சம் மக்கள் சிலுவையைச் சுமந்தார்கள்' எண்டு, அந்த நேரம் தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில், தம்பி வீரா நடத்திற 'நிலவரம்' நிகழ்ச்சியில, அரசியல் ஆய்வறிஞர் மு. திருநாவுக்கரசு அடிக்கடி சொல்லுவார்.

அது நூற்றுக்கு நூறு உண்மை பாருங்கோ. எங்கட இயக்கத்தை காக்கவும், நிலத்தைக் காக்கவும் என, வரம்பு போல காத்து நிண்டதுகள் அந்தச் சனங்கள்தான். இண்டைக்கு சண்டை ஓய்ஞ்ச பிறகும், அதன் வலிகளை முட்கம்பி வேலிகளுக்குள்ளையும், வெளியிலையும் எண்டு, அந்த சனங்கள் சிலுவை சுமந்து கொண்டு இருக்குதுகள். ஆனால் இங்க நிண்டு ஊருக்கு போன சனங்களுக்கு, இதுகளை பார்கிறதுக்கு வாய்ப்பு கிடையாது பாருங்கோ. ஏன் எண்டா கட்டுநாயக்காவில இருந்து, நேரா பிளேன் பிடிச்சு பலாலிக்கு போய் இறங்கலாமே ஒளிய தரையால யாழ்பாணத்துக்கு போகேலாது பாருங்கோ. உள்ளூர் சனங்கள் வன்னிக்கு போகலாமே ஒளிய, வெளிநாட்டில இருந்து வாறவைக்கு இந்த அனுமதி இல்லையாம்.

அப்பிடி வன்னியில காலடி எடுத்த வைக்கிறதெண்டா, லேசுப்பட்ட காரியம் இல்லையாம் பாருங்கோ. அப்பிடி இருக்கேக்க, அந்த மக்கள் படுகிற கஸ்டத்தையோ அல்லது சண்டையின்ர எச்சங்களையோ பார்கிறதுக்கு யாராலை முடியும்.

அதுக்காக யாழ்பாணத்தில சுதந்திரம் ஆனந்தக் கூத்தாடு எண்டு நான் சொல்லமாட்டன். அங்க இருக்கிற சனங்களுக்கு எல்லாம் பழகிப்போட்டுது. உதாரணத்துக்கு பலஸ்தீனத்தில காசாவுக்கு போகிறதெண்டா சும்மா நினைச்ச காரியமில்லை. காசா சனங்கள், இன்னமும் தங்கட மண்ணின்ர சுதந்திரத்துக்கு ஒவொரு நாளும் விலையைக் கொடுத்துக் கொண்டிருக்குதுகள்.

இஸ்ரேல் காசாவில இருக்கிற பலஸ்தின சனங்களுக்கு கொடுக்கிற கஸ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. உலகத்தில இருக்கிற மனிதநேய அமைப்புக்களும் ஆர்வலர்களும் காசாவுக்கு கடல்வழியா மனித நேயப் பயணம் செய்யிற கதைய அறிஞ்சிருப்பிங்கள். இப்பவும் இப்படித்தான், காசாவுக்கு போன மனித நேயக் கப்பலுக்கு இஸ்ரேல் நடத்தின தாக்குதல்ல, எட்டு மனித நேய ஆர்வலர்கள் சாவடைஞ்சதும் பெரும் சோகமா இருக்குது.

ஆனால் பாருங்கோ, பலஸ்தினத்தின்ர மேற்கு கரையெண்டு சொல்லிற நம்லா பகுதியைப் பார்திங்கள் எண்டா, யாழ்பாணம் மாதிரி எண்டு சொல்லலாம். இங்க இருக்கிற சனங்களுக்கு எல்லாம் பழகிப் போட்டுது. ஆனால் காசாவில இருக்கிற தங்கட உறவுகளுக்கு ஏதேனும் பிரச்சனையெண்டா, நம்லாவில இருக்கிற சனங்கள், வீதிக்கு இறங்கி, இஸ்ரேல் படைகளுக்கு எதிராக கல்லெறிப் போராட்டங்கள் நடத்தும்.

யாழ்பாணத்தில இது நடக்குமா எண்டு எனக்குத் தெரியேல்ல. ஏன் எண்டா, முள்ளிவாய்கால் வரைக்கும் சிங்களம் வன்னியில நடத்தின கோரத் தாண்டவத்துக்கான எதிர்ப்பு, யாழ்பாணத்தில பெருசா காணமுடியேல்ல. உள்ளுக்கு நிக்கிற நாப்பதாயிரம் ஆமிக்கு எதிரா, அங்க இருக்கிற அஞ்சு லட்சம் சனத்தில ஒருவர் எண்டாலும் ஒரு கல்லைத் தூக்கி எறிஞ்சதா தெரியேல்ல. சில நேரம் நாங்கள் இங்க வெளிநாட்டில இருந்து கொண்டு, இயக்கம் விடாதெண்டு சொல்லிக் கொண்டிருந்த, மாதிரி அங்க இருந்த சனங்களும் இயக்கம் விடாதெண்டு நினைசிட்டினமோ தெரியேல்ல.

இருந்தாலும் பாருங்கோ, அங்க இருக்கிற சனங்களின்ர அரசியல் வெளியை இட்டு நிரப்பிறதிலை, யாழ் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின்ர பங்கு முக்கியமானது. இதைத் தெரிஞ்சுதான் ஆமியும், அந்த பொடிசுகளை எல்லா வழியிலையும் ஒடுக்கி வைச்சிருக்குது.

எது எப்பிடியோ, ஆமீ யாழ்ப்பாணத்தை பிடிச்சு இப்ப பதினைஞ்சு வருசத்துக்கு மேல ஆகுது. எறும்பூற கல்லும் தேயும் எண்ட மாதிரி, கோயில் திருவிழாக்கள், கழியாட்டங்கள், இசை கச்சேரிகள் தமிழகத் தொலைக்காட்சிகள், சினிமாப் படங்கள் எண்டு, சனங்களின்ர பொதுப்புத்தியை தேயை வைச்சதில சிங்களம் வெற்றி கண்டிருக்குது எண்டு சொல்லலாம். அது சனங்களுக்கு பழகியும் போட்டுது. இரவு நேர ஊரடங்குச் சட்டம், வீதிச் சோதனைகள், சுத்தி வளைப்புக்கள் எண்டு, சனங்களுக்கு எல்லாம் பழகிப் போனதாலை, இங்க இருந்து அங்க போனவைக்கு சனங்கள் என்னத்தை சொல்லும். அந்தச் சூழலுக்கு ஏற்றமாதிரி, சனங்கள் வாழப் பழகீட்டுதுகள்.

இப்ப அங்க வளந்து வர்ற சந்ததி நேரடியா, யுத்தத்தை சந்தித்த தலைமுறையில்லை. அந்தக் கட்டுப்பாட்டுச் சூழலுக்கு ஏற்றமாதிரி வளருதுகள், வளந்து வருகுதுகள் பாருங்கோ.

தென்னிலங்கையில் இருந்து சிங்களச்சனங்கள், வன்னிக்கு ஊர்சுத்திப் பாக்கும், உள்ளூர் உல்லாசிகள் போல, யாழ்பாணத்தில வளந்து வாற புதிய சந்ததியும் வன்னிக்கு உல்லாசிகளாக போகினமாம். இருந்தாலும் அதுகளின்ர மனசுக்குள், சிங்களம் தமிழனுக்கு இழைச்ச கொடுமைகளின்ர வலிகள் உணரத்தான் செய்யும்.

அட, நான் எங்கையோ வந்து, எங்கையோ வந்து நிக்கிறன். விசயத்துக்கு வாறன். ஊருக்கு போயிட்டு வாற சனங்கள் காவிக் கொண்டு வாற செய்தியைக் கேட்டு வாயைப் பிழந்து கொண்டு நிக்காமல், மு. திருநாவுக்கரசு சொன்னமாதிரி, விடுதலையை சிலுவையாச் சுமந்து நிக்கிற வன்னிச் சனங்களின்ர விடிவுக்கு நாங்கள் உடனடியா செய்ய வேண்டியது நிறைய இருக்குப் பாருங்கோ. போன கிழமை, வடக்கு கிழக்கு பெண்கள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில, புலம்பெயர் தமிழ்ச் சமூகம் மீது கடுமையான குற்றச்சாட்டை அந்த அமைப்பு முன்வைச்சிருக்கு பாருங்கோ.

போராட்ட காலத்தில், யுத்தத்திற்கும், ஆயுதக் கொள்வனவுக்கும், நிதி திரட்டிய புலம்பெயர் தமிழர் சமூகம், இன்று அதே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், போராட்டத்துக்கு சென்றவர்களின் மேம்பாடு மற்றும் புனர்வாழ்வு தொடர்பாக, எதனைச் செய்துள்ளதென காட்டமான கேள்வியை முன்வைச்சிருக்கு பாருங்கோ.

குறிப்பா, வடக்கு, கிழக்கு தமிழ்ப் பெண்களின் இன்றைய நிலை குறித்து, விரிவாக அந்த அறிக்கையில் சொல்லியிருக்கினம்.

புலத்தில இருந்து இயங்கிற ஊடகங்களில், எதிலும் கேபி எப்பவும் கேபி எண்டு, குட்டிபோட்ட நாய் போல கேபியை சுத்தியே அவர்களின்ர ஊடகம் குலைச்சுக் கொண்டு இருக்குதே ஒளிய, இப்படியான அறிக்கைகள் பற்றியோ அல்லது குறிப்பிட்டுள்ள விடயங்கள் பற்றியோ, செய்தியா வெளியிட்டதா காணேல்ல. சிலநேரம், புலம் பெயர் மக்களின்ர நிதியை இலக்கு வைச்சு, கேபிதான் வடக்கு, கிழக்கு பெண்கள் அமைப்பு ஊடாக, அறிக்கை வெளியிட்டுள்ளார் எண்டு, செய்தி போட்டாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லை பாருங்கோ. ஆனால், அங்க இருக்கிற சனங்கள் தங்களுக்கு இப்ப யார் உதவினமோ அவையளைத்தான் நாளைக்கு, தோள்ளை தூக்கி வைச்சு ஆடப்போகுதுகள் பாருங்கோ. ஏன் எண்டா, சனங்கள் படுகிற கஸ்டம் மட்டுமில்லை, ஒரு பக்கம் நிலமெல்லாம் காடுபத்துது, மறுபக்கம் சிங்கள குடியேற்றம் எண்டு சிங்களம், போரை விட வேகமாக நகருது பாருங்கோ.

இதைப் போய் யாரிட்ட சொல்லிறதெண்டு தெரியேல்ல. முட்கம்பி வேலிக்குள்ளையும், முகாம்களிலும், சிறைகளிலும் எண்டு, சிக்கியிருக்கின்ற பெண்களின்ர கதைகளில், பாலியல் வல்லுறவும், கர்ப்பமாதலும் எண்ட சம்பவங்களே நிறைஞ்சு போயிருக்கெண்டு அந்த அறிக்கை சொல்லுது பாருங்கோ. சிங்களத்தின் கோரப்பிடிக்குள் இருந்து, ஒரு நாள் உந்த பொம்பிளைப் பிள்ளையள் வெளியில வரேக்க, அதுகளின்ர எதிர்கால குடும்ப வாழ்கை என்னபது கேள்விக்குறியா இருக்கெண்டு, அந்த அறிக்கையை வாசிக்கேக்க, வயிறு பத்தி எரியுது பாருங்கோ.

இங்க இருக்கிற பெண்கள் அமைப்புக்கள், அந்தப் பெண்களின்ர விடிவுக்கு என்ன செய்யினம் எண்டு, யாருக்கேனும் தெரிஞ்சா கேட்டுச் சொல்லுங்கோ. இந்தக் கதையள் அவையளுக்கு தெரியாட்டி, ஒருக்காச் சொல்லி விடுங்கோ.

என்னைப் பொறுத்தவரைப் பாருங்கோ, அந்த மக்களின்ர இந்த அவலத்துக்கு, வெறுமன சிங்களத்தையும் அதுக்கு உதவி செஞ்சவையையும் மட்டுமமே பொறுப்பெண்டு சொல்ல முடியாது. நாங்களும் ஏதோ ஒருவித்தில பொறுப்புத்தான். இந்த கூட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, அந்த மக்களின் உடனடித் தேவைகளுக்கு என்ன செய்யவேணுமோ அதைச் செய்வம்! சிந்திப்பம்!

**– அம்பலத்தாடி –**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






இயக்குனர் ஆர். செல்வகுமார்

# மின்னல் கணிதம் - 13, 14

**பெருக்கல் : ஐந்தில் முடியும் மூன்று இலக்க எண்ணை அதே மூன்று இலக்க எண்ணால் பெருக்குதல்.**

அதாவது 105, 215, 325, 435, 545, 655, 765, 875, 985 போன்ற எண்களை அதே எண்களால் பெருக்கினால் என்ன விடை வரும். இதற்கு வழக்கமான முறையில் மூளையைக் கசக்காமல், மின்னல் கணிதம் முறையில் பட்டென விடை சொல்வது எப்படி என்று பார்க்கப் போகிறோம்.

ஆரம்பிக்கும் முன்னால் ஒரு சின்ன ஃபிளாஷ்பேக். ஏற்கனவே நாம் இரு இலக்க எண்களை வர்க்கம் செய்வது எப்படி என்று பார்த்திருக்கிறோம். எனவே அதை ஒரு முறை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இனி உதாரணத்திற்கு வருவோம்.

**உதாரணம் : 1**

125
125 ×

125 என்பதை இரண்டு தனித் தனி எண்களாக பிரித்துக்கொள்வோம். அதாவது 12 மற்றும் 5 என பிரித்துக் கொள்வோம்.

- முதலில் $5 \times 5 = 25$ இதுவே விடையின் வலது பாகம்.
- அடுத்ததாக $12 + 1 = 13$
- இனி $12 \times 13 = 156$. இதுவே விடையின் இடது பாகம்.
- ஆக 15625 என்பதுதான் விடை

**உதாரணம் : 2**

115
115 ×

115 என்பதை இரண்டு தனித் தனி எண்களாக பிரித்துக்கொள்வோம். அதாவது 11 மற்றும் 5 என பிரித்துக் கொள்வோம்.

- முதலில் $5 \times 5 = 25$ இதுவே விடையின் வலது பாகம்.
- அடுத்ததாக $11 + 1 = 12$
- இனி $11 \times 12 = 132$ இதுவே விடையின் இடது பாகம்.
- ஆக 13225 என்பதுதான் விடை

**குறிப்பு :**

நாம் 5ல் முடியும் எண்களை தேர்ந்தெடுத்து பெருக்குவதால் விடையின் கடைசி இரு இலக்கங்கள் எப்போதுமே 25 தான் வரும்.

**பெருக்கல் : வலது இலக்கங்களின் கூட்டுத்தொகை 10 ஆக இருக்கும் மூன்று இலக்க எண்ணை அதே மூன்று இலக்க எண்ணால் பெருக்குதல்.**

கீழ் வரும் எண்களை கவனியுங்கள்.

118 × 112
246 × 244
322 × 328
434 × 436
567 × 563
651 × 659
782 × 788
891 × 899
938 × 932

இந்த எண்களில் இரு ஒற்றுமைகள் உள்ளன. அவை என்ன வென்றால்,

- வலது கடைசி இலக்கங்களை கூட்டினால் 10 வரும். உதாரணமாக 567 × 563 இந்த எண்களின் கடைசி இலக்கங்கள் 7 மற்றும் 3. இவை இரண்டையும் கூட்டினால் 10. அதே போல 938 × 932 இந்த எண்களின் வலது கடைசி இலக்கங்கள் 8 மற்றும் 2. இவை இரண்டையும் கூட்டினால் 10.
- இரு எண்களிலும் இடது இரு இலக்கங்கள் ஒரே எண்ணாகத்தான் இருக்கும். உதாரணமாக 567 × 563. இந்த இரு எண்களிலும் இடது இரு இலக்கங்கள் 56தான். அதே போல 938 × 932. இந்த இரு எண்களிலும் இடது இலக்கங்கள் 93தான்.
- மேலிருக்கும் இரண்டு காரணிகளும் இருந்தால் இந்த மின்னல் கணித உத்தி அட்டகாசமாக வேலை செய்யும்.

ஆரம்பிக்கும் முன்னால் மீண்டும் ஒரு சின்ன ஃபிளாஷ்பேக். ஏற்கனவே நாம் இதே காரணிகளைக் கொண்ட இரு இலக்க எண்களை வர்க்கம் செய்வது எப்படி என்று பார்த்திருக்கிறோம். எனவே அதை ஒரு முறை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இனி உதாரணத்திற்கு வருவோம்.

**உதாரணம் : 1**

198
192 ×

இந்த இரு எண்களையும் 19, 8, 2 என மூன்று தனித் தனி எண்களாக பிரித்துக்கொள்வோம்.

- முதலில் $8 \times 2 = 16$ இதுவே விடையின் வலது பாகம்.
- அடுத்ததாக $19 + 1 = 20$
- இனி $19 \times 20 = 380$. இதுவே விடையின் இடது பாகம்.
- ஆக 38016 என்பதுதான் விடை.

**உதாரணம் : 2**

567
563 ×

இந்த இரு எண்களையும் 56, 7, 3 என மூன்று தனித் தனி எண்களாக பிரித்துக்கொள்வோம்.

- முதலில் $7 \times 3 = 21$ இதுவே விடையின் வலது பாகம்.
- அடுத்ததாக $56 + 1 = 57$
- இனி $56 \times 57 = 3192$. இதுவே விடையின் இடது பாகம்.
- ஆக 319221 என்பதுதான் விடை

**குறிப்பு :**

இரு எண்களின் வலது இலக்கங்களை கூட்டினால் 10 கட்டாயம் வரவேண்டும். இல்லையென்றால் இந்த உத்தி பயன்படாது.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஈழவிடுதலைப் போரியல்...

கள் சொல்ல முடியாது’. இதன்பிறகும் எம்மால் அவருடன் எதைக் கதைக்க முடியும்? தண்டனை உறுதி. எமதணிக்கான அடுத்துவந்த நகர்வு குடிநீரின்றி முடிந்தது.

1993 ஆம் ஆண்டு பலாலிப் படைத்தளத்தினுள் கரும்புலித் தாக்குதல் ஒன்றினை நடாத்துவதற்குத் தலைவரினால் திட்டமிடப்பட்டிருந்தது. கரும்புலிகளுக்கான வெடிமருந்துத் தொகுதிகளை உருவாக்குவதற்கான பணி கேணல் ராயுவினால் அவரின் கீழிருந்த வெடிமருந்துப் பயிற்சிபெற்ற போராளியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவருடன் அப்போது வெடிமருந்துப் பயிற்சியினை மேற்கொண்டிருந்த நாம் அவ்வேலையில் இணைக்கப்பட்டிருந்தோம். கேணல் ராயுவோ, வேலையை ஒப்படைத்த தோடு நில்லாமல் வேலையின் ஒவ்வொரு கட்டத்திலும் தானும் எம்முடன் கூடவிருந்து அந்த வேலைகள் நிறைவடைந்தபோது, நாமே தனித்து அவ்வேலைகளைச் செய்யுமளவிற்கு எம்மை உருவாக்கி விட்டிருந்தார்.

ஒவ்வொரு விடயங்களைச் செய்யும்போதும், அவ்விடயங்களில் அவர் காட்டும் ஈடுபாடு மிகவும் நேர்த்தியானது. அதே நேர்த்தியினையே போராளிகளிடமும் வேலைகளில் எதிர்பார்ப்பார்.

எனது உடல்நிலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இயலாமை காரணமாக என்னால் பயிற்சியினைத் தொடர முடியவில்லை. சிலகாலம் வைத்தியசாலையில் இருக்கவேண்டியிருந்தது. இனிமேல் பயிற்சியில் ஈடுபடவே முடியாது என்ற நிலை. அடுத்து என்னவென்று தெரியாத சூழல். அவ்வாறான சூழ்நிலையிலிருந்து என்னை மீட்டு எனக்குப் பொருத்தமான பணிகளில் என்னை ஈடுபடவைத்து, எனது உடல்நிலையில் ஏற்பட்ட இயலாமை என்னையும் எனது போராட்டச் செயற்பாட்டையும் பாதிக்காது காத்தது கேணல் ராயு அவர்களே. அவரின் அணுகுமுறைகள் எப்போதுமே போராளிகளிடமிருந்து அவர்களது செயற்பாடுகளைத் தனித்தன்மையோடு வெளிக்கொணர்வதாகவே இருக்கும்.

ஒவ்வொரு போராளியிடமும் இருக்கும் தனித்தன்மைகளைச் சரியான முறையில் இனங்கண்டு அதனை வெளிக்கொணர்வதில் அவருக்கு நிகர் அவரேதான். ஆயினும் கொடிய புற்றுநோய் அவரைச் சிறிதுசிறிதாக அரித்துக்கொண்டிருந்த விடயத்தை அவரால் அறிந்துகொள்ள முடியாததாகவே காலம் அவருக்குத் தீர்ப்பெழுதிவிட்டது.

அடிக்கடி வந்துபோகும் வயிற்றுவலியினை அவர் சாதாரண வயிற்றுவலியாக எண்ணியே மாத்திரைகளைப் பாவிப்பதோடு நிறுத்திக்கொண்டார். நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தபோதுகூட அவர் இயங்கிக்கொண்டேயிருந்தார், அனைவரையும் இயக்கிக்கொண்டுமிருந்தார்.

தீச்சுவாலை முறியடிப்புச் சமரின்போதே அவரால் முழு உற்சாகமாகப் பணியாற்ற முடியாதபடி அவரது உடல்நிலை தளர்ந்திருந்தது. ஆனாலும் அந்த மூன்றுநாட்களும் அவர் முழுமையாகப் பாடுபட்டார். நோய் முற்றிய நிலையில் அவர் அவதிப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் வடகடலில் ஒரு கடற்கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நின்ற இராணுவத்தினருக்கான எரிபொருள் வழங்கலைச் செய்த எரிபொருள் தாங்கிக் கப்பல் மீதே அத்தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் எதிர்பார்த்தது போல் அக்கப்பல் தீப்பிடிக்கவுமில்லை, மூழ்கிப் போகவுமில்லை.

வழமையாக்வென்றால் கேணல் ராயுவிடம் ஓடிவந்து நடந்த சிக்கல்களை ஆராய்ந்து அதற்குரிய மாற்றுத் திட்டங்களை அறிந்துகொள்வார்கள். ஆனால் இப்போது அவரின் உடல்நிலை மிகமிக மோசமாக இருந்தது.

இந்நிலையில் எப்படி அவரைப் போய்க் கரைச்சல் படுத்துவது என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை நினைத்தார். ஆனாலும் தாக்குதல் பிசகியதைக் கேள்விப்பட்ட கேணல் ராயு நேரடியாக தளபதி சூசையையும் தொடர்புடைய மற்றப் போராளிகளையும் அழைத்து விடயத்தைக் கேட்டறிந்தார். படுத்த படுக்கையில் இருந்தும்கூட அக்கப்பலை மூழ்கடிப்பதற்கான வெடிபொருள் நுட்பம் பற்றிய ஆலோசனையைக் கடற்புலிகளுக்குச் சொல்லிக் கொடுத்தார். பின்னாளில் அவர் சொல்லிக் கொடுத்த அந்த நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு கடற்கரும்புலித் தாக்குதல் மூலம் படையினரின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

பின்னாளில் அவரின் பெயரிலேயே தலைவரால் உருவாக்கப்பட்ட ‘கேணல் ராயு படைய அறிவியல் தொழிநுட்ப ஆய்வு நிறுவன’ப் பொறுப்பாளர்களில் ஒருவரிடம் தலைவர் சொன்ன வார்த்தைகள் ‘நீங்கள் அனைவரும் சேர்ந்தாவது ராயுவின் இடத்தினை நிரப்ப முயற்சிக்க வேண்டும்’.

ஆம்! அவரின் இழப்பு ஒருவரால் மட்டும் ஈடுசெய்யப்பட முடியாததுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## எப்-1 கீயை அழுத்த வேண்டாம் மைக்கிறோ சொப்ட் எச்சரிக்கை!




ஏதேனும் இணையதளம் ஒன்றினைப் பார்க்கையில், அதில் எப்-1 கீயை அழுத்தவும் என்று செய்தி தரப்பட்டுள்ளதா? உடனே அதனை அழுத்த வேண்டாம் என மைக்ரோசொப்ட் நிறுவனம் எச்சரிக்கை வழங்கியுள்ளது. இதன் மூலம் பல இணையத் தளங்கள், கொம்பியூட்டர் பயன்படுத்துவோரை மோசமான தளங்களுக்கு இழுத்துச் சென்று, அவர்கள் கொம்பியூட்டரில் பெர்சனல் தகவல்களைத் திருடும் புரோகிராம்களைப் பதிக்கின்றன. இதனால் தங்கள் கொம்பியூட்டர்களில் உள்ள செக்யூரிட்டி சிஸ்டம் செட்டிங்குகளில், அவற்றை "high" என்ற அளவில் அமைக்குமாறும் மைக்ரோசாப்ட் கேட்டுக்கொண்டுள்ளது. இதன் மூலம் ActiveX Controls மற்றும் Active Scripting ஆகியவற்றைத் தடை செய்திட முடியும். இந்த மால்வேர் பெரும்பாலும் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரைப் பயன்படுத்துவோரையே இலக்காகக் கொண்டு இயங்குவதாகவும் மைக்ரோசாப்ட் எச்சரித்துள்ளது. விண்டோஸ் 2000, விண்டோஸ் எக்ஸ்பி மற்றும் விண்டோஸ் சர்வர் 2003 ஆகியவற்றைப் பயன்படுத்துவோரே இதற்கு இலக்காகுகின்றனர்.

இந்த மால்வேர் பாதித்த கொம்ப்யூட்டரில், இணையத் தளங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில் எப்-1 அழுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அழுத்தியவுடன் கம்ப்யூட்டர் ஹைஜாக் செய்யப்பட்டு, மால்வேர் புரோகிராம் பதியப்படுகிறது. இதற்கு மைக்ரோசாப்ட் நிறுவனம் தீர்வு ஒன்றை வழங்கியுள்ளது. லிங்க் தரப்பட்டாலோ, அல்லது பாப் அப் விண்டோ வந்தாலோ, உடனே CTRL+ALT+DEL கீகளை அழுத்தவும். உடனே கிடைக்கும் கட்டத்தில் Internet Explorer task என்ற பிரிவு அல்லது உங்கள் பிரவுசர் பிரிவினைத் தேர்ந்தெடுத்து டிலீட் கீயினை அழுத்தவும். பின் மீண்டும் பிரவுசரை இயக்கிப் பார்த்துக்கொள்ளலாம்.

## செல்போன் வாங்க ஆலோசனை சொல்லும் இணையதளம்




எதை எடுப்பது எதை விடுப்பது என்ற குழப்பம் ஆடைகளில் மட்டுமல்ல இப்போது புதிதாக செல்போன் வாங்கச்சென்றாலும் எந்த மாதிரியை வாங்குவது என்ற குழப்பம் ஏற்பட்டு விடும். அதிலும் பிரபல நிறுவனங்கள் புதுப்புது மாதிரியை அறிமுகம் செய்வது போதாது என்று புதுப்புது நிறுவனங்கள் அறிமுகமாகி புதிய போன்களை சந்தையில் நிறைத்து வருகின்றன.

எனவே புதிதாக போன் வாங்கச்செல்லும் போது எந்த போனை வாங்கலாம் என்ற குழப்பம் ஏற்படுவது நிச்சயம். இந்த குழப்பத்தில் இருந்து தெளிவுபெற இண்டெர்நெட்டில் பல்வேறு போன்களை பார்த்து அவற்றின் விலை மற்றும் அம்சங்களை அலசிப்பார்த்து கொள்ளலாம். இதைவிட சுலபமான வழி ஒன்று இருக்கிறது. அது நேராக போன்கரி இணயத்தளத்திற்கு செல்வது தான். இந்தத் தளம் உங்களுக்கு ஏற்ற புதிய போன் எது என்று தேர்வு செய்து கொள்ள வழி காட்டுகிறது. இந்தத் தளத்தில் நுழைந்ததும் உங்கள்: பட்ஜெட்டை குறிப்பிட்டு விட்டு போனில் நீங்கள் எதிர்பார்க்கும் அம்சங்கள் எவை என்பதை குறிப்பிட வேண்டும். எல்லாவற்றுக்கும் தனித்தனி கட்டங்கள் இருப்பதால் அவற்றில் இருந்து தேர்வு செய்தாலே போதும்.

டச் ஸ்கிரீன் தேவையா?, மீயூசிக் பிளேயர் தேவையா?, கீபோர்டு எப்படி இருக்கவேண்டும்? என்று குறிப்பிட்ட பின் கிளிக் செய்தால் பொருத்தமான போனை அடையாளம் காட்டும். அதன் பிறகு அந்தக் குறிப்பிட்ட ரகம் பற்றி படித்துவிட்டு அதே போன்ற மற்றய போன்களோடு திறன் விலையையும் ஒப்பிட்டு பார்த்து எது திருப்தி அளிக்கிறதோ அதனை தேர்வு செய்யலாம்.

மிகவும் எளிமையான நான்கே படிகளில் பொருத்தமான போனை தேர்வு செய்து விடலாம் என்று போன்கரி உறுதி அளிக்கிறது. ஜி.எஸ்.எம் போன்கள் மட்டுமே இந்தத் தளத்தில் இடம்பெற்றுள்ளன. சி.டி.எம் போன்கள் இல்லை. அதேபோல இரண்டு ஆண்டுக்கு மேல் பழமையான போன்கள் இல்லை. அந்த போன்கள் காலாவதியாகி போய் கடைகளில் இல்லாத நிலையும் இருக்கலாம் என்பதால் இப்படியாம்.

நேராகக் குறிப்பிட்ட ரக போன் பெயரை குறிப்பிட்டு அதனைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் வசதியும் உள்ளது. போன்களின் பட்டியலை கிளீக் செய்து அவை பற்றியும் ஆராய்ந்து பார்க்கலாம்.

இந்திய நுகர்வோருக்கு செல்போன் வாங்க வழி காட்டும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளதாக இந்தத் தளம் தன்னைப்பற்றி குறிப்பிடுகிறது. மற்றய போன் தளங்களை விட எளிமையானது. சிறந்ததும் கூட.

http://www.phonecurry.com/

# தொழில்நுட்பம்

## இணையப் பயன்பாடு
## சில சுவாரசிமான தகவல்கள்

உலகில் மொத்தம் 180 கோடிப் பேர் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். இதில் 32 நாடுகளில் ஒரு கோடிக்கும் மேல் இணையப் பயனாளர்கள் உள்ளனர். இந்த வரிசையில் முதல் பத்து நாடுகளில் உள்ளவர்களின் எண்ணிக்கை 117 கோடி. அதாவது உலக இணையப் பயனாளர்களில் 65% பேர் இந்த பத்து நாடுகளில் உள்ளனர். அடுத்த பத்து நாடுகளையும் சேர்த்து, 20 நாடுகளில் உள்ள இணையப் பயனாளர் எண்ணிக்கை 147 கோடி. அதாவது மொத்தத்தில் 82%. சீனாவும் அமெரிக்காவும் இணைந்து, முதல் 15 இடங்களில் உள்ள நாட்டின் பயனாளர்களில் பாதிப்பேர் எண்ணிக்கையைக் கொண்டுள்ளன.

ஒரு நாட்டின் மக்கள் தொகை அடிப்படையில், அதிக எண்ணிக்கையில் இன்டர்நெட்டினைப் பயன்படுத்துவோர் உள்ள நாடுகளில் முதல் இடத்தினை பிரிட்டன் (82.5%) கொண்டுள்ளது. அடுத்தது தென் கொரியா (81.1%) மூன்றாவதாக ஜெர்மனி (79.1%), ஜப்பான் 78.2% மக்களுடன் அடுத்த இடத்தில் உள்ளது. அமெரிக்க மக்களின் எண்ணிக்கையில் 76.3% பேர் இன்டர்நெட் பயன்படுத்துகின்றனர்.

முதல் 20 நாடுகளில், 7 நாடுகள் (35%) ஆசியாவைச் சேர்ந்தவை. ஐந்து நாடுகள் ஐரோப்பாவைச் சேர்ந்தவை. முதல் 20ல் ஆங்கிலம் பயன்படுத்தப்படும் நாடுகள் மூன்று. இந்தியாவையும் சேர்த்தால் நான்கு. அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் பிரிட்டனில் ஏற்கனவே இன்டர்நெட் பயன்பாடு ஏறத்தாழ அதிகபட்சம் உள்ளதால், அடுத்த வளர்ச்சி, சீனா, பிரேசில், இந்தியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் மற்றும் ரஷ்யாவில் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்தியா பற்றிப் பார்ப்போமா! இந்தியாவில் பத்து ஆண்டுகளுக்குச் சற்று முன்னர் தான் இன்டர்நெட் தொடங்கியது. 1995ல் தான் விதேஷ் சஞ்சார் நிகாம் என்னும் பொதுத்துறை நிறுவனம் மூலம் இன்டர்நெட் மக்களுக்கு வழங்கப்பட்டது. 1998ல் இந்தியா இதற்கான கொள்கை முடிவை அறிவித்துத் தனியார்களும் இன்டர்நெட் சேவை வழங்க அனுமதித்தது. இன்றைக்கு இந்திய மக்கள் தொகை 120 கோடி. இதில் இன்டர்நெட் பயன்படுத்துபவர்கள் 8 கோடியே பத்து லட்சம்.

அமெரிக்கப் பத்திரிக்கை ஒன்றில் ஒரு செய்தி வந்தது. அமெரிக்கர்கள் இன்டர் நெட்டைக் கண்டு பிடித்தார்கள். ஜப்பானியர்கள் அதைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டார்கள் என்று. ஓடியது மட்டுமல்ல, அதில் பல அதிசயத்தக்க மாற்றங்களையும் கொண்டு வந்தனர். இன்று உலகில் 7.8 Mbps வேகத்தில் இணைய இணைப்பினைக் கொடுக்கும் மூன்று நாடுகளில் ஜப்பானும் ஒன்று. மிகவும் குறைந்த கட்டணத்தில் அதிக டேட்டா வேகத்தைத் தரும் நாடாக ஜப்பான் உள்ளது. மிகப் பெரிய திரை, துல்லியமான படங்கள், ஒலியின் தன்மை எனப் பல பிரிவுகளில் அமெரிக்கர்களை, ஜப்பான் மிஞ்சி விட்டது. ஜப்பான் மக்கள் தொகை 12.68 கோடி. இன்டர்நெட் பயன்படுத்துபவர்கள் 9.91 கோடி.

**WORLD INTERNET USAGE AND POPULATION STATISTICS**

| World Regions | Population (2010 Est.) | Internet Users Dec. 31, 2000 | Internet Users Latest Data | Penetration (% Population) | Growth 2000-2010 | Users % of Table |
|---|---|---|---|---|---|---|
| Africa | 1,013,779,050 | 4,514,400 | 110,931,700 | 10.9 % | 2,357.3 % | 5.6 % |
| Asia | 3,834,792,852 | 114,304,000 | 825,094,396 | 21.5 % | 621.8 % | 42.0 % |
| Europe | 813,319,511 | 105,096,093 | 475,069,448 | 58.4 % | 352.0 % | 24.2 % |
| Middle East | 212,336,924 | 3,284,800 | 63,240,946 | 29.8 % | 1,825.3 % | 3.2 % |
| North America | 344,124,450 | 108,096,800 | 266,224,500 | 77.4 % | 146.3 % | 13.5 % |
| Latin America/Caribbean | 592,556,972 | 18,068,919 | 204,689,836 | 34.5 % | 1,032.8 % | 10.4 % |
| Oceania / Australia | 34,700,201 | 7,620,480 | 21,263,990 | 61.3 % | 179.0 % | 1.1 % |
| WORLD TOTAL | 6,845,609,960 | 360,985,492 | 1,966,514,816 | 28.7 % | 444.8 % | 100.0 % |

NOTES: (1) Internet Usage and World Population Statistics are for June 30, 2010. (2) CLICK on each world region name for detailed regional usage information. (3) Demographic (Population) numbers are based on data from the US Census Bureau. (4) Internet usage information comes from data published by Nielsen Online, by the International Telecommunications Union, by GfK, local Regulators and other reliable sources. (5) For definitions, disclaimer, and navigation help, please refer to the Site Surfing Guide. (6) Information in this site may be cited, giving the due credit to www.internetworldstats.com. Copyright © 2000 - 2010, Miniwatts Marketing Group. All rights reserved worldwide.



www.tamilarangam.net



# வணிகம்

## மெகஃபி நிறுவனத்தை வாங்குகிறது இன்டெல்

சர்வதேச அளவில் அன்டிவைரஸ் சொப்ட்வேர் தொழில்நுட்பத்தில் முன்னணி நிறுவனமான விளங்கும் மெகஃபி நிறுவனத்தை, மைக்ரோசிப் தயாரிப்பில் முன்னணியில் உள்ள இன்டெல் நிறுவனம் வாங்கத் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக, இரு நிறுவனங்களும் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் 'தங்களது இந்த முயற்சி வரவேற்கத்தக்கது என்றும், இதன் மூலம், இன்டெல் கோர்ப்பரேசன் நிறுவனம், இணையதள சந்தையில், தனது சேவையை விஸ்தரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இந்த மெகஃபி நிறுவனத்தை வாங்குவதன் மூலம், வாடிக்கையாளர்கள், பல புதுமைகளை அனுபவிப்பார்கள் என்பதில் துளியும் சந்தேகமில்லை என்றும், அன்டிவைரஸ் சொப்ட்வேர் தொழில்நுட்பத்தை மொபைல்போன், தொலைக்காட்சி, கார்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களில் பயன்படுத்துமளவிற்குண்டான தொழில்நுட்பத்தை உருவாக்க இருப்பதாகவும்' தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்டெல் கோர்ப்பரேசன் நிறுவனம், மெகஃபி நிறுவனத்தை 7.68 பில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்குவது குறிப்பிடத்தக்கது.

## லைக் டொட் கொம் நிறுவனத்தை வாங்குகிறது கூகுள்




கூகுள் நிறுவனம், விசுவல் சேர்ச் தொழிநுட்பத்தில் முன்னணியில் உள்ள லைக் டொட் கொம் நிறுவனத்தை வாங்க தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக, கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தங்கள் நிறுவனம், விசுவல் சேர்ச், இ-கொமர்ஸ் துறைகளிலும் தடம்பதிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்காகவே, 'லைக் டொட் கொம்' நிறுவனத்தை கையகப்படுத்தத் தீர்மானித்திருப்பதாகவும், 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான இந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை, கடந்த 2005ம் ஆண்டில் துவங்கி நடைபெற்று வருவதாகவும், இத்திட்டம் வெற்றிபெறும் பட்சத்தில், வரும் டிசம்பர் மாதத்திற்குள், மொபைல்போன்களில் விசுவல் சேர்ச் அப்ளிகேசன் சேவையை வழங்குவதற்கு கூகுள் முடிவெடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த ஏப்ரல் மாதத்தில், இங்கிலாந்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பிங்க் நிறுவனத்தை, மொபைல் விசுவல் சேர்ச் சேவைக்காக, கூகுள் நிறுவனம் விலைக்கு வாங்கியது குறிப்பிடத்தக்கது.

## டேட்டாகாஷ் நிறுவனத்தை வாங்குகிறது மாஸ்டர்கார்ட்

வர்த்தகத்தை விரிவுபடுத்தும் பொருட்டு, பிரிட்டிஷ் பேமெண்ட் சர்வீஸ் புரோவைடிங் நிறுவனமான டேட்டாகாஷ் நிறுவனத்தை வாங்க இருப்பதாக மாஸ்டர் கார்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, ஊடகங்களுக்கு கருத்துரைத்த மாஸ்டர் கார்ட் நிறுவன உயர் அதிகாரி அஜய் பாங்கா, இதுதொடர்பான பேச்சுவார்த்தை ஏற்கனவே துவங்கி நடைபெற்று வருவதாகவும், 520 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்தத் திட்டத்திற்கான பேச்சுவார்த்தை அக்டோபரில் முடியும் என்று நம்பப்படுவதாகத் தெரிவித்தார்.

டேட்டாகேஷ் நிறுவனத்தை வாங்குவதன் மூலம், ஆசியா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தங்கள் நிறுவனம், வர்த்தகத்தை விரிவுபடுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்

## அடுத்த மாதம் இன்னொரு 'அடி' விழும்!

### அமெரிக்க பொருளாதாரம் குறித்து அடுத்த அபாய எச்சரிக்கை

அடுத்த மாதம் நிச்சயம் அமெரிக்கப் பொருளாதாரம் பலத்த அடியைச் சந்திக்கும் என்கிறார் அமெரிக்க பொருளாதார நிபுணர் ஜின் மெக்கா.

இந்த வீழ்ச்சிக்கு 'ஹிண்டன்பர்க் பயங்கரம்' எனப் பெயரிட்டிருக்கிறார் ஜின் மெய்க்கா. அமெரிக்க மார்க்கெட் வீழ்ச்சி எப்படி சாத்தியம் என்று தெரிந்து கொள்ளுமுன் ஹிண்டன்பர்க் பயங்கரம் பற்றி...

ஹிண்டன்பர்க் என்பது ஹிட்லர் காலத்தில் ஜெர்மனியில் தயாரான விமானம். 1936-ம் ஆண்டு முதல் அமெரிக்காவுக்கும் ஜெர்மனிக்கும் பயணிகள் சேவையைத் துவங்கியது. முதல் ஆண்டு வெற்றிகரமாக சேவையைப் பூர்த்தி செய்த இந்த விமானம், 1937-ம் ஆண்டு நியூஜெர்ஸியின் லேக்கர்ஸ்ட் கடற்படைத் தளத்தில் தரையிறங்கும்போது வெடித்துச் சிதறியது. இதில் 36 பேர் உயிரிழந்தனர். அந்த சமயத்தில் பெரும் அதிர்ச்சியைத் ஏற்படுத்திய விமான விபத்து இது. தரையிறங்குவதற்கு மிக சமீபத்தில் விமானம் வந்தபோது யாரும் எதிர்பார்க்காத விதத்தில் வெடித்தது ஹிண்டன்பர்க். இதற்கான சரியான காரணத்தை யாரும் இதுவரை கூறவில்லை.

இப்போது சாதாரணமாகத் தெரியும் அமெரிக்கப் பொருளாதாரத்துக்கும் இதுபோன்ற பெரும் விபத்து நேரும் வாய்ப்பு அதிகம் என்கிறார் ஜிம் மெக்கா.

அமெரிக்க பங்குச் சந்தை மற்றும் பொருளியல் நிலவரங்களை, பல்வேறு கணக்கீடுகளின் அடிப்படையில் ஆய்வு செய்ததில், இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பெரும் வீழ்ச்சியை அமெரிக்க பங்குச் சந்தையும், பொருளாதாரமும் சந்திக்கும் என்பதை உறுதி செய்துள்ளார் ஜிம்.

கடந்த சில மாதங்களாகவே அமெரிக்க பங்குச் சந்தை பெரும் ஊசலாட்டத்தைச் சந்தித்து வருகிறது. கடந்த வாரம் அமெரிக்காவின் 92 நிறுவனங்களின் பங்குகள் 52 வார உச்சக்கட்ட விலைக்குக் கைமாறின. அதேபோல 81 நிறுவனங்கள் இதுவரை காணாத பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தன.

மெக்லீன் ஆஸிலேட்டர் (பங்குச் சந்தைப்போக்கைக் கணிக்கும் முறை) முறையில் பங்குச் சந்தை போக்குகள் அடுத்த சில மாதங்களுக்கு மிக மோசமாகவே இருப்பதாகவும், இந்த மோசமான போக்கின் துவக்கம் செப்டம்பர் மாதம் என்றும் ஜிம் தெரிவித்துள்ளார்.

பொருளியல் வீழ்ச்சியோ வளர்ச்சியோ, இதுவரை ஜிம் கணித்துச் சொன்ன எதுவும் பொய்யானதில்லை என்பதால், இந்த முறை அவர் கூறியிருப்பதை சாதாரணமாக எடுத்துக்கொள்ள அமெரிக்கர்கள் விரும்பவில்லை.

## இந்திய திரைப்பட தொழிலுக்கு 1 பில்லியன் டொலர் இழப்பு




திருட்டு சி.டி.க்கள், டிவி.டிக்களாலும் அதனைத் தயாரித்து விற்பனை செய்யும் கும்பல்களாலும் இந்தியத் திரைபடத் தொழிலுக்கு ஆண்டுதோறும் 1 பில்லியன் டொலர் அளவுக்கு இழப்பு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் 20 மில்லியன் டி.வி.டி.க்கள் உண்மையானவையாக அனுமதிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் திருட்டு டி.வி.டிக்கள் 600 மில்லியன் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டு இந்திய சினிமா தொழிலிலுக்கு பெரும் நஷ்டத்தினை ஏற்படுத்துகின்றன.

இது குறித்து மௌசர் பியர் என்டர்டெய்மென்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி ஹரீஸ் தையானி கூறுகையில் இந்தியாவில் மொத்தம் 20 மில்லியன் டி.வி.டி.க்கள்தான் சட்டபூர்வ அந்தஸ்துடன் விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால் திருட்டுத்தனமாக 600 மில்லியன் டி.வி.டிக்கள் விற்கப்படுகின்றன. இந்த திருட்டு டி.வி.டி.க்களில் சுமார் 5 திரைப்படங்கள் பார்க்கும் வகையில் உள்ளனவாக இருப்பதே இதற்கு காரணம். இவற்றின் விலையும் மலிவு என அவர் தெரிவித்துள்ளார்.

## டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் நிறுவனத்தை வாங்குகிறது இன்டெல் கோர்ப்பரேஷன்

சர்வதேச அளவில் மிகப்பெரிய மற்றும் முன்னணி செமிகண்டெக்டர் சிப் தயாரிப்பு நிறுவனமான இன்டெல் கோர்ப்பரேஷன் நிறுவனம், கேபிள் மோடம் தயாரிப்பில் முன்னணியில் உள்ள டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் நிறுவனத்தை விலைக்கு வாங்க தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக இன்டெல் கோர்ப்பரேஷன் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் 'டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் நிறுவனத்தை வாங்குவது குறித்து, அந்நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இத்திட்டம் வெற்றியடையும் பட்சத்தில் இரு நிறுவனங்களும் இணைந்து 'செட் டாப் பொக்ஸ்' உள்ளிட்ட எலெக்ட்ரானிக்ஸ் சாதனங்களை வெளியிட்டு, கேபிள் தொழில்நுட்பத்தில் புதிய சகாப்தம் படைக்கத் திட்டமிட்டுள்ளதாக' தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(21-ம் பக்கத் தொடர்ச்சி)

## தோழர்களின்...

ளாகவும் உருமாறுகின்றது. பொருளாதார வல்லுநர்களை அதிசயிக்க வைக்கும் 'வளர்ச்சி விகிதமாக' உருமாறுகின்றது. போரிடுவதற்குப் பயன்படும் படைக் கலன்களாகவும் உருமாறுகின்றது.

இச்சிறு போராளிகள் ஒவ்வொருவரும் ஒன்றரை மணி நேரம் இப்பகுதியைக் காவல் காக்கவேண்டும். அப்படிக் காப்பதற்காகச் சுற்றி நடந்துகொண்டிருப்பவர்களைத் தவிர ஏனையோர் உறக்கத்தில் ஆழ்ந்துள்ளனர். அப்பாடா, இப்போது நான் விண்மீன்களைப் பார்க்கலாம். நான் மீனாச்சல் ஆற்றங்கரையில் வளர்ந்தேன். அந்தி நேரத்தில் தோன்றும் சில்வண்டுகளின் இரைச்சல், விண் மீன்கள் தாம் ஒளியுமிழத் தொடங்குமுன் ஏற்படுத்தும் ஓசை என்று அந்தக் குழந்தைப் பருவத்தில் நான் நினைத்திருந்தேன். இங்கு இருப்பது எனக்கு இந்த அளவு விருப்பமாக உள்ளதை எண்ணுகையில் எனக்கு வியப்பு மேலிடுகிறது. உலகில் வேறெந்த இடத்திலும் இருப்பதைவிட இங்கிருப்பதுதான் பிடித்திருக்கிறது. இன்றிரவு நான் யாராக இருக்கவேண்டும்? விண்மீன் ஒளியில் உள்ள காம்ரேய்ட் ராகேல்? அக்கா ஒருவேளை நாளை வரக் கூடும்.

பிற்பகலின் தொடக்கத்தில் அவர்கள் வந்தார்கள். தொலைவிலிருந்தே அவர்களைப் பார்க்கமுடிந்தது. சுமார் 15 பேர் இருப்பார்கள். அனைவரும் ஆலிவ் பச்சை வண்ணச் சீருடை அணிந்திருந்தனர். எங்களை நோக்கி ஓடிவந்தனர். அவர்களுடைய ஓட்டத்தைப் பார்த்தாலே அவர்கள் வலுமிக்கவர்கள் என்பதைக் கணிக்கமுடிந்தது. மக்கள் விடுதலைக்கான கெரில்லாப் படையினர் (மவிகெப). இவர்களைக் குறிவைத்துத்தான் செறிவூட்டப்பட்ட ஒளிக்கற்றைத் தொழில்நுட்பத்தில் இயங்கும் இடைவெளிகாண் கருவிகளும் உடல் சூட்டினைக் கொண்டு (பதுங்கியிருக்கும்) மனிதர்களைக் காண உதவும் கருவிகளும் இயங்குகின்றன. யாருக்காகக் காட்டுப் போர்முறைப் பயிற்சிப் பள்ளி நடத்தப்படுகிறதோ அவர்கள்தான் இவர்கள்.

அவர்கள் முறையான துப்பாக்கிகளை வைத்துள்ளனர். அவர்களுடைய தலைவர் தோழர் மாதவ். அவர் தன் ஒன்பதாவது அகவையில் கட்சியில் சேர்ந்தார். ஆந்திர மாநிலம் வாரங்கல் பகுதியைச் சேர்ந்தவர். அவர் அமைதியிழந்து வருத்தத்துடன் இருக்கிறார். தங்களுக்குள் தக்வல் தொடர்பில் தவறு நேர்ந்துவிட்டது என்று மீண்டும் மீண்டும் சொன்னார். இப்படி ஒரு போதும் ஆனதில்லை. நான் முதல் நாளிரவே அவர்களுடைய முதன்மை இடத்திற்கு வந்திருக்கவேண்டும். என்னை அழைத்து வருவதற்காகப் பணியமர்த்தப்பட்ட சங்கிலி ஓட்டத் தொடரில் கலந்துகொண்ட பலரில் யாரோ ஒருவர் தன் பணியைச் சரியாகச் செய்யவில்லை. மோட்டர் பைக்கில் நான் வேறோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும். 'நாங்கள் உங்களைக் காக்க வைத்துவிட்டோம். வெகு தொலைவு நடக்கவைத்துவிட்டோம். நீங்கள் இங்கு இருப்பதறிந்தவுடன் நாங்கள் எம்மிடத்திலிருந்து ஓடோடி வந்தோம்.' பரவாயில்லை, காத்திருத்தல், நடத்தல், நீங்கள் அனைவரும் சொல்வதைக் கவனித்துக் கேட்டல் ஆகிய அனைத்துக்கும் அணியமாகத்தான் புறப்பட வேண்டும் என்றும் அவர்கள் அவசரப்பட்டார்கள்.

சில மணி நேரங்கள் நடந்தபின் கூடாரத்தை அடைந்தோம். அப்போது இருட்டத்தொடங்கிவிட்டது. பல அடுக்குப் பாதுகாப்பு வளையங்களைத் தாண்டித்தான் கூடாரத்தை அடைந்தோம். இரண்டு வரிசைகளில் சுமார் நூறு தோழர்கள் அணிவகுத்து நின்றனர். ஒவ்வொருவரிடமும் படைக்கலன் இருந்தது. புன்முறுவலும் இருந்தது. அவர்கள் பாடத்தொடங்கினார்கள். இப்போது வந்துள்ள தோழர்களுக்குச் செவ்வணக்கம். ஏதோவொரு ஆறு அல்லது பூத்துக் குலுங்கும் காட்டு மலர்க் குவியலைப் பற்றிய நாட்டுப்புறப் பாடலைப் போல இனிமையாக அதைப் பாடுகின்றனர். பாட்டு, செவ்வணக்கம், கை குலுக்கல், மடக்கிய கைமுட்டி ஆகிய அனைத்தும் ஒருசேர இருந்தன. ஒவ்வொருவரும் மற்ற அனைவருக்கும் வணக்கம் சொல்கின்றனர். செவ்வணக்கம், செவ்வணக்கம்... என்ற முணுமுணுப்பு எங்கும் பரவியுள்ளது.

சுமார் 15 சதுர அடிப் பரப்புள்ள பெரிய நீல நிறச் சிலி (பாய்) தரையில் பரப்பப்பட்டுள்ளது. அதைத் தவிர இந்த இடத்தைக் கூடாரம் என்று சொல்வதற்கான வேறு அறிகுறிகள் எவையும் இங்கு இல்லை. இதன் கூரையும் ஒரு சிலியினால் ஆனதே. இதுதான் இன்று இரவு என் அறை. இது, நான் கடந்த சில நாட்கள் நடந்துவந்ததற்குக் கிடைத்த ஊதியமா அல்லது இனி வரப்போவதைத் தாங்கிக் கொள்வதற்காகச் செய்து தரப்பட்டுள்ள வசதியா என்பது தெரியவில்லை. இந்த இரண்டு காரணங்களுக்காகவுமே இருக்கலாம். எப்படியாகினும் இந்தப் பயணத்தில் ஒரு கூரைக்கடியில் தங்குவதற்குக் கிடைத்த இறுதி வாய்ப்பாக இது அமைந்தது.

(பயணம் அடுத்தவாரம் தொடரும்...)

## இலக்கியம்

# உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு வேண்டாம்....

தமிழினம் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது. இந்த நீண்ட நெடிய வரலாற்று ஓட்டத்தில் அது பல எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் சந்தித்திருக்கிறது. உலகின் வளர்ச்சி பெற்ற ஏனைய தொன்மையான இனங்களுக்குரிய அனைத்து தகமையும் தமிழ் இனத்துக்கும் தமிழ் மொழிக்கும் இருந்தும் அது இன்னமும் ஆளப்படும் இனமாக தன்னுடைய தனித்துவத்தை நிலைநிறுத்த முடியாமல் நசுக்கப்படும் இனமாகவே இருந்துகொண்டிருக்கிறது.

தமிழினம் இவ்வாறு சிறுமைப்பட்டுப்போய் கிடப்பதற்கு அதற்குள்ள அந்நிய எதிரிகளைவிட உள்ளுக்குள்ளே புரையோடிப் போயிருக்கும் உட்பகையே காரணமாகும்.

உலகில் உட்பகையால் வீழ்ச்சியுற்ற இனங்கள் என்று பட்டியலிட்டால் அதில் முதலிடத்தில் இருக்கக் கூடியது தமிழினம் என்று சொல்லும் அளவுக்கு அன்றும் சரி இன்றும் சரி தமிழினத்தின் வரலாறு முழுவதும் உட்பூசலும் உட்பகையும் விரவிக்கிடக்கிறது.

2000 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட திருக்குறளில் உட்பகைக்கு தனி ஒரு அதிகாரத்தை உருவாக்கி அதெற்கென பத்து குறள்களை எழுதியிருக்கிறார். காலத்தின் தேவை கருதி அதை இங்கு பிரசுரிக்கிறோம்.

**அதிகாரம் :** உட்பகை

**அதிகார வரிசை :** 89

**குறள் :** 881

நிழல்நீரும் இன்னாத

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

இன்பம் தரும் நிழலும், நீரும் கேடு விளைவிக்கக்கூடியதாக இருந்தால் அவை தீயவை ஆகும். அதுபோலத்தான் உறவினரின் உட்பகையும்.

**குறள் :** 882

வாள்போல பகைவரை

வாள்போல பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

வெளிப்படையாகத் தெரியும் பகைவர்களைவிட உறவாடிக் கெடுக்க நினைப்பவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**குறள் :** 883

உட்பகை அஞ்சித்தற்

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

உட்பகைக்கு அஞ்சி தன்னை பாதுகாத்துக் கொள்ளாதவனை.. அப்பகை பச்சை மண்பாண்டத்தை அறுக்கும் கருவி போல அழித்துவிடும்

**குறள் :** 884

மனமாணா உட்பகை

மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா
ஏதம் பலவும் தரும்.

மனம் திருந்தா உட்பகை உண்டாகுமானால்.. அது அவனைச் சேர்ந்தவர்களையே பகைவராக்கும் கேட்டை உண்டாக்கும்.

**குறள் :** 885

உறல்முறையான் உட்பகை

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும்.

நெருங்கிய உறவுகளிடையே தோன்றும் உட்பகை.. அவர்களுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய துன்பங்களை உண்டாக்கும்.

**குறள் :** 886

ஒன்றாமை ஒன்றியார்

ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

உற்றாரிடம் பகைமை ஏற்படுமானால்.. அதனால் ஏற்படும் அழிவைத் தடுப்பது அரிதான செயலாகும்.

**குறள் :** 887

செப்பின் புணர்ச்சிபோல்

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி.

ஒரு செப்பு சிமிழின் மூடி ஒன்றாக பொருந்தி இருப்பது போல வெளிப்பார்வைக்குத் தெரியும்.. அதுபோல உட்பகை உள்ளவர் ஒன்றாக இருப்பது போலத் தெரிந்தாலும், பொருந்தி இருக்க மாட்டார்கள்.

**குறள் :** 888

அரம்பொருத பொன்போலத்

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி.

அரத்தினால் அறுக்கப்பட்ட இரும்பு வலிமை இழப்பது போல..உட்பகை குலத்தின் வலிமையை குறைத்துவிடும்.

**குறள் :** 889

எட்பக வன்ன

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாங் கேடு.

எள்ளின் பிளவு போன்று சிறியதாக இருந்தாலும்.. உட்பகை குடியைக் கெடுக்கும்.

**குறள் :** 890

உடம்பாடு இலாதவர்

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்குள்
பாம்போடு உடனுறைந் தற்று.

மனதால் உடன்பட்டு இல்லாதவருடன் கூடி வாழ்வது என்பது ஒரு சிறு குடிசையில் பாம்புடன் வாழ்வது போல அச்சம் தருவதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உதைபந்தாட்டம்

# உலகக்கிண்ண குழுநிலை ஆட்ட முறைமைகளில் மாற்றம் வேண்டும்





உலகக்கிண்ண இறுதிச் சுற்றில் குழுநிலை ஆட்டங்கள் சமநிலையில் முடியுமானால், சமநிலை உடைப்புத் தண்டனை உதைமூலம் வெற்றி அணி தீர்மானிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் செப் விலேற்றர் தெரிவித்துள்ளார்.

ஆதிமுதல் இருக்கும் குழுநிலை ஆட்ட முறைமையில் மாற்றம் கொண்டு வருவதன்மூலம் தடுப்பாட்ட சிந்தனையூடாக (Defence-Minded) சமநிலைப் பெறுபேறினைப் பெறும் எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று 'போகஸ்' என்னும் ஜேர்மனிய சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் விலேற்றர் தெரிவித்துள்ளார்.

90 நிமிட ஆட்ட முடிவில் சமநிலை காணப்படுமானால் நேரடியாகவே சமநிலை உடைப்பு தண்டனை உதை வழங்கும் முறை எதிர்வரும் காலங்களில் நடைமுறைப்படுததப்பட வேண்டும். அத்துடன் இரண்டாவது சுற்றில் (Knockout Stage) 90 நிமிட முடிவில் சமநிலை காணப்படுமானால் 1998-ம் ஆண்டு உலகக்கிண்ண இறுதிச்சுற்றில் அறிமுகப்படுத்தப்பட்ட தங்கக்கோல் (Golden Goal) முறையை மீண்டும் நடைமுறைப் படுத்தும் வாய்ப்பினையும் மறுப்பதற்கில்லை என்று கூறியுள்ளார்.

90 நிமிட முடிவில் சமநிலை காணப்பட்டால் வெற்றி அணியைத் தீர்மானிப்பதற்கு மேலதிகமாக வழங்கும் 30 நிமிடத்தில் எந்த அணி கோலை அடிக்கிறதோ அந்த அணி வெற்றி அணியாகக் கருதப்படும் என்பதே அவ்விதிமுறையாகும்.

1998-ம் ஆண்டில் பிரான்சில் நடைபெற்ற உலகக்கிண்ண இறுதிச் சுற்றில் அறிமுகப்படுத்தப்பட்ட தங்கக்கோல் முறை, அடுத்து ஜப்பான், தென்கொரியாவில் நடைபெற்ற உலகக்கிண்ணத்தில் நிறுத்தப்பட்டதற்கு தென் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய உதைபந்தாட்ட முன்னோடிகளே காரணகர்த்தாக்களாக அமைந்தனர்.

அத்தோடு கோல் எல்லை தொழில்நுட்பத்தை மீண்டும் பரீட்சார்த்தமாக மேற்கொள்வது பற்றிய முடிவு ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச உதைபந்தாட்டச் சபையின் (IFAB) கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவுள்ளது.

2014-ம் ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள 20-வது உலகக்கிண்ண இறுதிச் சுற்றில் கடந்தகால தவறுகளிற்கு இடமளிக்க முடியாத வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என உறுதி கூறியுள்ளார்.

மெய்வல்லுனர்


# முதலாவது இளையோர் ஒலிம்பிக்

SINGAPORE 2010
YOUTH OLYMPIC GAMES

முதலாவது இளையோர் ஒலிம்பிக் போட்டி இம்மாதம் 14-ம் திகதி முதல் 26-ம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெற்றது.

சர்வதேச ஒலிம்பிக் சபையில் அங்கம் வகிக்கும் 205 நாடுகளில் குவைத் தவிர ஏனைய 204 நாடுகளைச் சேர்ந்த 3522 வீரர், வீராங்கனைகளின் பங்குபற்றுதலோடு மிகவும் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

26 வகையான விளையாட்டுக்கள் 201 பிரிவுகளாக நடாத்தப்பட்டன.



20,000-இற்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் தமது சேவையினை வழங்கியிருந்தனர்.

கடந்த ஜனவரி மாதம் அரச தலையீட்டின் காரணமாக குவைத் ஒலிம்பிக் குழு தடைசெய்யப்பட்டிருந்தாலும், இரண்டு வீரர்கள் ஒலிம்பிக் கொடியின் கீழ் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

போட்டிகளை நடாத்திய சிங்கப்பூர் அதிகபட்சமாக 129 மெய்வல்லுனர்களையும், அவுஸ்திரேலியா 100 மெய்வல்லுனர்களையும் பங்குபற்ற வைத்திருந்தன.

சீனாவின் ரங்கி நீச்சல் பிரிவுகளில் 6 தங்கப்பதக்கங்கள் பெற்றிருந்தார். சீனா 30 தங்கம், 16 வெள்ளி, 5 வெண்கலம் என 51 பதக்கங்களுடன் முதலாவது இடத்தினையும், ரஷ்யா, தென்கொரியா என்பன முறையே 19, 11 தங்கங்களுடன் 2-ம், 3-ம் இடங்களையும் பெற்றன.

அமெரிக்கா 4 தங்கப் பதக்கங்களையே பெற்றுக்கொண்டது. போட்டியை நடாத்திய சிங்கப்பூர் 2 வெள்ளி, 4 வெண்கலம் என 6 பதக்கங்களைப் பெற்றது.



14 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டோருக்கு இவ் ஒலிம்பிக் போட்டி நடாத்தப்பட்டிருந்தமையால் அதிகளவிலான பெற்றோர்களின் பிரசன்னத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

2014-ம் ஆண்டு 2-வது இளையோர் ஒலிம்பிக் போட்டி சீனாவின் நன்ஜிங்கில் நடைபெறவுள்ளது.

Ris-Orangis நகரில் ஒரு நம்பிக்கை உதயம்
சுபன் SARL
ALIMENTATION GENERALE
...பல் பொருள் வணிபம்
ஆசிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான பொருட்களும் மற்றும் பல தயாரிப்புக்களும் கிடைக்கும்.
மளிகைப் பொருட்கள்
மரக்கறி வகைகள்
குளிரூட்டப்பட்ட கடலுணவு வகைகள்
மற்றும் பல பொருட்கள்
ஒரே இடத்தில்



23-25 Av.Georges Sand - 91130 Ris-Orangis
Tél./Fax: 01 69 43 19 59



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1-ம் பக்கத் தொடர்ச்சி)

## சுதந்திர தமிழீழம்...

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

கடந்த மே மாதம் 17-19 ஆம் நாட்களின்போது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாவது அரசவையின் முதலாவது அமர்வினை அமெரிக்காவின் அரசியலமைப்பு எழுதப்பட்ட, சுதந்திரப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க பிலடெல்பியா மாநகரில் நாம் கூட்டியிருந்தோம். இம்முதல் அமர்வின்போது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனக்கான இடைக்கால நிறைவேற்றுச் சபையினை அமைத்துக் கொண்டதுடன், இடைக்கால முதன்மை நிறைவேற்றுனரையும் தெரிவுசெய்து கொண்டது.

மேலும் இம் முதலமர்வு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கான அரசியல் அமைப்பினை உருவாக்கிக் கொள்வதற்காகவும், உடனடித் தேவைகளையொட்டிய பணிகளை முன்னெடுப்பதற்காகவும் சில செயற்பாட்டுக் குழுக்களை அடையாளம் கண்டு உருவாக்கியிருந்தது.

அரசியல் அமைப்பு விவகாரக் குழு, அரசியல் அமைப்பு உபகுழு, கல்வி, பண்பாடு, உடல்நலம், விளையாட்டுத் துறைகளுக்கான குழு, பொருண்மிய நலன்பேணல் மேம்பாட்டுக்கான குழு, அனைத்துலக ஆதரவு திரட்டலுக்கான குழுவிற்கான புலமையாளர் உபகுழு, ஆதரவுதிரட்டல் உபகுழு, ஊடகங்கள் உபகுழு, இனஒழிப்பு, போர்க்குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கான குழு, பெண்கள், சிறுவர், மூத்தோர் நலன் பேணும் குழு, வர்த்தக மேம்பாட்டுக் குழு, மாவீரர்கள், போராளிகள் குடும்ப நலன் பேணும் குழு, போர்க்கைதிகளை விடுவிப்பதற்கான குழு, இயற்கை வளங்கள் மேம்பாட்டுக் குழு, இடம் பெயர்ந்தோர் ஏதிலிகள் பற்றிய குழு ஆகியவையே இக் குழுக்களாகும்.

நாம் அமைத்துள்ள வெவ்வேறு குழுக்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஒவ்வொரு குழுவுக்கும் ஒருங்குகூட்டுனர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து வேலைத்திட்டங்களுக்கான திட்டமிடல் ஆரம்பிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டு வருகிறது.

இதேவேளையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியலமைப்பு அரசியலமைப்புக் குழுவினால் உருவாக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் அரசியலமைப்பை விவாதித்து ஏற்றுக் கொண்டு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கான நிரந்தரக் கட்டமைப்பை வடிவமைப்பதே இம்மாத இறுதிப் பகுதியில் கூட்டப்படவுள்ள அரசவையின் இரண்டாவது அமர்வின் நோக்கமாகும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது நிரந்தரக் கட்டமைப்பை உருவாக்கும்போது செயற்பாட்டுக் குழுக்கள் அமைச்சுக்களாக வடிவமைக்கப்பட்டு நிரந்தரக் கட்டமைப்புக்களாக்கப்படும். இவ் இரண்டாவது அமர்வு தொடர்பான மேலதிகத் தகவல்களை மக்களுக்கு இயன்ற எவு விரைவில் அறியத் தருவோம்.

இத் தருணத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இடைக்கால முதன்மை நிறைவேற்றுனர் என்ற நிலையில் இருந்து மக்கள் முன்னால் ஒரு சில விடயங்களைத் தெளிவுபடுத்துவது எனது தலையாய கடமையெனக் கருதுகிறேன்.

நாம் எமது அரசியல் பெருவிருப்பான சுதந்திரத் தமிழீழத் தனியரசை அமைப்பதற்கான போராட்டத்தை அரசியல் இராஜதந்திரத் தளத்தில் முன்னெடுப்பதற்காகவே நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்கியுள்ளோம்.

தாயகத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த எழுச்சி மிகுந்த விடுதலைப்போராட்டத்துக்கு உறுதுணையாக நாம் முன்னர் விடுதலைப்பணிகளை மேற்கொண்டு வந்தோம். தற்போது தமிழீழத் தனியரசுக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கான அரசியல் வெளியெதுவும் தாயகத்தில் இல்லாதமையால் புலத்தில் வாழும் தமிழீழ மக்களாகிய நாம் உலகத் தமிழினத்தின் பங்குபற்றுதலுடன், நியாயத்துக்காகவும், ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கக்கூடிய உலக சமூகத்தின் ஆதரவுடன் எமது விடுதலைப் போராட்டத்தை அரசியல் இராஜதந்திரத் தளத்தில் முன்னெடுக்க திடசங்கற்பம் பூண்டுள்ளோம். நமது செயற்பாடுகள் தாயக மக்களின் அரசியல் வெளியையும் அதிகரிக்க உதவும் எனவும் நாம் உறுதியாக நம்புகிறோம்.

எம்மைப் பொறுத்த வரையில் சுதந்திரத் தமிழீழம் ஒரு தோற்கடிக்கப்பட்ட அரசியல் இலக்கு அல்ல. பல்லாயிரக்கணக்கான மாவீரர்களதும் மக்களதும் குருதியாலும் ஈகத்தாலும் உயிர்ப்பூட்டப்பட்ட விடுதலைத்தீ நாம் நமக்கெனத் தமிழீழத் தனியரசினை அமைக்கும் வரை எம் நெஞ்சமெல்லாம் கனன்று கொண்டுதான் இருக்கும். இவ் விடுதலைத்தீயினை அணைத்துவிடுவதற்கு எதிரி பகீரத முயற்சி செய்து வருகின்றமை நாம் அறிந்ததே. எதிரியிடம் இருந்து நம் விடுதலைத் தீயினை பாதுகாப்பதனையும், எமது விடுதலை இலக்கினை முன்னோக்கி நகர்த்துவதனையும் சவால்களாகக் கொண்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது பணிகளை முன்னெடுக்க உறுதி பூண்டுள்ளது.

எமது இரண்டாவது அமர்வில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கான நிரந்தரக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டபின்னர் நமது பணிகள் வேகம் பெறும்.

நாம் அனைவரும் ஒன்றுபட்டு எதிரியிடமிருந்து வரும் சவால்களை முறியடித்து, நமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ள இக் காலகட்டத்தில் நாம் எமக்குள்ளேயே முரண்படுவதும், ஆளுக்காள் அவதூறுச்சேறு வீசுவதும் எதிரிக்குத் துணைபோகும் நடவடிக்கைகளேயன்றி நம் இலட்சியத்துக்கோ அல்லது நமது விடுதலைப்பயணத்துக்கோ எவ்விதத்திலும் உதவும் நடவடிக்கைகள் அல்ல. இந்த அவதூறுகள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மீதும், அதன் இடைக்கால முதன்மை நிறைவேற்றுனராகப் பணிபுரியும் என் மீதும் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்டு விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் தமது சொந்த நலன்கள் சார்ந்து மேற்கொள்ளும் கைங்கரியம் இது என்பதனை நாம் அறிவோம். நாம் அனைவரும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. ஜனநாயக விழுமியங்களில் கருத்துச் சுதந்திரம் முக்கியமானது. ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எமது பணியைச் செழுமைப் படுத்தும். ஆனால் உண்மைக்குப் புறம்பான அபாண்டங்களை உண்மை போல் திருப்பி திருப்பிக் கூறுவதும், மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்திக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முனைவதும் போராட்டத்தின் நலன் சார்ந்த அல்லது மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகள் அல்ல.

> **செப்டெம்பர் மாத இறுதியில் நடைபெறும் இரண்டாது அமர்வில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கான நிரந்தரக் கட்டமைப்பின் நிர்வாகத்தை நாம் தெரிவு செய்யவுள்ளோம். இந்த நேரத்தில், மேற்கூறிய மோசடியான அவதூறுப் பரப்புரை முயற்சிகள் இன்னும் தீவிரமடையவும் கூடும். எனினும் நாம் இந்த மோசமான நடத்தைகளைக் கடந்து ஆரோக்கியமான அரசியற் பண்பாட்டை உருவாக்கியாக வேண்டும்.**

அண்மையில் தமிழீழத்துக்கு எதிராக நான் கருத்துச் சொல்லியுள்ளதாகவும், சிறீலங்கா அரசுக்காகச் செயற்படுவதாகக் கூறியுள்ளதாகவும் அபாண்டங்கள கூறி நான் கதைத்ததாகக் கூறும் ஒலிப்பதிவு உலவ விடப்பட்டு கண்டனங்கள் எழுப்பப்பட்டுள்ளதாக எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இது குறித்து மக்களுக்கு உண்மையினைத் தெளிவுபடுத்த வேண்டியது மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய குழப்பங்களைத் தவிர்க்க அவசியமானது என உணர்கிறோம்.

தமிழ் ஈழம் சாத்தியமானதல்ல என நான் என் வாழ்நாளில் எவருக்கும் கூறவும் இல்லை, நான் அப்படிக் கருதவும் இல்லை. தமிழ் ஈழம் சாத்தியமானது மட்டுமல்ல, அது காலத்தின் தவிர்க்க முடியாத கட்டாயம் என்ற அடிப்படையில் தான் எனது கடந்த கால, தற்போதைய அரசியல் வேலைப்பாடுகள் அமைந்திருந்தன, அமைந்து வருகின்றன.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இலண்டனில் இருந்து கதைப்பதாகக்கூறி சுரேந்திரன் எனும் பெயரில் ஒருவர் என்னுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தார். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஆதரவாளராகத் தன்னை அறிமுகப்படுத்திய இவருடன் நான் மேற்கொண்ட உரையாடல் எனக்குத் தெரியாமலே பதிவு செய்யப்பட்டு, அதனை இடையிடையே வெட்டி ஒட்டி மோசடியான முறையில் திரிபுபடுத்தப்பட்ட கதையொன்று சோடிக்கப்பட்டுள்ளதாக நான் உணர்கிறேன். தமிழீழத்துக்கான போராட்ட வடிவம் மாறியுள்ளமை குறித்தும், எமக்கிடையே நடைபெறும் சேறுபூசும் நடவடிக்கைகள் ஊடாக சிறீலங்கா அரசு செய்யும் வேலைகளை நாமும் செய்கிறோம் என்று கண்டனம் வெளிப்படுத்தியும் நான் தெரிவித்த கருத்துக்களை, கணினி மென்பொருளைப் பயன்படுத்தி உரையாடலின் சில பகுதிகளை நீக்கி, சிலபகுதிகளை வேறு இடத்திலிருந்து வெட்டி ஒட்டி இந்த மோசடியினை இவர்கள் மேற்கொண்டுள்ளனர் என்றே நான் கருதுகிறேன். இத்தகைய ஒரு மோசடி தமிழ்த் தேசியத்தின் பேரிலும் தமிழீழ விடுதலையின் பேரிலும் இடம்பெற்றிருப்பது தமிழர் சமூகத்துக்கு பெரும் வெட்கக் கேடானது. மக்களை ஏமாற்றுவதற்காக வெவ்வேறு மோசடிகளின் ஊடாகப் பொய்க்கதைகளைச் சோடிப்பது கருத்துச் சுதந்திரத்தினையும் மக்களின் அறிவாற்றலையும் அவமதிக்கும் மிகவும் அற்பத்தனமான செயற்பாடாகும்.

நான் முன்னர் கூறியபடி எமது தற்போதைய போராட்டம் ஜனநாயகத்தின் வழியில் முன்னனெடுக்கப்படுவதாகும். ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்களிலொன்று வெளிப்படைத்தன்மை என்பது. எனவே தனிப்பட்டவர்களோ அல்லது அமைப்புக்களோ தம்மை யாரென மக்கள் முன்னிலையில் வெளிப்படுத்தித் தமது கருத்துக்களை, கண்டனங்களை வெளியிடுவதுதான் அரசியல் நாகரீகம். அதுதான் அரசியல் துணிவு மிக்க செயலாகும். இதைவிட இத்தகைய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சில இணையத்தளங்கள் கடந்த காலங்களில் நாடு கடந்த அரசாங்கம் தொடர்பாக எடுத்த நிலைப்பாடுகளை மக்கள் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

செப்டெம்பர் மாத இறுதியில் நடைபெறும் இரண்டாது அமர்வில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கான நிரந்தரக் கட்டமைப்பின் நிர்வாகத்தை நாம் தெரிவு செய்யவுள்ளோம். இந்த நேரத்தில், மேற்கூறிய மோசடியான அவதூறுப் பரப்புரை முயற்சிகள் இன்னும் தீவிரமடையவும் கூடும். எனினும் நாம் இந்த மோசமான நடத்தைகளைக் கடந்து ஆரோக்கியமான அரசியற் பண்பாட்டை உருவாக்கியாக வேண்டும். இதனால் இத்தகைய அவதூறுச் சேறுவீசல்களை புறம் தள்ளி ஒதுக்கிவிட்டு நாம் முன்னோக்கிச் செல்லவே விரும்புகிறோம். இனி வரும் காலங்களில் இத்தகைய அவதூறுகளுக்குப் பதில் அளித்துக் கொண்டிருப்பதனைத் தவிர்த்துக் கொள்ளவும் விரும்புகிறோம். மக்கள் எமது இந்த நிலைப்பாட்டைப் புரிந்து கொள்வார்கள் என நாம் திடமாக நம்புகிறோம்.

நன்றி

**விசுவநாதன் உருத்திரகுமாரன்**

இடைக்கால முதன்மை நிறைவேற்றுனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்கா அரசின் ஊடாகவே இந்திய அரசின் உதவிகள் வழங்கப்படும் – நிருபமா ராவ்

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் இந்தியா அமைத்துக் கொடுக்கவுள்ள 50 ஆயிரம் வீடுகளில் முன்னோடித் திட்டமாக வடக்கில் ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும், இதற்கான மாதிரி வீட்டு வடிவம் முடிவுசெய்யப்பட்டு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இந்திய வெளியுறவு செயலர் நிருபமா ராவ் வவுனியாவில் தெரிவித்துள்ளார்.

வவுனியா மெனிக்பாம் முகாமுக்கு விஜயம் செய்த நிருபமாராவ் தலைமையிலான இந்தியத் தூதுக்குழுவினர், வன்னிமாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் உள்ளிட்ட குழுவினரை சந்தித்தன் பின்னர் வவுனியா செயலகத்தில் வவுனியா அரசாங்க அதிபருடன் கலந்துரையாடிவிட்டு மகிழுங்குளம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் பார்வையிட்டனர்.

அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்குப் புறப்படுவதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசிய நிருபமாராவ் இந்தியா இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்கும் போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியின் பல்வேறு வேலைத்திட்டங்களுக்கும் உதவுவதற்கு முன்வந்துள்ளதாகவும் இந்த உதவிகள் யாவும் இலங்கை அரசாங்கத்தின் ஊடாகவே செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

‘நாங்கள் மனிக்பாம் முகாமுக்குச் சென்று அங்குள்ள பொதுமக்கள் சிலரைச் சந்தித்து அவர்களுடன் பேசினோம். எங்களுடன் வடமாகாண ஆளுனர் சந்திரசிறியும் வந்திருந்தார். மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து அவர் பல தகவல்களைத் தெரிவித்தார். இந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பான இராணுவ உயரதிகாரியும் இங்கு இடம்பெறுகின்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பான பல தகவல்களைத் தெரிவித்தார்.

சுமார் 2 லட்சத்து 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த மனிக்பாம் முகாமில் இப்போது 28 ஆயிரம் பேர் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு மிகுந்த ஆர்வமாக இருக்கின்றார்கள்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்கும் அவர்களது அழிந்த வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கும், வடபகுதியின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும் இந்திய அரசாங்கம் உதவி செய்வதற்கு முன்வந்துள்ளது.

இந்தியா உறுதியளித்துள்ள 50 ஆயிரம் வீடுகள், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் முன்னோடித் திட்டமாக வடக்கில் ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான மாதிரி வீட்டு வடிவத்தை இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இந்தியா முடிவுசெய்துள்ளது.

இதேவேளை, மதவாச்சியில் இருந்து மன்னார் வரையிலான ரயில் பாதையையும், ஓமந்தையில் இருந்து பளை வரையிலான ரயில் பாதையையும் அமைத்துக் கொடுப்பதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக இந்தியா வழங்குகின்ற அனைத்து உதவிகளும் சிறீலங்கா அரசாங்கத்தின் ஊடாகவே வழங்கப்படும்.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனையும், திருமுறிகண்டி பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் பிரதிநிதிகள் சிலரரையும் சந்தித்துப் பேசினோம். திருமுறிகண்டி பகுதி மக்கள் தாங்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதையே விரும்புவதாக எங்களிடம் கூறினார்கள். இதற்கான உதவிகளைச் செய்யுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இதையே நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் கேட்டார்’ என இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவ் தெரிவித்தார்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் – சிவசக்தி ஆனந்தன்

இன்று வன்னி மாவட்டத்தின் ஓமந்தை, சேமமடு ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் நடமாடும் சேவையைப் பார்வையிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இவ்வாறே முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

வாக்களித்த மக்களின் அபிவிருத்தி தொடர்பாக தமது கருத்துக்களை எடுத்துரைப்பதற்குக்கூட சந்தர்ப்பம் மறுக்கப்படுவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மறுக்கப்படுவதையே மேற்படி சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓமந்தை, சேமமடு மக்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெயர்ந்து இப்பொழுதுதான் தமது கிராமங்களில் குடியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களது விடயத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும். நடமாடும் சேவையின்பொழுது நான் இவைகளை நேரில் சென்று உரிய அதிகாரிகளிடம் விளக்கி அம்மகளுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ளலாம் என்றிருந்த வேளையில் எம்மை அழைக்காதது எமக்கு வருத்தமளிப்பதுடன், எமது உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன் என்று தனது ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் சிவசக்தி ஆனந்தன் வெளியிட்டுள்ளார்.














தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

La Chapelle லாச்சப்பல்

# கோபால் அன் கோ வின்

## புதிய அறிமுகம்

NOUVEAU
CARTE SIM


ortel MOBILE

தரம் – நம்பிக்கை

நாணயம் – உத்தரவாதம்

N°1

APPELS INTERNATIONAUX
À partir de
0,08 €
par min.



20€ க்கு recharge ரொப்பப் செய்தால் 3 மணி நேரம் இலவசம்

பிரான்ஸ் – ஜேர்மனி – நெதர்லாந்து – பெல்ஜியம்

Ortel Mobile இல் இருந்து Ortel Mobile க்கு இலவசம்

SRI LANKA - 0,10 €
Mobile - 0,13 €



INDIA - 0,08 €
Mobile - 0,08 €



**GOPAL & CO**
72, Rue Louis Blanc
75010 Paris

Tél: 01 46 07 11 10
Tél: 01 46 07 13 03
Tél: 01 46 07 18 65
Fax: 01 46 07 16 95
Port: 06 79 84 79 63

வர்த்தகர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு




நெக்டோ யானைச் சோடா

1.5 லிட்டர் 1.49€




கோபால் அன் கோ - கோபால் அன் கோ - கோபால் அன் கோ - கோபால் அன் கோ - கோபால் அன் கோ - கோபால் அன் கோ